
2012, August 16 - 31

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்




## கிழக்கில் இருப்புக்கும் இழப்புக்கும் இடையே மோதல்



## ரெசோ சூடு பிடிக்குமா?

## இந்தியா என்ன செய்யப்போகிறது?

- இராமன் இல்லாத இராமாயணம்
- உலகின் அதிவேக மனிதன்



| | | |
|---|---|---|
| INDIA..............IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 150.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |

9 772279 203000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் முழுவதுமுள்ள தமிழர்களுக்கான
பிரத்தியேக திருமணசேவை

THIRUMANAM.LK™
இருமனம் சேர்ந்தால் திருமணம்

இன்றே உங்கள் அங்கத்துவத்தைப் பதிவு செய்து
வாழ்க்கை துணையை தெரிவுசெய்யுங்கள்...

www.thirumanam.lk



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாழ்வின் அழகிய தருணங்களை
மேலும் அழகாக்கிடும்



பத்தே நாட்களில்
வித்தியாசத்தை உணருங்கள்

100% NATURAL

Fadna

X-Tea
பெட்னா X டீ

நாடு முழுவதிலுமுள்ள பாமசிகள் மற்றும் கீல்ஸ், ஆர்ப்பிகோ,
லாப்ஸ் உட்பட அனைத்து சூப்பர் மார்க்கட்டுகளிலும் பெற்றுக்கொள்ள முடியும்

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் Dr.சலீம்-077-6562777 www.fadna.com
Rs.285/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


எமது விருந்தினர்
கலாநிதி குமார் ரூபசிங்க 10

இராமன் இல்லாத இராமாயணம்
கலாநிதி குமார் டேவிட் 12

இந்தியா என்ன செய்யப்போகிறது? 16
என்.சத்தியமூர்த்தி

அரசியல் சீர்திருத்தம்:
புதிய அணுகுமுறை தேவை 21
பி.பி.தேவராஜ்

ரெசோ சூடு பிடிக்குமா? 26
எம்.காசிநாதன்

கிழக்கு தேர்தல்
இருப்பு - இழப்பு - மோதல் 32

காலகண்ணாடி 41
கே.எஸ்.சிவகுமாரன்

டில்லி டயறி 42
எம்.பி.வித்தியாதரன்


செவ்வாயில் கியூரியோசிற்றி 50

உலகின் அதிவேக மனிதன் 54

காலச்சுவடான ஒற்றையடிப் பாதை 58
வ.ஐ.ச.ஜெயபாலன்

காதல்... காமம்... சாதல்...! 62
டாக்டர் எம்.கே.முருகானந்தன்

கடைசி பக்கம் 64
சோ.சந்திரசேகரன்







16



42



58



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

2012, ஆகஸ்ட் 16-31




26



21



50



32




12




54



03

ஆசிரியரிடமிருந்து...

## உற்சாகம் தரும் கருத்துக்கள்

உங்கள் கையில் தவழுவது சமகாலத்தின் நாலாவது இதழ். இலங்கைத் தமிழ் இதழியல் துறையில் துடிப்பான செய்திச் சஞ்சிகைக்கு நீண்டகாலமாக இருந்து வந்த வறுமையைப் போக்கும் வகையில் நாம் முன்னெடுத்த முயற்சியை வரவேற்று கிடைக்கப்பெறுகின்ற பாராட்டுகள் எமக்கு பெரும் உற்சாகத்தைத் தருகின்றன.

பாராட்டுகள் மாத்திரமல்ல கடந்த மூன்று இதழ்களிலும் காணப்படக்கூடியதாகவிருந்த விடயதானங்கள் குறித்து தெரிவிக்கப்பட்டு வரும் ஆரோக்கியமான விமர்சனங்கள் வருங்கால செயன்முறைகளை வகுப்பதில் எமக்கு வழிகாட்டுபவையாகவும் அமைந்திருப்பது பெருமகிழ்ச்சி தருகிறது.

தமிழ்பேசும் சமூகத்தின் பல்வேறு தரப்பிலிருந்தும் குறிப்பாக கல்விமான்கள், புத்திஜீவிகள், அரசியல் அவதானிகள், அரசியல் சமுதாயத்தினர் மற்றும் சிவில் சமூகத் தலைவர்கள் மத்தியிலிருந்து எமக்கு தெரிவிக்கப்பட்டிருக்கக்கூடிய கருத்துகள் நாம் காலப்பொருத்தமான பணியை மேற்கொண்டிருப்பதையும் அவர்கள் எல்லோரும் தங்களால் இயன்ற ஆதரவையும் ஒத்துழைப்பையும் தருவதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதையும் பிரகாசமாக வெளிக்காட்டுகின்றன.

சமகாலத்தை பொறுத்தவரையில் இன்றைய தினம் நேற்றைய தினத்தைவிட சிறப்பானது, நாளைய தினம் இன்றைய தினத்தை விட சிறப்பாகும் என்பதை தாரக மந்திரமாக கொண்டு சமூகத்தின் நலன்களை மனதிற் கொண்டு இதழியல் பணியைத் தொடருவோம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் கடிதங்கள்

## சமகாலத்துக்கு சமகாலம் அவசியம்

"சமகாலம்" சமகால நிலைவரங்களை மென்மையாகவும், உண்மையாகவும் தமிழ் மக்களிடத்தில் எடுத்துச் சொல்லும், புதிய முயற்சி வெற்றிபெற வாழ்த்துகிறேன். தமிழர் சமூகம் தனித்துவமான பாரம்பரியங்களை பாதுகாத்துக் கொள்வதற்கும், அரசியல், கல்வி, கலை கலாசார, சமயம், மொழியென அனைத்து அத்தியாவசிய வாழ்வியல் ஆதாரங்களுக்கும் அச்சாணியாக 'சமகாலம்' திகழ வேண்டும்.

மனித வாழ்வியல் அத்தியாவசியங்களையும், மனதை நெருடும் விமர்சனங்களையும், காலத்திற்கு ஏற்றவாறு கணிப்பீடு செய்து கலங்காத துணிச்சலுடன், தேடுதல் மூலமாக தெளிவுபடுத்தி 'சமூக விடியல்களுக்கு' சமகாலம் வழிகாட்ட வேண்டும்.

ஆர்.யோகராஜன் எம்.பி.

## புதிய நோக்கு

இலங்கைத் தமிழ் இதழியல் வரலாற்றில் தற்போது வெளிவந்து கொண்டிருக்கும் "சமகாலம்" நீண்டகாலமாக வழமையில் இருக்கும் சஞ்சிகைகளுக்குரிய பண்புகளில் இருந்து முற்றிலும் மாறுபட்டு, புதியநோக்கு, புதிய பண்பாட்டைக்கொண்டதொரு சஞ்சிகையாக மிளிரத் தொடங்கியுள்ளமை என்போன்ற நீண்டகால சஞ்சிகை வாசகர்களின் அறிவுத் தேடலுக்கு பெரும் உதவியாக இருக்கிறது.

"சமகாலம்" சஞ்சிகையின் கடந்த மூன்று இதழ்களையும் தவறாது படித்தவன் என்ற வகையில் அதில் வெளிவரும் அரசியல் கட்டுரைகள் புதிய எண்ணங்களைத் தோற்றுவிப்பதுடன், முற்றிலும் மாறுபட்டதொரு அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்தும் நோக்குடனும், உள்ளதை அவதானிக்க முடிந்தது. சிங்கள இனவாதம், தமிழ் இனவாதம் என்ற சகதிக்குள் இதுவரை அமிழ்ந்து போயிருந்த எமக்கு "சமகாலம்" இதுதான் என்ற உண்மையை இச் "சமகாலம்" சஞ்சிகை புரியவைக்கத் தொடங்கியுள்ளது.

எனவே காலத்தின்தேவை அறிந்து இப்படியானதொரு, சமகாலத்துக்கு தேவையான விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணியை ஆரம்பித்துள்ள எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர் ஸ்தாபனத்தாருக்கு பாராட்டுக்கள்.

சி.பாலசுப்பிரமணியம்
தெஹிவளை

## சிந்தனையில் திருப்புமுனை

சமகாலம் செய்திச் சஞ்சிகை பெயருக்கேற்றாற்போல் சமகால தேசிய மற்றும் சர்வதேச நிகழ்வுகளை அலசி ஆராய்ந்து ஆக்கபூர்வமான கருத்துகளை, சிந்தனைகளை சமகாலத்தில் பதிவு செய்கின்றமை வரவேற்கத்தக்கது.

உள்நாட்டு அரசியல், சமூக வாழ்வியல், சர்வதேச அரசியல் அதிலும் இந்திய அரசியல், மத்திய கிழக்கு விவகாரம், மனிதவள விவகாரம், அரசியல் வரலாறு..... என பல்வேறு அம்சங்களைச் சுமந்துவெளிவரும் இச்செய்திச் சஞ்சிகை, இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களின் மற்றுமோர் உரிமைக்குரலாய் ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது.

சமகாலத்தின் பக்க வடிவமைப்பு, தளக்கோலம் என்பனவும் சஞ்சிகைக்கு மெருகூட்டுகின்றன.

துறைசார்ந்த, அனுபவமிக்க எழுத்தாளர்களின் பேனாமுனை சஞ்சிகையின் கனதிக்கு சான்றுபகிர்கின்றது.

ஆக, மொத்தத்தில் சமகாலம் இலங்கைத் தமிழ் ஊடகவியல் வரலாற்றில் ஒரு மைல்கல்லாகவும் தமிழ் பேசும் மக்களது சிந்தனையின் திருப்புமுனையாகவும் அமையும்.

ஜெம்ஸித் அஸீஸ்
கொழும்பு.




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 01 இதழ் 04

**2012, ஆகஸ்ட் 16 - 31**

A Fortnigtly Tamil News Magazine

**எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
**தொலைபேசி : +94 11 7322700**
**ஈ-மெயில்:** samakalam@ex-pressnewspapers.lk

**ஆசிரியர்**
வீரகத்தி தனபாலசிங்கம்

**உதவி ஆசிரியர்கள்**
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்
துஷியந்தினி கனகசபாபதிப்பிள்ளை

**ஒப்பு நோக்கல்**
என்.லெப்ரின் ராஜ்

வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
**சமகாலம்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14,
இலங்கை
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரக்குமழலம்....

❝ இலங்கையின் பங்குச்சந்தையில் சில முதலீட்டாளர்களும் தரகர்களும் மிகவும் சக்தி மிக்கவர்களாக மாறிவிட்டார்கள். பங்குச் சந்தை ஆணைக்குழுவின் தலைவர் பதவியில் இருந்து என்னை இராஜினாமாச் செய்ய வைக்கக்கூடிய அளவுக்கு அவர்கள் வல்லமை படைத்தவர்களாக இருக்கிறார்கள் என்றால் பாருங்களேன். ❞



திலக் கருணாரத்ன

❝ அரசாங்க அரசியல்வாதிகளும் அவர்களின் கையாட்களும் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் இழைத்ததையும் விடபடுமோசமான குற்றச்செயல்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். போரின் போது விடுதலைப் புலிகளிடமிருந்து தங்கள் பிள்ளைகளைப் பாதுகாப்பதற்கு பெற்றோர் நிர்ப்பந்திக்கப்பட்டதைப் போன்று இன்று அரசாங்க அரசியல் வாதிகளிடமிருந்து பிள்ளைகளைப் பாது காக்க அவர்கள் போராடவேண்டியிருக்கிறது. இந்தக் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த பொலிஸாரினால் முடியாது. சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்து வருகின்றமைக்கு பிரதான காரணம் பொலிஸ் திணைக்களம் அரசியல் மயப்படுத்தப்பட்டமையாகும். ❞



ரணில் விக்கிரமசிங்க

❝ 2009 ஆம் ஆண்டு ஈழப்போரின் இறுதிக் கட்டங்களில் இடம்பெற்ற அத்துமீறல்களுக்கு எதிராகத் திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் கருணாநிதி குரல்எழுப்பவில்லை. ஆனால், தற்போது அவர் இந்திய மத்திய அரசாங்கத்திட மிருந்து தன்னைத் தூரவிலக்கிக் கொண்டு, ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவி சோனியா காந்தியின் விருப்பங்களுக்கு எதிராக தமிழீழ ஆதரவாளர்கள் அமைப்பின் (ரெசோ) மகாநாட்டை ஏற்பாடு செய்திருக்கிறார். இன்று கருணாநிதி சரியான நடவடிக்கையை மேற் கொண்டிருக்கிறார். அதனால்தான் நாம் இங்கு வந்திருக்கிறோம். ❞



விக்கிரமபாகு கருணாரத்ன
சென்னை ரெசோ மகாநாட்டில்

❝ சட்டத்தின் ஆட்சியை மதிப்பவர்களும் நீதியை எதிர்பார்ப்பவர்களும் இன்று அரசியலில் ஈடுபட முடியாது. போக்கிரிகளும் கள்வர்களும் போதைப்பொருள் கடத்தல் மன்னர்களும் வஞ்சகத்தனமான பேர்வழிகளுமே இன்று அரசியலில் ஈடுபட முடியும். சட்டத்தின் ஆட்சியின் சீர்குலைவுக்கு எதிராகத் துணிந்து போராடுவதும் சட்டத்தின் முன் சகலருமே சமமாக மதிக்கப்படக்கூடிய சுதந்திரமான சமுதாயம் ஒன்றை தோற்றுவிப்பதுமே எனது அரசியல் அபிலாஷைகள் - இத்தகைய சமுதாயத்தை உருவாக்குவதே இலட்சியமாகக் கொண்டு பாடுபடக்கூடிய எந்தவொரு இயக்கத்துக்கும் தலைமை யேற்க நான் தயார். ❞

டபிள்யூ.ரி.எம்.வரவேவ
ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற
நீதிபதி

❝ கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்ட சிங்கப்பூர் கம்பனியான விட்டோலிடமிருந்து மீண்டும் எண்ணெய்க் கொள்வனவை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்காக என்மீது குற்றஞ் சாட்டப்படுகிறது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக நான் பதவி வகித்தபோது, தீர்மானங்களை மேற்கொள்ளும் செயன்முறைகளைபொறுத்தவரைநான்வெறும்பொம்மையாகவே உண்மையில் இருந்தேன். நான் எதையாவது செய்ய விரும்பியிருந்தால் கூட என்னால் அதைச் செய்திருக்க முடியாது. ❞



ஹரி ஜெயவர்த்தன
தொழிலதிபர்



❝ பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு இப்போது சுயாதீனமான ஒரு நிறுவனமாகச் செயற்படுவதில்லை. இது உயர்கல்வி அமைச்சின் கீழான ஒரு திணைக்களம் போன்றே இயங்குகிறது. முழுக்கல்வித்துறையுமே கடுமையான அரசியல் மயமாக்கலினால் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறது. ❞

சாவித்திரி குணசேகர
பேராசிரியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டாக்டர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு

இலங்கை மருத்துவப் பேரவையின் உறுப்பினர்களில் ஒருவரான டாக்டர் லலந்த ரணசிங்கவின் தெஹிவளை வீட்டுத் தோட்டத்திற்குள் சில தினங்களுக்கு முன்னர் கிரனேட் ஒன்று வெடிக்காத நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து, அச்சுறுத்தலை எதிர்நோக்கக்கூடிய மருத்துவர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பை வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.


அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் பாதுகாப்புச் செயலாளர் கோதாபய ராஜபக்ஷவை சந்தித்து தனியார் மருத்துவக் கல்லூரிகளை நிறுவும் முயற்சியை எதிர்க்கின்ற வைத்திய நிபுணர்கள் எதிர்நோக்கும் அச்சுறுத்தல்களை எடுத்துவிளக்கினர். இதையடுத்தே ராஜபக்ஷ அத்தகைய டாக்டர்களுக்கு




பொலிஸ் பாதுகாப்பை வழங்குவதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கிறார்.

டாக்டர் ரணசிங்கவின் வீட்டுத் தோட்டத்தில் கிரனேட் வீசப்பட்ட சம்பவம் குறித்து முழுமையான விசாரணைகளை நடத்தி சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்படாத பட்சத்தில் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்குவதற்கு அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தயாராகியிருப்பதாகவும் இதே நிலைவரங்கள் தொடருமானால், டாக்டர்கள் தங்கள் சொந்த நடவடிக்கையில் இறங்குவார்கள் என்றும் இலங்கை தேசிய வைத்தியசாலை சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் ரவி தயாசேன எச்சரிக்கை செய்திருக்கிறார். டாக்டர் ரணசிங்க தேசிய வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை நிபுணராக பணிபுரிகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# செங்கோட்டையும் மன்மோகன் சிங்கும்



தொடர்ச்சியாக ஒன்பது சுதந்திரதினக் கொண்டாட்டங்களின் போது டில்லியில் உள்ள செங் கோட்டையில் இந்தியாவின் மூவர்ணத் தேசியக் கொடியை ஏற்றிவைத்த மூன்றாவது பிரதமராக கலாநிதி மன்மோகன் சிங் விளங்குகிறார்.

சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேருவுக்கும் அவரது மகள் இந்திராகாந்திக்கும் அடுத்து இவருக்கு இந்தப்பெருமை கிடைத்திருக்கிறது.

தொடர்ச்சியான இரண்டாவது பதவிக்காலத்துக்கு பிரதமராக 2009 மே 22 பதவியேற்ற மன்மோகன் சிங் நீண்ட காலம் அப்பதவியை வகிக்கும் மூன்றாவது தலைவர் என்ற பெருமையையும் பெற்றிருந்தார். நேரு 17 வருடங்களும் இந்திராகாந்தி 16 வருடங்களும் பிரதமராக இருந்தார்கள்.

மன்மோகன் சிங்கிற்கு முன்னதாக பிரதமராக இருந்த அடல் பிஹாரி வாஜ்பாய் 1998ஆம் ஆண்டுக்கும் 2003ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் 6 தடவைகள் சுதந்திர தினத்தில் செங்கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றிவைத்திருந்தார்.

நேரு 17 தடவைகள் தேசியக்கொடியை ஏற்றிவைத்ததையும் இந்திராகாந்தி 16 தடவைகள் ஏற்றிவைத்ததையும் சரித்திரப் பெருமைக்குரிய முகலாய நினைவுச்சின்னமான செங்கோட்டை கண்டிருக்கிறது.



இந்தியா சுதந்திரம் அடைந்தபிறகு 1947 ஆகஸ்ட் 15 ஆம் திகதி செங்கோட்டையில் முதற்தடவையாக தேசியக்கொடியை ஏற்றிவைத்தார்.

நாட்டின் 14 ஆவது பிரதமரான மன்மோகன் சிங் முதற்தடவை யாக பதவியேற்று நான்கு மாதங்கள் கழித்து 2004 ஆகஸ்ட் 15 செங்கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதாவின் தேசிய அபிலாசை




2014 பொதுத்தேர்தலுக்குப் பிறகு இந்தியாவில் காங்கிரஸ் கட்சியையும் பாரதிய ஜனதா கட்சியையும் சாராத ஆனால் . இவ்விரு பிரதான கட்சிகளில் ஏதேனும் ஒன்றின் ஆதரவைப் பெறும் ஒருவர் பிரதமராகவரக்கூடிய சாத்தியப் பாடுகள் இருப்பதாக பாரதிய ஜனதாவின் மூத்த தலைவர் எல்.கே.அத்வானி அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்தார் அல்லவா?

பாரதிய ஜனதாவின் தலைவர்களும் பால் தக்கரே போன்ற இந்துவாத அரசியல் வாதி களும் இதனால் பெரும் குழப்பமடைந்த போதிலும், தமிழகத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் புளகாங் கிதமடைந்திருக்கிறார்களாம். தங்கள் தலை வியான முதலமைச்சர் ஜெயலலிதாவை மனதில் வைத்துக் கொண்டுதான் அத்வானி அத்தகைய கருத்தை வெளியிட்டிருக்கக் கூடுமென்பது இவர்களின் நம்பிக்கை.

"பொதுத் தேர்தலுக்குப் பிறகு பிரதமர் பதவிக்கான செல்வாக்குமிக்கதொரு தெரிவாக அம்மா விளங்கக் கூடுமென்று எம்மில் பலர் உறுதியாகவே நம்புகிறோம்' என்று அண்ணா தி.மு.க.தலைவர் ஒருவர் கூறியதாக அவுட்லுக் இந்திய சஞ்சிகையில் புஷ்பா ஐயங்கார் எழுதியிருக்கிறார். அம்மாவும் தேசிய அரசியல் அபிலாசையை தனக்குள் வளர்த்துக் கொண்டுவரு கிறார் என்பது ஒன்றும் இரகசியமில்லை. தனக்கு ஏதாவது பரிசைத்தர விரும்பினால், அடுத்த பொதுத்தேர்தலில் தமிழகத்தின் 40 லோக் சபா தொகுதிகளிலும் அண்ணா தி.மு.க வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்து தாருங்கள் என்று கடந்த பெப்ரவரியில் அம்மா கழகத் தொண்டர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார் என்பது கவனிக்கத்தக்கது.

தேசிய அரசியல் அரங்கில் தனது முக்கியத்துவத்தைக் காட்டும் ஒரு முயற்சியாக அண்மைய இந்திய ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக முன்னாள் லோக் சபா சபாநாயகர் பி.ஏ.சங்மாவை ஜெயலலிதா ஒரிசா முதலமைச்சர் நவின்பட்நாயக்குடன் சேர்ந்து முன்மொழிந்தார். வேறுவழியின்றி பாரதியஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பெரும்பாலான கட்சிகள் சங்மாவை ஆதரித்த போதிலும், அவர் படுதோல்வி யையே தழுவினார். இதைப்போன்று பல தேசிய அரசியல் அரங்கத்துக்கான நாடகங்களை ஜெயலலிதா தொடர்ந்தும் தயாரிப்பார் என்பதில் சந்தேகமில்லை.



# சவூதியில் பெண்களுக்கு தனியான நகரம்

சவூதி அரேபியா அதன் கிழக்குப் பகுதி ஹோஃபூவ் மாகாணத்தில் பெண்களுக் கென்று தனியான கைத்தொழில் நகர மொன்றை நிர்மாணிப்பதற்கு திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருக்கிறது.

ஆடைத் தயாரிப்பு, மருந்து வகைகள் தயாரிப்பு மற்றும் உணவுப் பதனிடல் போன்ற துறைகளில் பெண்களுக்கு தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதை பிரதான நோக்கமாகக் கொண்டே சவூதி அரசு இத்திட்டத்தை வகுப்பதாகக் கூறப்படுகிறது.

இத்தகைய நகரங்களில் நிறுவனங்கள் பெண்களை மாத்திரமே வேலைக்கு அமர்த்த முடியும். சவூதியில் ஆண்களுக் கும் பெண்களுக்கும் இடையே வேலைவாய்ப்பைப் பொறுத்தவரை நிலவுகின்ற பாரிய இடைவெளியை நிரப்புவதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்று.

ஷரியா சட்டங்களை அடிப்படையாகக் கொண்ட பால்வேறுபாட்டு விதிகளுக்குமுரண்படாதவகையில்பெண்களுக்குஉரிமையும்அதிகாரமும் அளிக்கும் இத்திட்டம் நடைமுறைக்கு வரும்போது, சவூதி அரசு பெண்களை இந்த நகரங்களுக்குள் வாகனங்களைச் செலுத்துவதற்கு அனுமதிக்குமா என்ற கேள்வி எழுகிறது.

ஆண்களின் பிரசன்னம் இல்லாத நிலையில் சுட்டெரிக்கும் வெயிலில் பெண்களினால் நகரங்களில் நடந்து திரிய முடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சார்க் உச்சிமாநாடு ஒத்தி வைக்கப்படுமா?

நேபாளத்திலும் மாலைதீவிலும் நிலவுகின்ற உள்நாட்டு அரசியல்நெருக்கடிகள்காரணமாகபிராந்திய ஒத்துழைப்புக் கான தெற்காசிய சங்கத்தின் (சார்க்) 18ஆவது உச்சிமாநாட்டை இவ்வருட இறுதியில் நடத்த முடியாமல் போகலாம்என்று இராஜதந்திரவட்டாரங்கள் மூலம் தெரியவந்திருக்கிறது.

இவ்வருடத்தைய சார்க் உச்சி மாநாட்டைநேபாளமேநடத்தவேண்டும் என கடந்த உச்சிமாநாட்டின் இறுதியில் அறிவிக்கப்பட்டது. ஆனால், அரசியல் குழப்பநிலை காரணமாக சார்க் உறுப்பு நாடுகளின்அதிகாரிகள்மற்றும்அமைச்சர்கள்மட்டத்திலானகூட்டங்கள்போன்ற செயன்முறைகளை நேபாளம் தாமதித்திருக்கிறது. இத்தகைய கூட்டங்கள் உச்சி மாநாட்டுக்கு முன்னோடியானவையாகும்.

சார்க் அமைப்பின் தற்போதைய தலைமைத்துவம் மாலைதீவிடமே இருக்கிறது. இவ்வருட ஆரம்பத்தில் ஜனாதிபதி முஹமட் நஷீட் பதவியிலிருந்து அகற்றப்படுவதற்கு வழிவகுத்த குழப்பமான சூழ்நிலைகள் இன்னமும் முடிவிற்கு வரவில்லை.

சார்க் உச்சிமாநாடுகளை வருடாந்தம் நடத்தவேண்டும்என்பதேஅந்தஅமைப்பின் சாசனத்தின் பிரகாரமான ஏற்பாடாகும். நவம்பரில் அல்லது டிசம்பரிலேயே இது வழமையாக நடத்தப்பட்டு வந்திருக்கிறது. ஆனால், சார்க்கின் பெரிய நாடுகளான இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான பாரம்பரிய முறுகல் நிலைகளினால் உச்சி மகாநாடுகள் அடிக்கடி தாமதிக்கப்பட்டு வந்திருக்கின்றன. வருடாந்தம் நடத்தப்பட முடியாமல் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடத்த வேண்டிய நிலைமை பல தடவைகள் ஏற்பட்டிருந்தது.

உறுப்புநாடுகள் சகலதினதும் தலைவர்கள் பங்கேற்கும் பட்சத்திலேயே உச்சி மாநாடு நடத்தப்பட வேண்டும் என்பதே சாசனத்தின் ஏற்பாடாகும். ஒரு நாட்டின் தலைவரினால் கலந்து கொள்ளமுடியாவிட்டாலும்மகாநாட்டை பின் போட வேண்டும்.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், மாலைதீவு, இலங்கை, பூட்டான், நேபாளம் ஆகியவையே சார்க்கின் தற்போதைய உறுப்பு நாடுகளாகும்.

1985 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட சார்க் அமைப்பு அதே வருடம் டிசம்பரில் முதல் உச்சி மாநாட்டை பங்களாதேஷில் நடத்தியது. 27 வருடகாலத்தில் 17 உச்சி மாநாடுகளையே நடத்தக் கூடியதாக இருந்திருக்கிறது. 1989, 1992, 1994, 1996, 1999,2000, 2001,2003, 2006, 2009 ஆண்டுகளில் உச்சி மாநாடுகளை நடத்த முடியவில்லை.

நேபாளத்திலும், மாலைதீவிலும் அரசியல் நெருக்கடிகள் தணிவடையாத பட்சத்தில் இவ்வருட இறுதியில் காத்மண்டுவில் 18ஆவது உச்சி மாநாட்டை நடத்துவது சாத்தியமில்லை என்றே தோன்றுகிறது. அடுத்தவருடத்துக்கு பிற்போடப்படக் கூடிய வாய்ப்புகளே அதிகம் என்று இராஜதந்திரவட்டாரங்கள் கூறுகின்றன.

# twitter ருவிட்டரில் கலைஞர்



தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவருமான கலைஞர் மு. கருணாநிதியினால் 140 எழுத்துகளில் ஒரு தகவலைத் தெரிவிக்க முடியுமா? சமூக இணையத்தளங்களில் ஒன்றான ருவிட்டரில் (Twitter) அவர் பிரவேசம் செய்திருப்பதையடுத்து இக்கேள்வி கிளம்பியிருந்தது.

ருவிட்டரில் சகவாசஞ் செய்பவர்கள் உண்மையில் கலைஞர் தான் பிரவேசம் செய்திருக்கிறாரா அல்லது கலைஞரைவிமர்சனம்செய்வதற்கு வழிதிறந்துவிடுமுகமாக யாராவது குறும்புத்தனமாக இவ்வாறு செய்திருக்கக் கூடுமோ என்று சந்தேகித்து உண்மை நிலையை அறிந்து கொள்வதற்காக தொடர்பு கொண்ட போது தி.மு.க.வின் தென்சென்னை செயலாளர் கே.அன்பழகன் கலைஞர் ருவிட்டரில் இருப்பதை உறுதிப்படுத்தியதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

ருவிட்டரில் பிரவேசம் செய்யுமாறு தெரிவிக்கப்பட்ட யோசனைக்கு கருணாநிதி 10 நாட்களாக யோசித்துவிட்டு ஆகஸ்ட் 13ஆம் திகதிதான் சம்மதத்தைத் தெரிவித்ததாகவும் அன்பழகன் கூறியிருக்கிறார்.

மிகவும் விசுவாசமான அர்ப்பணிப்புள்ள குழுவே கருணாநிதியின் ருவிட்டர் கணக்கைக் கையாளும் என்றும் அன்பழகன் குறிப்பிட்டார்.

'@ kalaignar 89' என்ற பெயரில் தான் அவர் ருவிட்டரில் இருக்கிறார். அவரது கன்னித் தகவல்கூட, அண்மையில் முடிவடைந்த தமிழ்ஈழ ஆதரவாளர்கள் இயக்கத்தின் (டெசோ)மாநாட்டைப்பற்றியதாகும். 'warm welcome Thalaivare' என்று நடிகை குஷ்பு தகவல் அனுப்பியிருந்தார். 'yarai vittadhu... indha twitter' என்று ஒரு தகவல்,. welcome to one of TN'S greatest Machiavellis இப்படிஇன்னொருதகவல். பொதுமக்கள் மத்தியில் இருக்கக்கூடியமனநிலையை உணர்த்தும் வகையிலும் சில தகவல்கள். அவற்றில் சில




'Now that youre on Twitter.... If you promise a TV, I promise to follow you.' 'Tweet porattaum ellam nadathuvaangala'? 'whoever follows me will get a free iphone in next election?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விருந்தினர் பக்கம்

# எம் முன்னால் உள்ள சவால்

கலாநிதி குமார் ரூபசிங்க

இலங்கை அரசாங்கப் படையினரால் விடுதலைப் புலிகள் தீர்க்கமான முறையில் தோற்கடிக்கப்பட்டு இப்போது மூன்றுவருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்துவிட்டது. புலிகளின் தோல்விக்குப் பின்னரான காலகட்டத்தில் இலங்கை அரசாங்கமும் சர்வதேச சமூகமும் சமாதானத்தை வென்றெடுக்கும் விடயத்தில் மல்லாடிக்கொண்டிருக்கின்றன. படுமோசமான உள்நாட்டுப் போருக்கு வழிவகுத்த காரணிகளை இல்லாமல் செய்து, பொறுப்புடைமையை ஏற்றுக் கொண்டு நல்லிணக்கத்தை காண்பதற்கான வழிவகைகள் தொடர்பிலேயே சர்ச்சைகள் மூண்டிருக்கின்றன. கடந்த சில வருடங்களாக இந்த விவகாரங்கள் இலங்கையரசியலில் முக்கிய விவாதப்பொருளாக ஆதிக்கம் செய்துகொண்டிருக்கின்றன.

நல்லிணக்கம் மற்றும் பொறுப்புடைமை தொடர்பான விவகாரங்களை ஆராய்வதற்கு முன்னதாக, எத்தகைய சூழ்நிலைகளின் கீழ் போர் முடிவிற்கு கொண்டுவந்தது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டியது முக்கியமானதாகும். முரண்நிலைத் தீர்வு (Conflict resolution) பற்றிய ஆய்வு ஏடுகளில் எடுத்துக் காண்பிக்கப்பட்டிருக்கக் கூடிய சூழ்நிலைகள் குறித்து நாம் கவனம் செலுத்துவது பொருத்தமானது. குறிப்பாக முரண்நிலையில் சம்பந்தப்பட்ட தரப்புகள் பேச்சுவார்த்தைகள் மூலமாக இணக்கத் தீர்வைக்கண்ட நெருக்கடிகளில் முக்கியமானதொன்று தென்னாபிரிக்க இனஒதுக்கல் ஆட்சியின் முடிவாகும். இதில் இருதரப்பினர்களுக்குமே திருப்தி தரக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டது. தென்னாபிரிக்காவில் அத்தகைய தீர்வொன்றுக்கு நாட்டு மக்களை வழிநடத்தியது முன்னாள் ஜனாதிபதிகள் நெல்சன் மண்டேலாவினதும் டி கிளாக்கினதும் தலைமைத்துவங்களேயாகும். நெருக்கடிகள் நிலவுகின்ற வேறுபல நாடுகளில் இன்னும் முட்டுக்கட்டை நிலை தொடர்கிறது. அங்கெல்லாம் இருதரப்பினர்களுமே தோல்விகண்டு கொண்டிருக்கிறார்கள். இதற்கு சிறந்த உதாரணங்களாக கொங்கோ அல்லது கொலம்பியாவில் நீண்ட கால முரண்நிலையையும் பல வடிவங்களில் தோன்றுகின்ற போரையும் கூறலாம்.

இலங்கையைப் பொறுத்தவரை போரில் ஒருதரப்பு தோல்வியடைய, மறுதரப்பு முற்றுமுழுதான வெற்றியைப் பெற்றிருக்கிறது. எனவே முரண்நிலைத் தீர்வு மற்றும் நல்லிணக்கம் ஆகியவை பற்றி நாம் பேசுகின்ற போது போர் எவ்வாறு முடிவிற்கு கொண்டுவரப்பட்டதென்பதும் நல்லிணக்கத்துக்கான வடிவங்கள் எத்தகையானதாக இருக்க முடியும் என்பதும் முக்கியமான விவகாரங்களாகின்றன. பேச்சுவார்த்தைகள் மூலம் இணக்கத் தீர்வு காணப்பட்ட நெருக்கடிகளைக் கொண்டிருந்த நாடுகளில் நல்லிணக்கம் என்பது உண்மை ஆணைக் குழுக்களின் வடிவை (Truth Commissions) எடுக்கிறது. இலங்கை நெருக்கடியில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் கண்ட முற்றுமுழுதான வெற்றி, அரசாங்கத் தரப்பினர் மத்தியில் ஒரு வெற்றிக்கொண்டாட்டக் குதூகல சூழ்நிலையை உருவாக்கியது. மறுதரப்பினர் சுயமரியாதையை இழந்தவர்களாகத் தங்களை உணர்ந்து நிற்கிறார்கள். ஒருதரப்புக்கு முற்றுமுழுதான வெற்றி கிடைத்திருக்கக்கூடிய சந்தர்ப்பங்களில் நல்லிணக்க வடிவங்கள் வேறுபட்டவையாகவும் கூடுதலான அளவிற்கு சிக்கல் வாய்ந்தவையாகவும் அமையும். இதையே இலங்கையில் நாம் இன்று காண்கின்றோம்.

மேலும் இலங்கை நெருக்கடியைப் பொறுத்தவரையில் முக்கியமாகக் கவனிக்கக்கூடிய ஒரு அம்சம் இருக்கிறது. பல நாடுகளின் தடைசெய்யப்பட்ட படுமோசமான ஒரு பயங்கரவாத இயக்கத்துக்கு எதிராக போரில் வெற்றிகண்டது ஜனநாயக ரீதியில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு அரசாங்கமாகும். இங்கு வெற்றிக் குதூகலச் சூழ்நிலை பல வடிவங்களில் வெளிக்காட்டப்பட்டது. தேசியகீதத்தை ஒருமொழியில் மாத்திரம் பாடவேண்டும் என்று மேற்கொள்ளப்பட்ட தீர்மானம், இன்னொரு நாட்டுக்கெதிரான போரில் வெற்றி கண்டதைப் போன்று வெற்றியைக் கொண்டாடும் முகமாக நடத்தப்பட்டுவரும் இராணுவ அணிவகுப்புகள், வடக்கில் பெரும் எண்ணிக்கையில் இராணுவத்தினரின் பிரசன்னம், தமிழ்ப்பகுதிகளில் உட்கட்டமைப்பு அபிவிருத்திகளும் ஏனைய அபிவிருத்திச் செயற்பாடுகளும் மக்களின் பங்களிப்பின்றி அரசினால் மேற்கொள்ளப்படுதல் போன்றவற்றை வெற்றிக்குதூகலிப்பு வடிவங்களுக்கான சில உதாரணங்களாகக் கூறமுடியும்.

முரண்நிலை பற்றிய ஆய்வுஏடுகளில் (Conflict Literature) குறித்துரைக்கப் பட்டதன் பிரகாரம் சமாதானம் என்பது போர் இல்லாத நிலை என்றாகி விடாது. முரண்நிலை மாறுதல் (Conflict Transformation) பற்றிய ஆய்வு ஏடுகளில் மூன்று வகையான வன்முறைகள் வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றன. நேரடி வன்செயல் என்று வரும்போது யோஹான் கல்ருங் மூன்றுவகையான வன்முறைகளைப் பற்றி கூறுகிறார். அதாவது இருதரப்பினாலும் பயன்படுத்தப்படுகின்ற (உயிரிழப்பில் கொண்டுபோய்விடுகின்ற) வன்முறை (Deadly Violence), வறுமை, சமத்துவமின்மை, பாரபட்சம் ஆகியவற்றைத் தொடர அனுமதிக்கின்ற கட்டமைப்பு அடிப்படையிலான வன்முறை (Structural Violence), அடையாளத்தை நிராகரிக்கின்ற, மற்றவர்களின் இருப்பை நிராகரிக்கின்ற கலாசார வன்முறை (Cultural Violence) ஆகியவையே அவையாகும். இலங்கையில் நேரடி வன்முறை இருதரப்பினராலும் தாராளமாகவும் விரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகவும் பயன்படுத்தப்பட்டது. அந்தக் கட்டம் இப்போது முடிவுக்கு வந்துவிட்டது. ஆனால் கட்டமைப்பு அடிப்படையிலான வன்முறை தொடரவே செய்கிறது. தமிழர்களினால் மாத்திரம் அல்ல சிங்களவர்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் சிறுபான்மையினத்தவர்கள் சமத்துவமின்மையினாலும் பாரபட்சத்தினாலும் பாதிக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறார்கள். இந்தப் பாரபட்சம் இனத்துவ, சாதி அல்லது வர்க்க அடிப்படையில் அமைகிறது. மலையகத் தோட்டப்பகுதிகளில் உள்ள தமிழர்களின் தொழில்சக்தி படுமோசமான சுரண்டல்களின் ஊடாக கட்டமைப்பு அடிப்படையிலான வன்முறைக்கு உள்ளாக்கப்படுகின்றது.

இலங்கையில் கலாசார வன்முறையும் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திக் கொண்டே இருக்கிறது. அடையாளத்தை நிராகரித்தல், மகாவம்சத்தில் கூறப்பட்டவாறு பிரத்தியேகமான மக்கள் என்ற எண்ணப்பாட்டை வளர்க்கும் மாயைகள், தனிநாடு ஒன்றை வேண்டி நிற்கின்ற தாயகக்கோட்பாடு, இலங்கையின் ஆதிக் குடிகள் யார் என்பதைப் பற்றிய போட்டா போட்டிக் கருத்துகள் என்பவற்றை கலாசார வன்முறை பிரதிபலிக்கிறது. சமாதானத்தை வென்றெடுப்பதில் இந்த மாயைகளும் கோட்பாடுகளும் உருவாக்கிய சூழ்நிலைகள் கருத்தில் எடுக்கப் படவேண்டியவையாக இருக்கின்றன. இத்தகைய ஒரு பின்புலத்திலேயே கற்றுக் கொண்ட பாடங்கள், நல்லிணக்க ஆணைக்குழுவை சமாதானத்தை வென்றெடுப்பதற்கான ஒரு சாதனமாக மாத்திரம் அல்ல சச்சரவின் ஒரு சின்னமாகவும் நாம் துருவி ஆராய வேண்டி இருக்கிறது.

போருக்குப் பின்னரான காலகட்டத்தில் மேற்குலகின் வல்லாதிக்க நாடுகள், இந்தியா, புலம்பெயர்ந்த தமிழர்களினால் வெளிக்காட்டப்பட்ட அக்கறைக்கான பிரதிபலிப்பாகவே நல்லிணக்க ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. முன்னைய ஆணைக்குழுக்களைப் போன்றே இதுவும் சரித்திரத்தின் குப்பைக்கூடைக்குள் போகக்கூடும் என்று எதிர்பார்க்கப் பட்டது. ஒரு மேன்மைவாய்ந்த குழுவினரைக் கொண்ட ஆணைக்குழுவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்தார். அதன் உறுப்பினர்கள் அரசாங்கத்துக்குச் சார்பானவர்கள் என்றே கருதப் பட்டார்கள். அவர்கள் அக்கறையுடன் நிலைவரங்களை நோக்குவார்கள் என்று யாரும் நினைக்கவில்லை. அரசாங்கம் இழைத்திருக்கக்கூடிய தவறுகளையும் செய்யாமல் விட்ட காரியங்களையும் மூடி மறைப்பதற்கான ஒரு கண்துடைப்பு முயற்சியாகவே அரசாங்கத்தின் எதிராளிகள் ஆணைக்குழுவை நோக்கினார்கள்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் தீர்மானம் ஒன்றைக்கொண்டு வருவதன் ஊடாக அமெரிக்காவும், இந்தியாவும் மேற்கொண்ட முயற்சிகள் தான் நல்லிணக்க ஆணைக்குழுவிற்கு ஒரு முக்கியத்துவம் வாய்ந்த இடத்தைக் கொடுத்தன என்பதில் சந்தேகமில்லை. எவ்வாறெனினும் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தோற்கடிக்கப் பட்டது. இது சர்வதேச சமூகத்தின் நிலைப்பாட்டின் தெளிவான அறிகுறியா கும்.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் சந்தித்த தோல்வியை அடுத்து தோன்றிய பட்டறிவின் விளைவாக, அமெரிக்கா, மேற்குலக வல்லாதிக்க நாடுகள் மற்றும் இந்தியாவுடன் உறவுகளைச் சீர்செய்து கொள்வதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தார். இது அரசாங்கத்தின் தந்திரோபாயத்தில் காணப்படக்கூடியதாக இருக்கும் ஒரு முக்கியநகர்வாகும். வீரதுங்க குழுவின் அயரா முயற்சியினால் நல்லிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது. இந்தச் செயற்திட்டம் அரசாங்கத்தின் செயற்பாடுகளை அளவிடுவதற்கான ஒரு கோலை வழங்குவதாக அமைகிறது. இந்தத் திட்டத்தில் இருக்கக்கூடிய ஏற்பாடுகள் சர்ச்சைக்குரிய விவகாரங்களில் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் ஆராய்வதற்கே விட்டுவிடுகின்றனர். இலங்கை இப்பொழுது ஐ.நா.வின் ராடா திரைக்குக் கீழ் இருக்கிறது. இதில் அளவுகோலாக உள்நாட்டில் வகுக்கப்பட்ட செயற்திட்டம் அமைந்திருக்கிறது. புலம் பெயர்ந்த தமிழர்கள் போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை ஒன்றைக்கோரி தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களைச் செய்வார்கள். ஆனால் அரசாங்கம் இந்தச் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துமேயானால் புலம்பெயர்ந்ததமிழர்களின் ஆர்ப்பாட்டம் மீதான சர்வதேச சமூகத்தின் கவனம் குறைந்து கொண்டு போகக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

எவ்வாறெனினும் இலங்கை அரசாங்கம் அரசியலமைப்பிற்கான 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுடன், அதற்கான முதற்படியாக சாத்தியமானளவு விரைவில் வடமாகாண சபைக்கான தேர்தல்களை நடத்த வேண்டும் என்றும் இந்தியா எதிர்பார்க்கிறது. வடக்கில் தேர்தலை நடத்துவது நல்லதொரு காரியமாகவிருக்கும். ஏனென்றால் நல்லிணக்கச் செயல்முறைகளில் அது ஒரு பிரதான கருவியாக விளங்கும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் ஏனைய தமிழ்க் கட்சிகளும் அவற்றில் செல்வாக்கு மிகுந்த பகுதிகளை ஆளுவதற்கான வாய்ப்பு நிச்சயம் வழங்கப்படவேண்டும். (பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களைப் பொறுத்தவரை உரிய தடுப்பமைவு ஏற்பாடுகளைச் செய்து கொள்ளலாம்.) அத்தகைய நடவடிக்கை எடுப்பதன் மூலம் வடபகுதி மக்கள் அனுபவிக்கின்ற மனச்சிக்கல்கள் தீர்வதற்கான ஒரு இடைவெளியை திறக்க முடியும்.

வடமாகாண சபைத் தேர்தலுக்காக 2013 வரை நாம் காத்திருக்க வேண்டும் என்று தவறான அடிப்படையிலே கேட்கப் படுகிறது. வடபகுதி தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக வாக்களிக்கக் கூடிய சூழ்நிலை ஏற்படக் கூடியதாக அரசாங்கம் உட்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்திச் செயல்முறைகளை முன்னெடுப்பதற்காகவா இந்தகால அவகாசம் கூறப்படுகிறது. அபிவிருத்தி செயல்முறைகளினூடாக மக்களின் அடையாளத்தை பொருளாதாரத்தினால் மாற்றிவிட முடியும் என்பது தவறான கோட்பாட்டின் அடைப்படையிலான வாதமாகும். அத்துடன் தேர்தலை நடத்துவதிலான தாமதம் குடிப்பரம்பல் சமநிலையை மாற்றியமைப்பதற்கான ஒரு வழிவகையாக அர்த்தப்படுத்தப்படவும் அனுமதிக்கக் கூடாது. போர்க்காயங்களைக் குணப்படுத்துவதும் புண்பட்ட மனங்களில் நம்பிக்கை உணர்வை ஏற்படுத்துவதும் மிக முக்கியமாகும். அவமதிப்பு உணர்வை இல்லாமல் செய்து போர்க்காயங்களையும் குணப்படுத்துவதற்கு அந்த மக்களின் தலைவர்களை நாட்டைக் கட்டியெழுப்பும் பணிகளில் பங்காளிகளாக்கும். இதற்காக நாட்டின் தலைவர்கள் சிங்களவர்கள் மாத்திரமல்ல ஏனைய சமூகங்களைச் சேர்ந்த தலைவர்களும் நம்பிக்கையுடனும் விட்டுக்கொடுப்புடனும் செயற்பட வேண்டும். இவ்வாறு மாறுதல்கள் ஏற்பட வேண் டுமானால் கடந்த கால மனநிலையையும், கடந்தகால முரண்நிலைகளின் சின்னங் களையும் நாம் வீசியெறிந்து புதிய இலங்கையைக் கட்டியெழுப்ப திடசங்கற்பம் பூண வேண்டும். எவ்வாறு அத்தகைய புதிய சிந்தனைச் சூழலை ஏற்படுத்துவது என்பதே நம்முன் உள்ள சவாலாகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்

நல்லிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகளை நடைமுறைப் படுத்துவதற்கான செயற்திட்டம்

# இராமன் இல்லாத இராமாயணம்

குமார் டேவிட்

வடக்கில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல் தலைமைத்துவத்திடமே செயற்திட்டத்தை நடைமுறைப் படுத்தும் பொறுப்பு ஒப்படைக்கப்பட வேண்டும்



கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்திட்டமொன்றை கடந்தமாதம் 26ஆம் திகதி ராஜபக்ஷ அரசாங்கம் வெளியிட்டிருந்தது. இந்தியா உட்பட சர்வதேச சமூகத்தின் தீவிரமான அழுத்தத்தின் கீழ் அரசாங்கம் ஏதாயினும் ஒன்றைச் செய்ய வேண்டியேற்பட்டுவிட்டது. அதனால் இறுதியில் இந்த செயற்திட்ட யோசனைகளை முன்வைத்திருக்கிறது. சிலயோசனைகள் ஆதரிக்கக் கூடியவை. அவற்றை உகந்தமுறையில் செயற்படுத்தினால் சிலவகை நன்மைகள் ஏற்படும். ஏனைய யோசனைகள் வெறும் ஏமாற்றேயாகும். முக்கியத்துவம்வாய்ந்த பெரும்பாலான பிரச்சினைகளை அரசாங்கம் மிகவும் எளிதாகவே தட்டிக்கழித்து நழுவல்தனமான போக்கையே கடைப்பிடித்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இந்த வேறுமாதிரியான அம்சங்கள் குறித்தே நான் கவனம் செலுத்த விரும்புகிறேன்.

விபரங்களுக்குள் போவதற்கு முன்னதாக ஒரு அடிப்படை விடயத்தை வலியுறுத்த விரும்புகிறேன். வடமாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்பட்டு அந்த மாகாணத்தின் மக்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் தலைமைத்துவம் ஒன்று ஏற்படுத்தப்படாத பட்சத்தில் மேற்படி செயற்திட்டம் இராமன் பாத்திரம் இல்லாமல் இராமாயணம் நாடகத்தை நடத்துவதாகவே அமையும். செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பை ஏற்கக் கூடியதும் அதேவேளை, மக்களுக்கு பதில் கூறவேண்டிய கடப்பாட்டைக் கொண்டதுமான எந்த நிறுவனமும் அங்கே இல்லை. தமிழர்களையே பிரதான இலக்காகக் கொண்ட ஒரு முக்கியமான தேசிய நல்லிணக்கத் திட்டத்தை தொலைவில் கொழும்பில் இருந்து அமைச்சர்களினாலும் அரசாங்க உயரதிகாரிகளினாலும் வெற்றிகரமாகச் செயற்படுத்துவது உண்மையில் சாத்தியமா? அரசியல் ரீதியில் உணர்ச்சிவசமான பிரச்சினைகளைவிடுத்து. புனர்நிர்மாணம், மீள் நல்லிணக்கம் மற்றும் மீள் ஒழுங்கமைத்தல் போன்ற சிவிலியன் குறிக்கோள்களையும் பணிகளையும் கூட "றிமோட் கொண்ட்ரோலினால்" செய்துவிட முடியாது. செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பணிகளுக்குத் தலைமை தாங்குவதற்கு மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான தெரிவுசெய்யப்பட்ட அரசியல் தலைமைத்துவம் ஒன்று களத்தில் இருக்கவேண்டும். நான் ஒரு இனவாதியாக இருக்கவிரும்பவில்லை. ஆனால், ஒரு சிங்கள அமைச்சரவையும் (மக்கள் செல்வாக்கற்ற-அடையாளபூர்வமான ஒரு வடபகுதி தமிழரைத் தவிர) சிங்களவர் தலைமையிலான அதிகாரிகள் அணியும் உள்ளூர் மக்களிடமிருந்து ஆணையாகப் பெற்ற நிருவாகக் கட்டமைப்பொன்றைப்போன்று அதே உத்வேகத்துடன் மனதை அர்ப்பணித்துச் செயற்படுமென்று எதிர்பார்க்க முடியாது.

### வடமாகாணத்தில் தலைமைத்துவம்

மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்குப் பதிலாக, செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பணிகளுக்குப் பொறுப்பாக இருந்து தலைமைதாங்கி, அரசாங் கத்துடனும் தொடர்பு கொண்டு பணியாற்றக்கூடிய தனக்கு விருப்பமான ஒரு தமிழரை அரசாங்கம் நியமிக்க முடியாதா? என்ற கேள்வி எழலாம். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தொடர்பாடல் முறைகளை விந்தையானவையாகக் காண்கின்ற வரும்தமிழ் அரசியல்வாதிகள் அரசாங்கத்துடன் ஊடாட்டங்களைச் செய்கிறார்கள் இல்லை என்று புலம்பு கின்றவருமான ஒருவரை நினைத்துப்பாருங்கள், அத்தகையவரை அந்தப் பணிக்குப் பொறுப்பாக விடமுடியுமா?

இந்தத் தெரிவைப் பொறுத்தவரை, வென்று சமாளிக்க முடியாத இரு பிரச்சினைகள் இருக்கின்றன. முதலாவது என்னவெனில், அத்தகைய பிரமுகர் நியாயபூர்வத் தன்மையற்ற ஒரு கையாளாக வைக்கப்படுவதாகவே நோக்கப் படுவார். அதனால் வெறுப்புணர்வுடன் மாத்திரமல்ல, அலட்சியத்துடனும் அவர் வரவேற்கப்படுவார். இரண்டாவது, அவர் இயல்பாகவே தனது சொந்த அரசியல் வாழ்வைக் கட்டியெழுப்புவதற்கானவாய்ப்பாக இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த முயற்சிப்பார். இதன் விளைவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மனக்கசப்பும் டக்ளஸுடன் மோதலும் ஏற்படும். இந்தக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணங்களினால், இத்தகைய தெரிவு குழப்பநிலையையே உருவாக்கும். ஆனால், அரசாங்கம் இதையே விரும்பவும் கூடும்.

ஒரு உடந்தையாளாக அன்றி, தன் முனைப்புடன் செயற்படக்கூடிய சுயாதீனமான அரசியல் தலைமைத்துவம் ஒன்று உருவாகுவதை விரும்பாத காரணத்தினாலேயே வடமாகாண சபைக்கான தேர்தலை நடத்தக்கூடாது என்று அரசாங்கம் நினைக்கிறது. வடமாகாணத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் அதன் நேசசக்திகளும் படுதோல்வியைச் சந்திக்கவேண்டியிருக்கும் என்பது அரசாங்கத்துக்குத் தெரியும். அத்தகையதொரு நிலை வடக்கில் ஏற்படும் போது,அடுத்து நாட்டின் ஏனைய பகுதிகளில் நடத்தப்படக்கூடிய தேர்தல்களிலும் அது பிரதிபண்ணப்படக்கூடிய ஊக்கம் பிறக்கக் கூடுமல்லவா? பிள்ளையானைப் போன்று தங்களில் தங்கியிருக்கக்கூடிய ஒருவரையே அரசாங்கம் பெரும்பாலும் பொறுத்துக்கொள்ளக்கூடும். மாகாணக் கூலிப்படையே அரசாங்கத்துக்குத் தேவைப்படுகின்றதேதவிரசுயாதீனமான தமிழர்களல்ல. ஏதேச்சாதிகார ஆட்சிகளைப் பொறுத்தவரை ஒரு முக்கிய பிரச்சினையென்னவென்றால், அரசிடமிருந்து சுயாதீனமாகச் செயற்படக்கூடிய கட்டமைப்புகளையோ அதிகாரத் தளங்களையோ அவை சகித்துக் கொள்வதில்லை. ஏனென்றால், அவ்வாறு செயற்பட அனுமதித்தால் முழு ஆட்சிக்கட்டமைப்பும் நொருங்கி வீழ்ந்துவிடும் என்ற பயமேயாகும்.

நாட்டில் தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரேயொரு மாகாணம் வடமாகாணமேயாகும். இலங்கை-இந்திய சமாதான உடன்படிக்கையும் அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தச் சட்டம் மற்றும் மாகாண சபைகள் கோட்பாடு சகலதுமே கொண்டுவரப்பட்டது தமிழர்களுக்கு சிறிதளவு அதிகாரப் பரவலாக்கத்தைச் செய்வதற்கான நோக்கத்துடனேயே என்ற போதிலும்கூட, தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இந்த மாகாணம்தான் முழு இலங்கையிலுமே அதிகாரப்பரவலாக்கத்தை ஒருபோதுமே அனுபவிக்காத ஒரே மாகாணமாகும். அங்கே மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு மாகாணசபை ஒருபோதுமே வடக்கில் இருந்ததில்லை. இலங்கையின் அரசியல் நீலக்காட்சியில் இதைவிட பிரகாசமான உதாரணம்வேறு எதுவும் இருக்கமுடியாது.

எனவே,ஆணைக்குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக முன்வைக்கப்பட்டிருக்கும் செயற்றிட்டத்தைப் பொறுத்தவரை, சொல்லக்கூடியதெல்லாம், அது ஒரு அநாதை என்பதேயாகும். அதற்கு தாயும் இருக்கப் போவதில்லை, தந்தையும் இருக்கப்போவதில்லை, பராமரிப்பும் இருக்கப்போவதில்லை, சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கு தலைமைத்துவம் இருக்கப் போவதுமில்லை. இந்தக் காரணங்களினால்,நான் நம்பிக்கையிழந்தவனாகவே கருத்துகளைக் கூறவேண்டியிருக்கிறது. இத்திட்டத்தினால் சிறிய விவகாரங்களில் வேண்டுமானால் மட்டுப்படுத்தப்பட்ட பலன்கள் கிடைக்கக்கூடும். இனிமேல், செயற்றிட்டத்தின் ஏற்பாடுகளில் கவனத்தைச் செலுத்துவோம்.




## அடிப்படைகள்

இந்தச் செயற்றிட்டம் தொடர்பான விளக்கங்கள் ஐந்து தலைப்புகளின் கீழ் அட்டவணை வடிவில் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. மனிதாபிமானச் சட்டம் (4) மனித உரிமைகள் (28) காணி மற்றும் மீள்குடியமர்வு (9) நஷ்டஈடு (3) நல்லிணக்கம் (30); செயற்பாடுகள் எத்தனை உருப்படிகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அடைப்புக்குறிக்குள் இருக்கின்ற இலக்கங்கள் குறித்து நிற்கின்றன. இரண்டு மட்டங்களில் இதை ஆராய்வது பயனுடையதாக இருக்கும். (அ) நேரடியான ஆய்வு (ஆ) நுண்ணாய்வு. நேரடியான அணுகுமுறை என்பது செயற்திட்ட ஆவணத்தை நம்பகத்தன்மை உடையதாக எடுத்துக்கொண்டு அதில் முன்வைக்கப்பட்டிருக்கும் யோசனைகளின் தகுதி பற்றியும் புறக்கணிக்கப்பட்டிருப்பவை அல்லது மேலோட்டமாக நோக்கப்பட்டிருப்பவை பற்றியும் ஆராய்வதாகும். விமர்சன ரீதியில் நுண்ணாய்வு செய்யும் அணுகுமுறை என்பது அரசாங்கத்தின் அந்தரங்கமான அணுகுமுறைபற்றி ஆராய்வதாகும்.

மனிதாபிமான சட்டம் பற்றிய பிரிவு குடிசன மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் விரிவான ஆய்வொன்று செய்யப்படவேண்டும் என்ற யோசனையைக் கொண்டிருக்கிறது; மனித உரிமைகள் பிரிவு விரிவான மனித உரிமைகள் கல்வித்திட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டுமென்ற யோசனையையும் காணாமல் போன ஆட்கள் தொடர்பில் ஒருமுகப்படுத்தப்பட்ட தரவுகள் சேகரிக்கப்படவேண்டும், இளைஞர் யுவதிகளையும், ஊனமுற்றோரையும் பரிசோதனை செய்து மீள்பயிற்சி வழங்கவேண்டும் என்ற அந்த யோசனையையும் கொண்டிருக்கிறது. இதுதொடர்பிலான பொறுப்புகள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு (பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொலிஸ் உட்பட) ஒப்படைக்கப்படுகின்றது. ஆனால் தலைமைத்துவம் பற்றிய விடயம் மழுப்பப்படுகிறது. அரசாங்கத் திணைக்களங்கள் கீழ் மட்டத்திலான கடுமையான வேலைகளை நடைமுறைப்படுத்த முடியும். ஆனால் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாணத் தலைவர்கள் இல்லாவிட்டால் அந்த வேலைகள் முடக்கப்படும் என்பது வெளிப்படையானதாகும். மீள்குடியமர்வு மற்றும் புனர்வாழ்வு தொடர்பில் நிறைவேற்றப்பட்டிருப்பதாக அரசாங்கம் உரிமை கோருகின்ற பணிகளுடன் யாழ்ப்பாண மறைமாவட்டம் முற்றுமுழுதாக முரண்படுகிறது. சில ஆயிரம் பேர் மாத்திரமே இன்னும் மீள்குடியேற்றப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்று அரசாங்கம் கூறுகின்ற அதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளை, மறைமாவட்டத்தின் அறிக்கை ஒரு இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் இன்னமும் மீள் குடியேற்றப்படவில்லை என்று தெரிவித்திருக்கிறது. உள்ளூர் மட்டத்திலான பங்கேற்பு அத்தியாவசிய மானது என்பதையே இந்த முரண்பாடு அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

தலைமைத்துவம் ஒன்று கொடுக்கப் பட்டு, வளங்கள் போதுமான அளவுக்கு கிடைக்கச் செய்யப்பட்டால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசியல் வாதிகளின் தலையீடு இல்லாத பட்சத்தில் உள்ளூர் அமைப்புகளினாலும் மத்திய நிருவாக அமைப்புகளினாலும் நியாய மான ஒரு பணியை நடைமுறைச் சாத் தியமான வகையில் செய்யக்கூடியதாக இருக்கும். வழிபாட்டுத் தலங்களுக்கான விஜயங்கள் மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்கும், மீள்குடியேற்றப்பட்ட பகுதிகளில் உள்ள உறவினர்களைச் சந்திப்பதற்கு வெளிநாட்டில் இருந்து வருகின்றவர்களுக்கு இருக்கின்ற கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்கும் கூட திட்டங்கள் இருக்கின்றன. இவற்றை முழுமையாக நடைமுறைப்படுத்துவ தற்கு முறையே 12 மாதங்களும் 6 மாதங்களும் தேவை என்று குறிப்பிடப் பட்டிருப்பது ஏனென்று தெரியவில்லை. உள்ளூர் அதிகாரிகளை சம்மந்தப்படுத் தினால் விதப்புரைகளை நடைமுறைப் படுத்துவதை எளிதாக துரிதப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

காணி மற்றும் மீள்குடியமர்வு என்ற தலைப்பின் கீழ் கூறப்பட்டிருப்பவை பெரும்பாலும் ஏமாற்றேயாகும். எந்த வொரு இலங்கைப் பிரஜைக்கும் நாட்டின் எந்தப் பகுதியிலும் காணியைப் பெற்றுக் கொள்வதற்கு உரிமை இருக்கிறது என்ற ஆரம்பக்குறிப்பைத்தவிர எஞ்சியவற்றில் எந்தச் சாரமும் இல்லை. அரசாங்க நிறு வனங்களினால் காணிகள் அபகரிக் கப்படுவதாக செய்திகள் பரவலாக வந்து கொண்டிருக்கின்றன. உயர் பாதுகாப்பு வலயங்களுக்கென பெறப்பட்ட காணி களை மீளக் கையளிக்கின்ற விடயம் "சாத்தியமான இடங்களில் மீள ஒப் படைத்தல்" என்ற வாசகத்துடன் அலட் சியப்படுத்தப்பட்டிருக்கிறது. அரசியல மைப்புக்கான 13ஆவது திருத்தத்தின் கீழான கொள்கை வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்துவதற்கு நியமிக்கப் படவேண்டிய தேசிய காணி ஆணைக்குழு பற்றி விளக்கமாக எதுவும் இல்லை. அந்த ஆணைக்குழு தொடர்பில் அரசாங்கம் 13ஆவது திருத்தத்தை ரத்துச் செய் வதற்கு அல்லது அத்திருத்தத்தின் ஏற் பாடுகளை மேலும் வலுவிழக்கச் செய் வதற்கு அரசாங்கம் உத்தேசிக்கிறதா என்று சந்தேகிக்கவேண்டியிருக்கிறது. முற்றுமுழுதான நஷ்டஈட்டுக் கொடுப் பனவைச் செய்வதற்கு 24 மாதங்கள் ஒதுக்கப்படுகின்றது. இது உண்மையில் மிக நீண்டகாலமாகும். மீள்குடியமர்த்தப் பட்ட மக்கள் வாக்காளர் இடாப்பில் தங் களது பெயர்களை பதிவு செய்த பிறகே நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகள் செய்யப் படும் என்பது எனது ஊகம்.

கடந்த மார்ச்மாதத்தில் ஜெனீவாவில் ஏற்பட்ட அவமதிப்புக்குப் பிறகு அரசாங் கத்தின் மனம் அலைவுற்றுக்கொண்டே இருக்கிறது. போர் முடிவின் பின்னரான சூழ்நிலைகளில் அரசாங்கம் ஆட்சிசெய்ய வேண்டுமானால் நல்லிணக்க ஆணைக் குழுவின் விதப்புரைகளை நடைமுறைப் படுத்த வேண்டியிருக்கிறது. அந்த விதப் புரைகளில் தேசிய இனப்பிரச்சினைக் கான அரசியல் தீர்வொன்றைக் காண்ப தற்கு அல்லது சிங்கள இராணுவத்தினால் தமிழ்ப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டி ருக்கும் ஆக்கிரமிப்பை முடிவிற்குக் கொண்டு வருவதற்கு உகந்ததல்லாத வற்றை அரசாங்கம் பயறு பொறுக்குவது போன்று தேடித்தேடித் தெரிவுசெய் கின்றது. (சிங்கள இராணுவம் என்ற சொல்லை நான் பயன்படுத்துவது தமிழ்த் தீவிர தேசியவாதியொருவர் பயன்படுத்துகின்ற தொனியில் அல்ல.) அரசியலமைப்புத் திருத்தங்களையும் சட்டங்களையும் நீதித் துறை மீளாய்வுக்கு உட்படுத்துதல், அதிகாரப் பரவலாக்கல், சிறுபான்மைக் கட்சிகளுடன் பேச்சுவார்த் தைகள் நடத்துதல் போன்ற அரசியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த (ஆணை க்குழுவின்) விதப்புரைகளை அரசாங்கம் பெரிதுபடுத்துவதாக இல்லை. "பாராளு மன்ற தெரிவுக்குழுவுக்கு பாரப்படுத்தல்" என்ற வார்த்தைகளுடன் இந்த விவகா ரங்கள் குறுக்கப்பட்டிருக்கின்றன. தற் போதைய தருணத்தில் முக்கியமான அரசியல் விவகாரமாக இருக்கின்ற அதி காரப் பரவலாக்கம் என்பது செயற்திட்டத் தினால் மிக எளிதாகவே அலட்சியப்படுத் தப்பட்டிருக்கின்றது. சர்வகட்சி மகாநாட்டு நிபுணர்குழு, சர்வகட்சி மகாநாட்டு பிரதிநிதித்துவக்குழு, தமிழ்த்தேசியக் கூட்டமைப் புடனான போலியான பேச்சு வார்த்தைகள்போன்ற புஷ்வாணங்களை தொடர்ந்து பாராளுமன்றத் தெரிவுக்குழு காலத்தை இழுத்தடிக்கும் ஒரு மார்க்கம் மாத்திரமேயாகும். எந்தவொருகட்சியும் வேண்டாம் இதுபோன்ற ஏமாற்று வேலைகள் வரிசையாகத் தொடரும்.

சுயாதீனமான பொதுச்சேவை ஆணை க்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென்று யோசனை தெரிவித் திருக்கும் நல்லிணக்க ஆணைக்குழு ஊடகவியலாளர்கள்மீதானதாக்குதல்கள் நிறுத்தப்படவேண்டுமென்று கேட்டிருக் கிறது. பொதுச்சேவை ஆணைக்குழு வைப் பொறுத்தவரையில் சகலதுமே செய்யப்பட்டுவிட்டது என்று செயற்திட்டம் கூறுகிறது. அரசியலமைப்புக்கான 17 ஆவது திருத்தத்தின் கீழ் உள்ள ஏற் பாடுகளின் பிரகாரமான அடிமைத் தனமான பொதுச்சேவை ஆணைக்குழு சுயாதீனமானது என்று இத்தால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. எத்துணை நேர் மையீனம். ஊடகவியலாளர்களுக்கெதி ரான தாக்குதல்களை நிறுத்தும் பணி பாதுகாப்பு அமைச்சிடமும் பொலிஸி டமும் ஒப்படைக்கப்படுகிறது. இந்த ஆட் கடத்தல்களையும் கொலைகளையும் செய்கின்ற ஆட்கள் விரும்பினால் மாத் திரம் அவற்றை நிறுத்தலாம் என்று செயற்திட்டம் அவர்களிடம் அந்தப் பணியை ஒப்படைத்திருக்கிறதுபோல் தெரிகிறது.

அமைச்சரவை உறுப்பினர் ஒருவரி னால் மன்னாரில் நீதித்துறைமீது மேற் கொள்ளப்பட்ட தாக்குதல் குறித்து முஸ்லிம்களுக்கானசெயலகம்அறிக்கை ஒன்றை விடுத்திருக்கிறது. அதன் மிகவும் பிரதானபகுதி முஸ்லிம் மக்களின் அவலங்கள் குறித்து பிரத்தியேகமாக கவனம் செலுத்தியிருக்கிறது. இந்த முஸ்லிம்களில் பெரும்பாலானவர்கள் வறிய மீனவர்களும், விவசாயிகளுமா வர். விடுதலைப் புலிகளினால் சொந்த இடங்களில் இருந்து கொடூரத்தனமாக வெளியேற்றப்பட்டவர்கள். இவர்கள் தற் போது தங்களது நிலங்களுக்கும் தொழில்களுக்கும் திரும்புவதற்கு அக்கறைகாட்டுகிறார்கள். முஸ்லிம்களை வெளியேற்றியதன் மூலம் விடுதலைப் புலிகளினால் தோற்றுவிக்கப்பட்ட வெளி கள் தற்போது தமிழர்களுக்கு ஒதுக்கப் பட்டதன் விளைவாக இந்த நெருக்கடியில் இருக்கக் கூடிய சிக்கலான தன்மைபற்றி முஸ்லிம்களுக்கான செயலகம் விளக் கிக்கூறுகிறது. இரத்தக் களரி ஏற்படுவ தற்கு முன்னதாக இத்தகைய விவகாரங் களுக்கு தீர்வொன்றைக் காண்பதற்கான வழியைத் தமிழர்களுக்கும் முஸ்லிம் களுக்கும் இடையேயான பேச்சுவார்த் தைகள் மாத்திரமே திறந்துவிட முடியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று செயலகம் சரியாக சுட்டிக்காட்டியிருக்கிறது. ஆனால் தமிழ்மக்கள் தங்களது சொந்தப் பிராந்திய பிரதிநிதிகளை தெரிவுசெய்வதற்கு ஏதேச்சாதிகாரத்தன - இனவாத அரசாங்கம் அனுமதிக்க மறுக்கின்ற போது ஒரு தலைமைத்துவத்தை எவ்வாறு ஏற்படுத்துவது?

மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு சுயாதீனமானகுழுஒன்றைஅமைக்கும்விடயத்தில் செயற்திட்டம் முற்றுமுழுதாகவே நழுவிச் சென்று விடுகிறது. தமிழர்கள் மாத்திரம் அல்ல அரசாங்கத்தின் எதிராளிகளான சிங்களவர்களும் ஊடகத்துறையினரும் தொழிற்சங்கவாதிகளும் கூட மனித உரிமைமீறல்களினால் பாதிக்கப்பட்டிருப்பதனால் அவர்களும் சுயாதீன விசாரணைக்குழு அமைக்கப்படவேண்டுமென்ற கோரிக்கையைத் தொடர்ந்து வலியுறுத்துவதில் நாட்டமுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

இறுதியாக ஒரு விடயத்துக்கு வருகின்றேன். தமிழ்ப்பகுதிகளில் இராணுவமயத்தை இல்லாமல் செய்வதற்கான நடிவடிக்கைகளையும் தமிழர்களுக்கும் அரசியல் எதிரிகளுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் எதிராக அரச அனுசரணையுடன் மேற்கொள்ளப்படுகின்ற திட்டமிட்ட உடல்ரீதியான தாக்குதல்களை முடிவுக்குக்கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளையும் செயற்திட்டம் முன்னெடுக்கப்போவதில்லை. அத்தகைய விவகாரங்களில் நல்லிணக்க ஆணைக்குழு தெரிவித்திருக்கக்கூடிய விதப்புரைகள் சகலதுமே பாதுகாப்பு அமைச்சினதும் பொலிஸ் திணைக்களத்தினதும் பரிசீலனைக்கு ஒப்படைக்கப்பட வேண்டும் என்று செயற்திட்டம் கூறுகிறது. இத்திட்டத்தை தயாரித்தவர்கள் கோமாளிகள் அல்லது மண்டை களன்றவர்களாக இருப்பார்களோ என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

பாதுகாப்பு அமைச்சுக்கும் பொலிஸுக்கும் ஒதுக்குவதற்கும் செயற்திட்டம் விபரிக்கின்ற சில முக்கிய பொறுப்புகளை கீழே தருகிறேன்.

1. ஆட்கள் காணாமல் போன சம்பவங்கள், ஆட்கடத்தல்கள் மற்றும் அடாத்தான தடுப்புக்காவல் ஆகியவை தொடர்பான முறைப்பாடுகள்.
2. குடிமக்களுக்கு மரணம் அல்லது உடல்காயம் ஏற்பட்டிருக்கக் கூடும். அத்தகைய சம்பவங்களுக்கு பிழையான நடத்தைகள் காரணமென்று விசாரணைகளில் தெரியவந்தால் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுத்து தண்டனை வழங்குதல்.

பாதுகாப்பு அமைச்சின் உயர்மட்டப் பதவிகளில் இருப்பவர்கள் அகற்றப்படாதவரை பலபாவச் செயல்கள் குறித்து உகந்த விசாரணை நடைபெற முடியாது என்பதைச் சுட்டிக்காட்டி ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் ஏன் பாராளுமன்றத்தில் ஒரு பிரேரணையைக் கொண்டுவரத் தயங்குகின்றனர் என்பது எனக்கு இன்னமும் புதிராகவே இருக்கிறது


3. சனல் 4 வீடியோ தொடர்பான விசாரணை.
4. சட்டவிரோத ஆயுதக்குழுக்கள்; குற்றமிழைத்தவர்களுக்கெதிரான குற்றவியல் விசாரணை நடத்துதல்.
5. ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள், தொல்லைகளை, துன்புறுத்தல்களை தடுத்தல். வடக்கு, கிழக்கில் ஊடகவியலாளர்களின் சுதந்திரமான நடமாட்டத்தை உறுதிப்படுத்தல்.

குற்றமிழைத்தவர்கள் தங்களைத் தாங்களே விசாரித்து தண்டனை வழங்க வேண்டுமென்று கூறுவதுபோலல்லவா இது இருக்கிறது. பாதுகாப்பு அமைச்சின் உயர் மட்டத்தில் ஆளணி முற்றுமுழுதான மாற்றங்கள் செய்யப்படாத பட்சத்தில் பக்கச்சார்பற்ற விசாரணையும் சட்டநடவடிக்கையும் ஒருபோதும் சாத்தியமில்லை என்று நான் ஜெனீவா ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தீர்மான நாட்களிலிருந்து திரும்பத் திரும்பக் கூறிவந்திருக்கிறேன். பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவை பதவியிலிருந்து நீக்கவேண்டுமென்ற கோரிக்கைகள் தாராளவாத சிந்தனை கொண்டவர்களிடமிருந்து வந்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. மார்க்சிய இடதுசாரிகளின் கோரிக்கைக்கு இவர்களது குரலும் வலுச்சேர்த்திருக்கிறது. எவ்வாறெனினும் பாதுகாப்பு அமைச்சின் உயர்மட்டப் பதவிகளில் இருப்பவர்கள் அகற்றப்படாதவரை பலபாவச்செயல்கள் குறித்து உகந்தவிசாரணை நடைபெற முடியாது என்பதைச் சுட்டிக்காட்டி ஐக்கியதேசியக் கட்சியும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் ஏன் பாராளுமன்றத்தில் ஒரு பிரேரணையைக் கொண்டுவரத் தயங்குகின்றனர் என்பது எனக்கு இன்னமும் புதிராகவே இருக்கிறது. தனிப்பட்ட முறையில் எவர்மீதும் எனக்கு இருக்கக்கூடிய ஆத்திரத்தினால் நான் இதைக் கூறவில்லை. பாரபட்ச விசாரணையை நடத்துவதற்கும் இராணுவத்தினால் ஜனநாயகம் அரித்தெடுத்துச் செல்லப்படும் போக்கை தடுத்துநிறுத்துவதற்கும் இது அத்தியாவசியமானதாகும் என்பது எனது உறுதியான அபிப்பிராயமாகும்.

நான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட யாழ்ப்பாண மறைமாவட்ட அறிக்கை "பௌத்தமயமாக்கல்" (மதத்தலங்களை நிர்மாணிப்பதற்கு இராணுவத்தையும் அரச அதிகாரத்தையும் பயன்படுத்துதல்), பொதுமக்களையும் மதகுருமாரையும் இராணுவத்தினரும் பொலிஸாரும் வெளிப்படையாகவே அச்சுறுத்தல், அரசாங்கமும் ஏனைய சில ஏஜன்சிகளும் உலகுக்கு கூறுகின்றவற்றிற்கும் முற்றிலும் முரணாக மண்ணில் நிலவுகின்ற படுமோசமான சூழ்நிலைகள் பற்றி விரிவாகக் கூறுகின்றது. அரசாங்கத்தின் நிலைப்பாட்டுக்கு எதிரான திருச்சபையின் நிலைப்பாட்டைத் தான் இந்த அறிக்கை வெளிப்படுத்துகிறதாக இருந்தால் நான் திருச்சபையின் கருத்தையே உண்மையென்று ஏற்பேன். நான்ஒருசமயப்பற்றுக்கொண்டபேர்வழி அல்ல என்ற போதிலும் கூட திருச்சபையின் உணர்வை மதிக்கின்றேன்.

எனவே இறுதியாக ஒன்றைக்கூற விரும்புகின்றேன். மக்களினால் சுதந்திரமாக தெரிவுசெய்யப்படுகின்ற சிவிலியன் அதிகாரக் கட்டமைப்புகள் நிறுவப்படாவிட்டால்நல்லிணக்கத்துடன்தொடர்புடைய விவகாரங்களைக் கையாள்வதற்கான ஒரு செயற்திட்டம் வெறும் வஞ்சனையும் ஏமாற்றுதலுமேயாகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இந்தியா என்ன செய்யப் போகிறது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்கள் ஆகட்டும், அல்லது சிங்களவர்கள் ஆகட்டும், இந்தியா மற்றும் இலங்கையில் உள்ள மக்களிடையேயான சரித்திர மற்றும் கலாசார உறவுகள் குறித்து இரு வேறு கருத்துக்கள் இருக்க முடியாது. அது போன்றே இரு நாடுகளும் அடுத்தடுத்து சுதந்திரம் அடைந்த காலம் தொட்டு இலங்கையில் தொடங்கிய பல்வேறு பிரச்சினைகளின் பரிமாணத்திலும், தீர்வுகளிலும் கூட இந்தியாவின் பங்களிப்பை மறுக்கவோ அல்லது மறைக்கவோ முடியாது. இதுவே போர்க் காலத்திலும் போருக்கு பிந்தைய சமாதான பேச்சுவார்த்தையிலும் தொடர்ந்தது.

இன்றைய நிலைமையும் சூழ்நிலையும் என்ன? பண்டைகால சரித்திரம் மற்றும் சமகால சரித்திரத்தில் இலங்கை-இந்திய உறவுகள் உயர்வு-தாழ்வுகளைச் சந்தித்து வந்துள்ளது. இலங்கையில் உள்ள தமிழர்கள் ஆகட்டும், சிங்களவர்கள் ஆகட்டும், தங்களது சரித்திரம் குறித்த எண்ணவோட்டம் மற்றும் சமகால அரசியல் சூழ்நிலைகளுக்கு ஏற்ப இந்தியா குறித்த தங்களது நிலைப்பாடுகளை மாற்றி வந்துள்ளனர். தங்களது எண்ணவோட்டத்திற்கு ஏற்ப மட்டுமே இந்தியா செயல்பட வேண்டும் என்று நினைத்துச் செயல்படுவதை வாடிக்கையாக கொண்டுள்ளனர்.

இருபாலரும் நினைப்பதைப் போன்றே இந்தியா செயல்பட்டால் மட்டும் இந்தியா அவர்களுக்கு நல்லவர்கள் ஆகி விட முடியாது. ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு பிரச்சினையிலும் இந்தியா தாங்கள் நினைப்பதை மட்டுமே ஏற்றுக் கொள்ள வேண்டும், செயல்பட வேண்டும் என்று மட்டுமே நினைப்பவர்கள். இந்த இருபாலரிடமிருந்தும் என்றென்றைக்கும் "நல்லவன்" என்ற சான்றிதழை இந்தியா பெற முடியாது. ஆனால், இந்த இருபாலரும் கூட என்றைக்குமே, எந்த ஒரு பிரச்சினையிலும் ஒருபோல சிந்தித்து செயல்பட்டதில்லை என்பதே உண்மை.

இதற்கு சமகாலத்தில் ஒரே ஒரு விதிவிலக்கு உண்டு. பிரேமதாசா ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இலங்கை அரசும் விடுதலைப் புலிகள் இயக்கமும் ஒரு சேர திட்டமிட்டு இந்திய அமைதிப் படைக்கு எதிராக சதி செய்தார்கள். இந்திய அமைதிப் படையைத் தாக்குவதற்கு, இலங்கை அரசே, விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு ஆயுதம் கொடுத்து உதவினார்கள் என்பதே உண்மை. அந்தக் காயத்தின் வடுவும் அந்தச் சதியின்



என்.சத்தியமூர்த்தி

**இந்தியாவைப் பொறுத்த வரையில் இலங்கை இனப்பிரச்சினை குறித்த விடயங்களில் தனி முடிவுகள் எடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அதற்காக அந்த முடிவுகள் அனைத்துமே இலங்கைக்கு எதிரானவையாகவே இருக்கும் என்று யாரும் கருதிவிட வேண்டாம்**

காரணம் குறித்தும் இன்றும் இந்தியாவிற்கு புரியாத புதிராகவே இருந்து வருகிறது.

அதுவும், இலங்கையில் உள்ள தமிழ் மக்களைக் காப்பாற்றுவதற்காகச் சென்ற அமைதிப் படையினருக்கு, தங்களை ஏன் விடுதலைப் புலிகள் இயக்கம் தாக்கியது என்பது மீளாத அதிர்ச்சியாகவே இருந்து வந்துள்ளது. அது போன்றே, விடுதலைப் புலிகள் இயக்கத்தினரோடு தாங்கள் சமர் செய்து வந்த காலகட்டத்தில், அவர்களுக்கு இலங்கை அரசு ஆயுதம் கொடுத்து உதவியதும் அவர்களால் ஜீரணிக்க முடியாத விடயமாகவே இன்றைக்கும் இருந்து வருகிறது.

சுதந்திரத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில், இந்தியாவின் பரப்பளவு, மக்கள் தொகை, தெற்காசியாவில் இந்தியாவின் அரசியல், பொருளாதாரம் மற்றும் இராணுவப் பலம், உலக அரசியலில் இந்தியாவிற்கு கிடைத்து வரும் முக்கியத்துவம் மற்றும் மரியாதை ஆகியவற்றை, இலங்கை அரசு சந்தேகக் கண்ணுடனேயே பார்த்து வந்துள்ளது. கடந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1971-ஆம் ஆண்டு "வங்க தேச போருக்கு" பின்னர் அதே இடத்தில் தன்னை வைத்துப் பார்த்து, இலங்கை அரசும் ஒருவித அச்ச உணர்வை தனக்குத்தானே வளர்த்துக் கொண்டு அதில் ஒரு வித குரூரமான திருப்தியும் அடைந்து வந்துள்ளது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் முன்பாக துத்தகமனு-எல்லாளன் இடையேயான போட்டியில் தங்களது பக்கம் தோல்வி அடைந்ததை, இன்றைக்கும் இலங்கைத் தமிழினம் ஏற்றுக் கொள்ளவில்லை. அது போன்றே அந்தப் போரில் கிடைத்த வெற்றியை இன்றைய தலைமுறைக்கும் உள்ள சிங்களப் பேரினவாதிகள் மறக்கத் தயாரில்லை. அதுவும் இருபாலாருக்கும் இடையே உள்ள இனப்பிரச்சினைக்கு வித்திட்டு, விருட்சமாக்கி வளர்த்து வந்துள்ளது.

அது போன்றே, ஆயிரம் ஆண்டுகளுக்கு பின்னர் இந்தியாவில், தமிழ் நாட்டில் இருந்து இராஜராஜ சோழன் இலங்கையைக் கைப்பற்றியதை, இலங்கைத் தமிழினம் எல்லாளனின் தோல்விக்குப் பதிலடியாகவே பார்த்து வந்துள்ளது. எனவே தமிழ் நாட்டில் இருந்து தொடர்ந்து கிடைத்து வரவேண்டிய ஆதரவு குறித்த அவர்களது எதிர்பார்ப்பும் அதிகமாகவே இருந்து வந்துள்ளது. அதே காரணத்திற்காக, சிங்களப் பேரினவாதிகள் இராஜராஜ சோழன் காலம் தொட்டு, தமிழர்களையும் தமிழ் நாட்டையும் சந்தேகக் கண்ணுடனேயே பார்த்து வந்துள்ளார்கள்.

இலங்கைத் தமிழர்கள் மற்றும் சிங்களவர்களிடையே இரு நாட்டு உறவுகள் மற்றும் பிரச்சினைகள் குறித்த சமகால சிந்தனைகளுக்கும் செயல்பாடுகளுக்கும் அடிப்படையே தங்களது கடந்த காலம் குறித்த அவர்களது தவறான எண்ணவோட்டம் தான் எனலாம். ஆனால் அவர்களது கடந்த காலம் குறித்த உணர்வுகள் குறித்து இந்தியாவில் எவருமே என்றைக்குமே உணர்ந்து சிந்தித்ததில்லை, செயல்பட்டதும் இல்லை. இந்திய அரசு ஆகட்டும், பல்வேறு அரசியல் கட்சிகள்ஆகட்டும், இலங்கை குறித்த தங்களது எண்ணம் மற்றும் உணர்வுகளை தற்காலத்தோடு மட்டுமே இணைத்துப் பார்த்திருக்கிறார்கள், கற்காலத்தில் அல்ல.

அந்த விதத்தில், இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை குறித்த தமிழ் நாட்டு மக்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் அனுதாபமும் பின்னர் ஆதரவும் 1983-ஆம் ஆண்டு "இன தாக்குதல்களுக்கு"

பின்னரே தோன்றிய ஒரு நிகழ்வு. இதில் சரித்திரம் குறித்த தமிழ் நாட்டின் உணர்விற்கு இடமே இருந்ததில்லை. இதற்கு, மதம் மட்டும் இனம் குறித்த கருத்துக்கள் இல்லாத இந்திய பாட முறைகளும் பாடப் புத்தகங்களும் கூட ஒரு காரணம்.

இராஜராஜ சோழன் குறித்த தமிழ் நாட்டின் சிந்தனை ஓட்டம், அவரது தென் கிழக்கு ஆசிய படையெடுப்பும் அதனால் சரித்திரத்தில் இடம் பெறும் சோழர் காலத்திய கடற்படையின் சிறப்பும் மட்டுமே தமிழ் நாட்டில் முக்கியமாக கருதப்பட்டு வந்துள்ளது. அதற்கும் அப்பால் சென்று அவர் காலத்தில் ஜனநாயக ஆட்சி முறையை குறிக்கும் "குடவோலை" முறையும் மதம், கட்டிடக் கலை மற்றும் கலாசாரம் ஆகியவற்றின் சின்னமான தஞ்சை "பெரிய கோவில்" போன்றவையே தமிழ் நாட்டு மக்களுக்கு நினைவிற்கு வரும்.

இன்னும் சொல்லப் போனால், இராஜராஜனின் "இலங்கைப் படையெடுப்பு", அவன் குறித்த தமிழ் நாட்டு சரித்திரத்தின் ஒரு அடி குறிப்பு மட்டுமே. ஆனால், அதுவே இலங்கையின் அரசியலில் விஸ்வரூபம் எடுத்து விளையாடி விட்டது, இதனை விதி செய்த சதி என்றே கூற வேண்டும். சுதந்திரத்திற்குப் முன்னரும் பின்னரும், இன்றளவும் இந்தியாவில் உள்ள எவருமே இலங்கையில், இத்தகைய சரித்திரம் தோற்றுவித்த உள்நாட்டு உணர்வுகளை உணர்ந்து அரசியல் செய்யவோ, அரசின் கொள்கைகளை வகுக்கவோ முயன்றதில்லை.

இந்த உண்மை புரியாமலே இலங்கையில் தமிழர், சிங்களவர் என்ற இருபாலரும் அரசியல் செய்து வந்துள்ளனர். கடந்த முப்பது ஆண்டுகளில் இராஜராஜன் போன்றோரோடு இலங்கைத் தமிழர்கள் செய்து கொண்ட உணர்வுபூர்வமான ஒப்பந்தம் நீர்த்து போய் விட்டால், அதற்கு சமகால அரசியலே காரணம். தமிழர்களைப் பொறுத்த வரையில், 1983-ஆம் ஆண்டு துவங்கி அனுபவித்து வரும் இன்னல்களும் கண்டும் காணாமல் போன அரசியல் ஆதாயங்களும் போர்முனை வெற்றிகளும் இதற்கு காரணம். இலங்கை அரசிற்கும் சிங்கள பேரினவாதிகளுக்கும் இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய கால கட்டத்தில் பெருகி வந்துள்ள இந்தியாவின் உலகளாவிய முக்கியத்துவமே போதுமானது.

## "பனிப்போருக்கு" பின்னால்

கடந்த 1983-ஆம் ஆண்டை ஒட்டிய தசாப்தங்களில், இந்தியர்-இலங்கை உறவு முறை, உலகளவில் அமெரிக்கா-சோவியத் யூனியன் ஆகிய இரு தரப்புகளிடையேயான "பனிப்போருடன்" இணைத்தே பார்க்கப்பட்டது. ஒரு கால கட்டத்தில், இரு தெற்காசிய நாடுகளும் அரசுமுறையில் மேற்கத்திய ஜனநாயகம், அதேசமயம் பொருளாதாரக் கொள்கையில் சோவியத் சோஷலிஸம் என்ற அடிப்படையில் தனித்தனியே முன்னேறின.

பிற்காலத்தில், இலங்கைப் பொருளாதாரம் அமெரிக்காவுடன் சேர்த்தே பார்க்கப்பட்ட "சந்தைப் பொருளாதாரமயமாக்கல்" கொள்கையை ஏற்றுக் கொண்டது. இதில் உள்நாட்டில் இலங்கை சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றின் வேறுபட்ட கொள்கைகள் மற்றும் வாக்கு வங்கி சார்ந்த அரசின் முடிவுகள் ஆகியவையும் குழப்பம் விளைவித்தன. இன்றளவும், இது போன்ற ஒரு நிலைப்பாட்டை இலங்கையில் உள்ள சில அறிவு ஜீவிகளும் அரசு சார்ந்த கொள்கையாளர்களும் எடுத்தே வந்துள்ளனர்.

இந்தியாவில், மத்திய அரசில் எந்தக் கட்சியோ, தலைவரோ பதவியில் இருந்தாலும் வெளிநாட்டுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் கொள்கை ஆகியவற்றில் அரசியல் தலையீடு அதிகம் இருந்ததில்லை. இந்தியாவில் இத்தகைய முடிவுகளை எடுக்கும் அரசு இயந்திரங்களில் பல தசாப்தங்களாக தொடர்ச்சியான சிந்தனையும் செயல்பாடும் இருந்து வந்துள்ளது. ஆனால் தமிழ் நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் இலங்கை குறித்த மத்திய அரசின் கொள்கை முடிவுகளில் தாக்கம் ஏற்படுத்த முயன்று வந்துள்ளன.

"பனிப்போர்" காலங்களில், இந்தியா-இலங்கை உறவுகள் பழைய நட்பு நிலையில் இருக்கவில்லை என்றாலும், இனப்பிரச்சினையின் தாக்கம் அதனைப் பலவாறாகப் பாதித்தது. அதுவரை, இந்தியாவுடனான உறவுகள் வேறு, இனப்பிரச்சினை வேறு என்று கருதி செயல்பட்ட இலங்கை அரசு கொள்கை முடிவு எடுப்போரும், உள்நாட்டு அறிவு ஜீவிகளும் இரண்டையும் முடிச்சுப் போட்டு பார்க்கத் துவங்கினார்கள். அப்படித் தான், வங்கதேச போருக்கும் இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியாவின் நிலைப்பாட்டிற்கும் முடிச்சுப் போட்டு பார்த்தார்கள். அதே தவறைத் தான், தமிழ் அரசியல் தலைமைகளும் போராளிக் கும்பல்களும் செய்தன.

இலங்கைத் தமிழ் இளைஞர் போராளி குழுக்களுக்கு இந்தியா ஆயுதம் மற்றும் ஆயுதப் பயிற்சி அளித்ததும் இந்த வகையில் தான். இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் அரசு மற்றும் அரசு ஆதரவு பெற்ற வன்முறைக் குழுக்களுக்கும் எதிரே தங்கள் மக்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் தான் இந்தியா ஆயுதப் பயிற்சி அளித்தது. அதில் இலங்கையைத் துண்டாட வேண்டும் என்ற எண்ணம் என்றும் இருந்திருக்க முடியாது.

ஒரு வாதத்திற்கு என்று எடுத்துக் கொண்டால் கூட, பனிப்போர் காலகட்டத்தில் கூட, இலங்கை துண்டாடப்பட்டால் அது தனது பாதுகாப்பையும் பாதுகாப்பு உணர்வையும் அதிகரிக்கும் என்று

> கிழக்கு மாகாண சபைத்தேர்தல் குறித்த இந்திய அரசின் எண்ணவோட்டமும் இரண்டுபட்டே இருக்கும். கிழக்கு மக்கள் எத்தகைய அரசை விரும்புகிறார்களோ தேர்தலுக்குப் பின்னர் எத்தகைய கூட்டணி அரசு அமைகிறதோ அந்த அரசுடன் இனப்போருக்குப் பிந்திய மக்கள் நலத் திட்டப்பணிகள் போன்றவற்றை இந்தியா தொடரும். தமிழ்த் தேசியக்கூட்டமைப்போ மற்றைய கட்சிகளோ தங்களது அரசியல் முடிவுகளுக்கு மாத்திரம் தனது ஆதரவைக் கோருகின்றன என்பதை இந்தியா நன்கு அறியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியா கருதி இருக்க முடியாது. வங்கதேச பிரச்சினையில் கூட இந்தியா இடைபட்டது பின்னொரு காலத்தில் தான். அந்தப் பிரச்சினையை துவக்கியதே பாகிஸ்தான் அரசு தான். அங்கு நடந்த உள்நாட்டு கலகத்தை இந்திய அரசே தூண்டி விட்டதாக இன்றளவும் பாகிஸ் தான் குற்றம் சாட்டியதில்லை.

கோடிக் கணக்கில் வங்கதேச அகதிகள் இந்தியாவில் தஞ்சம் புகுந்த போது, இந்தியாவின் ஆளுமை, வடகிழக்கு மாநிலங்களில் ஏற்பட்ட மக்கள் தொகை மாற்றங்கள், எதிர்பாராத செலவுகள் மற்றும் உள்நாட்டு பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் ஆகியவை காரணமாகவே இந்திய அரசு அங்கு இடைபட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. என்றாலும், இந்தியாவுடனான போரை பாகிஸ்தானே துவங்கியது. போரில் தோல்வி அடைந்ததும், பாகிஸ்தான் படை இந்தியாவிடம் சரணடைந்தது. வங்கதேச உருவாக்கம், அதற்கு இந்தியா அங்கீகாரம் அளித்தது ஆகியவை போருக்கு முந்தைய கால கட்டத்திலேயே நடந்து முடிந்து விட்டது.

எழுபதுகளின் துவக்கத்தில் வங்க தேசத்தில் நடந்ததே எண்பதுகளின் மத்தியில் இலங்கையில் அரங்கேறியது. ஒரே யொரு வித்தியாசம். பாகிஸ்தான் இரண்டாகப் பிளவுபட்டது இந்தியாவிற்கு அரசியல் மற்றும் பாதுகாப்பு ரீதியாக வரவேற்கத்தக்க விடயம். ஆனால், இலங்கை இரண்டுபடுவது, அன்றும் சரி, இன்றும் சரி, என்றுமே சரி, இந்தியாவிற்கு நன்மை பயக்காது. ஏன், இலங்கையில் தொடர்ந்து வந்த போர்ச் சூழலில், இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகவே அமைந்தது. வங்கதேசபோரை திட்டமிட்ட மூன்று வாரங்களுக்குள் முடிவுக்கு கொண்டு வந்த இந்திய அரசு தரப்பு, இலங்கையில் ஒன்றுபட்ட நாடே இரு நாடுகளுக்குமே நன்மை பயக்கும் என்பதையும் உணர்ந்தே இருந்திருக்கும்.

பனிப் போருக்குப் பிந்தைய காலகட்டத்தில், இலங்கையில் அமைதிப் படையினருக்கு ஏற்பட்ட அவமானம் மற்றும் ராஜீவ் காந்தி படுகொலை சம்பவம் ஆகியவற்றின் பின்னணியில் இந்தியா பாராமுகமாகவே இருந்தது. அது அதிக காலம் நீடித்திருந்திருக்க முடியாது. பிரபாகரன் என்ற தனி மனிதனுடனான இணக்கப்பாடு குறித்த பிரச்சினையில் இலங்கையுடனான இரு நாட்டு உறவுகளை இந்தியா என்றென்றைக்கும் ஒதுக்கி வைத்திருக்க முடியாது. ஆனால் அது போன்ற எண்ணத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் தொண்ணூறுகளில் இருந்து வந்ததோ என்ற எண்ணம் உருவாகியுள்ளது. அது தவறான முடிவு என்பதை பிற்காலத்தைய சம்பவங்கள் உறுதிப்படுத்தி உள்ளன.




என்றாலும் இனப்போர் தொடரும் என்ற எண்ணமும் உணர்வும் தொடர்ந்து இருந்து வந்துள்ள காலகட்டத்தில், அது குறித்த இருநாட்டு உறவுகள் அமைதிப் படையினர் காலத்தை ஒட்டியே தொடர்ந்தது எனலாம். இடைப்பட்ட காலத்தில், இந்தியாவின் இந்த எண்ணம் மாறுவதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்பதே உண்மை. இனப்போர் மீண்டும் தொடங்கியகாலகட்டத்தில்இந்தியாஎந்தவிதமான முடிவை எடுக்கும் என்பதை விடுதலைப் புலிகள் இயக்கமும், அதனை ஆதரித்து வந்த புலம்பெயர் தமிழர் தலைமையும் தவறான உத்தியைக் கையாளுகிறோம் என்று தெரிந்தே தங்களது முடிவுகளை எடுத்தன என்பதே உண்மை.

## இன்றைய நிலைமை என்ன?

இன்று இனப்போர் முழுவதுமாக முற்றுப்பெற்றுள்ள வேளையில், இலங்கை குறித்த தனது கொள்கைகளை பரிசீலனை செய்ய இந்தியாவிற்கு ஒரு கட்டாயம் ஜெனீவா மனித உரிமை கவுன்சில் வாக்களிப்பு சமயத்தில் தோன்றியது என்னவோ உண்மை. இதனால் இலங்கையைஎதிர்க்கும்அமெரிக்காவின் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கவும் செய்தது. என்றாலும், இலங்கை கோராமலே அன்றும் அமெரிக்காவின் தீர்மானத்தில் மாற்றங்களை கொண்டு வருவதற்கு இந்தியாவே வகை செய்தது.

தீர்மானத்திற்கான இந்தியாவின் ஆதரவு, இரு நாட்டு உறவுகளுக்கு அப்பால் சென்றது. அது போன்றே அந்தத் தீர்மானத்தில் இந்தியா உள்ளடக்கிய மாற்றங்களும் இருநாட்டு உறவுகள் என்பதற்கும் அப்பால் சென்றது. சீன உட்பட்ட இருநாட்டுப் பிரச்சினைகளுடன் இரண்டையுமே இந்தியா இணைக்கவில்லை. மாறாக, ஜெனீவா வாக்களிப்பு விடயத்தில், தமிழ் நாட்டிற்கும் அப்பால் சென்று நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளின் பாராளுமன்ற கோரிக்கையை இந்திய அரசால் உதாசீனம் செய்யமுடியவில்லை என்பதே உண்மை.

இதனைத் தொடர்ந்து, இருநாட்டு உறவுகளிலும் ஏற்படும் என்று கருதப்பட்டுள்ள முக்கிய மாற்றங்கள் எதுவும் தோன்றி விடவில்லை. மாறாக, இந்திய அரசின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், மற்றும் மத்திய அமைச்சர்கள் ஜெயராம் ரமேஷ், ஆனந்த சர்மா ஆகியோரின் இலங்கைப் பயணத்திற்குப் பின்னர் இருநாட்டு உறவுகள் மேம்பட்டுள்ளன என்றே எண்ணத்தோன்றுகிறது.

குறிப்பாக அமைச்சர் ஆனந்த சர்மாவின் அண்மைக்கால விஜயத்தின் போது கிழக்கு மாகாணம் திருகோணமலையில் ஒரு தொழிற்பேட்டை அமைப்பது குறித்து முடிவு செய்யப்பட்டது. அந்த தொழிற்பேட்டை, தமிழ்நாடு உட்பட்ட தென் மாநிலங்களில் உள்ள கார் மற்றும் இன்ஜினியரிங் தொழிற்சாலைகளுக்கான உதிரிப் பாகங்களை தயார் செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் வாயிலாக கிழக்குப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு, நாட்பட்ட காலத்தில் உயர் கல்வி வாய்ப்பு ஆகியவை ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

இந்தியாவைப் பொறுத்தவரையில் இனப்பிரச்சினை குறித்த விடயங்களில் தனி முடிவு எடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அதற்காக, அந்த முடிவுகள் அனைத்துமே இலங்கைக்கு எதிரானதாகவே இருக்கும் என்று யாரும் கருதிவிட வேண்டாம். உதாரணத்திற்கு, "கற்றுக் கொண்ட பாடங்கள்" கமிஷனின் அறிக்கையைச் செயல்படுத்துவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைத்துள்ள குழு, இந்தியாவின் ஜெனீவா எதிர்பார்ப்புகளைச் சந்திக்கும் என்றே எண்ணத் தோன்றுகிறது.

இந்திய மத்திய அரசில் இடம்பெற்றுள்ள தி.மு.க தலைமை சென்னையில் நடத்திய "டெசோமாநாடு" வெற்றிபெற்றிருந்தால் எதிர்வரும் ஜெனீவா மக்கள் உரிமைக் கவுன்சில் கூட்டங்களில் இந்தியா வேறு நிலைப்பாட்டை எடுக்க முடியாத நிலைமை தோன்றியிருக்கலாம். மாறாக, டெசோ மாநாடு குறித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்களிப்பும் சமிக்ஞைகளும் இனப்பிரச்சினை குறித்த தி.மு.க.வின் திட்டங்களிலேயே மாறான எண்ணவோட்டத்தை ஏற்படுத்தி இருக்கும்.

அந்த வகையில் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் குறித்த இந்திய அரசின் எண்ணவோட்டமும் இரண்டுபட்டே இருக்கும். அதாவது, இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண வேண்டும் என்று இலங்கை அரசை வற்புறுத்தும் அதே வேளையில், இலங்கையில் நடைபெறும் உள்நாட்டுத் தேர்தலில் இந்தியா எந்த விதத்திலும் கருத்துச் சொல்லவோ தலையிடவோ முயலாது. தமிழர் பகுதிகளில் கூட்டமைப்பும், முஸ்லிம்கள் பகுதியில் அந்த இனத்தைச் சார்ந்த முஸ்லிம் காங்கிரஸ் உள்ளடங்கிய கட்சிகளும், சிங்களவர் பகுதிகளில் ஆளும் கூட்டமைப்பும் அதிக இடங்களில் வெற்றி பெறும் என்பது போன்ற கணக்கை இந்திய அரசும் உணர்ந்தே இருக்கும்.

மற்றப்படி, பிராந்திய மக்கள் எத்தகைய அரசை விரும்புகிறார்களோ, தேர்தலுக்குப் பின்னர் எத்தகைய கூட்டணி அரசு அமைகிறதோ, அந்த அரசுடன், இனப்போருக்கு பிந்தைய மக்கள் நலத்திட்ட பணிகள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் ஆகியவற்றை இந்தியா தொடரும். அல்லாது, கூட்டமைப்போ மற்றக் கட்சிகளோ தங்களது அரசியல் முடிவுகளுக்கு மட்டுமே இந்தியாவின் ஆதரவைக் கோருகிறது என்பதையும், எந்தப் பிரச்சினையிலும், எந்தச் சூழ்நிலையிலும் தங்களுக்குச் சாதகமான நிலையை இந்தியா எடுக்காவிட்டால், தன்னைத் தூற்றிப் பேச தயங்கமாட்டார்கள் என்ற சரித்திர உண்மையையும் இந்தியா அனுபவபூர்வமாகவும் உணர்ந்தே உள்ளது. ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்

# இலங்கைக்கான அரசியல் சீர்திருத்தம் வேண்டும் புதிய அணுகுமுறை

பி.பி.தேவராஜ்

சோல்பரி அரசியல் யாப்பில் அடிப்படை உரிமைகள் பற்றி அத்தியாயம் இடம்பெற வில்லை. 29(2) உறுப்புரை சிறுபான்மையினருக்கு பாதுகாப்பாக இருக்கும். அவர்களுடைய அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாத மளிக்கும் என்று கூறப்பட்டது வெறும் கானல் நீராகவே முடிந்தது.


CEYLON STATE COUNCIL AND SECRETARIAT, GALLE FACE, COLOMBO.

அரசியல் சீர்திருத்தம் பற்றிய பேச்சு இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தி லிருந்தே நடந்து கொண்டிருக்கின்றது. இந்திய வம்சாவளி தமிழர் 1948 ஆம் ஆண்டிலிருந்தே தங்கள் பிரஜாவுரிமையையும் பிரதிநிதித்துவத் தையும் மீளப்பெறப் போராடி வருகின்றனர். இப்போது சட்டப்படி பிரஜாவுரிமை கிடைத்து விட்டாலும் இன்னும் முழுமையான பிரஜாவு ரிமை அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இதற்கு அரசியல் சீர் திருத்தங்களும் நிர்வாகக் கட்ட மைப்பின் மாற்றமும் அவசியமாகவுள்ளது.

1948 - 1950களிலிருந்தே வடகிழக்கை பூர்வீகப் பூமியாகக்கொண்ட இலங்கைத் தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடி வருகிறார்கள். இதற்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. 13ஆவது சீர்திருத்தம் கொண்டுவரப் பட்டு மாகாண சபைகள் அமைக்கப்பட்டாலும் பிரச்சினை இன்னும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது. இப்பொழுது அது மேலும் தீவிரமடைந்துள்ளது. பல்வேறு சமரச முயற்சி களும் பேச்சுவார்த்தைகளும் நடந்துகொண்டி ருக்கின்றன. போர் பாரிய அழிவுகளை ஏற் படுத்தியுள்ளது. மக்கள் எண்ணற்ற துன்பங் களுக்கு ஆளாகியுள்ளார்கள். தமிழ் மக்களுக்கு எதிராக பேரினவாதப் போக்கு எப்படியெல் லாமோ வெளிப்படுகிறது.

இப்பொழுது முஸ்லிம் மக்களுக்கெதிராக நடிவடிக்கைகளும் அரங்கேறி வருகின்றன. நாட்டில் சட்ட ஒழுங்குப்பிரச்சினையும் எழுந் துள்ளது. இக்கட்டான இந்தச் சூழ்நிலைமையில் அரசியல் சீர்திருத்தம் பற்றி எவ்வாறு சிந்திப்பது, என்ன செய்யலாம் என்ற கேள்விகள் நம்மை பயமுறுத்திக் கொண்டிருக்கின்றன. ஆனால் எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையும் மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்ற மன உறுதியும் அவசியமாகும். இந்தப் பின்னணியில் தான் இந்திய வம்சாவளி மக்கள் கண்ணோட்டத்திலிருந்து புதிய அணுகுமுறைகள் பற்றி ஒரு தேடல் அவசியம் என்பதை மனதிற் கொண்டு இக்கட்டுரை எழுதப் படுகின்றது. இது ஓர் ஆரம்பத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடனேயே எழுதப்பட்டுள்ளது. இது பற் றிய கருத்துப் பரிமாற்றங்களை விரிவு படுத்துவது முக்கியமாகும்.

"இலங்கையில் இதுவரை அறிமுகமாகிய அரசியல் யாப்புகளை ஒப்பீட்டு அடிப்படையில் நோக்கும் போது பலவீனங்கள் இருந்தாலும் சோல்பரி (Soulbury) அரசியல் யாப்பே மற்றைய யாப்புகளை விடச் சிறந்ததென்று கூறமுடியும்." இவ்வாறு அண்மையில் நடை பெற்ற ஒரு கருத்தரங்கில் கொழும்பு பல் கலைக்கழக சட்டத்துறை பீடாதிபதியும் மனித உரிமைகள் விடயங்களில் ஆய்வுகள் மேற் கொண்டு அதிக அக்கறை செலுத்துபவருமான தீபிகா உடகம (Deepika Udagama) கருத்துத் தெரிவித்தார்.

சோல்பரி யாப்பில் ஒரு அரசியல் யாப்பிற்கு அவசியமான பல அடிப்படை இலட்சணங்கள் இருந்தன. சோல்பரி அரசியல் யாப்பு முழுமை யானதொன்று என்று தான் கூறவில்லை. ஆனால் இதற்குப் பின்னர் நாட்டில் அறிமுக மாகிய அரசியல் யாப்புகளோடு ஒப்பிடும்போது சோல்பரி அரசியல் யாப்பிற்கு இத்தகைய ஒரு மதிப்பீட்டை அளிக்க முடிகின்றது என்பதே தீபிகா உடகமவின் கருத்தாக இருந்தது. சோல்பரி அரசியல் யாப்பின் வரவேற்கத்தக்க அம்சங்களும் அதே நேரத்தில் பலவீனங்களும் இருந்ததற்கு சில அரசியல் காரணங்கள் உண்டு.


1931ஆம் ஆண்டு முதல் 1947 வரை ஏங்கி வந்த அரச சபை(State Council) யின் 1944 ஆம் ஆண்டு ஒரு யாப்பு வரைபை தயாரித்து அதை லண்டனுக்கு அனுப்பி இந்த வரைபையே சுதந்திர இலங்கை புதிய யாப்பாகப் பிரகடனப் படுத்த வேண்டுமென்று அரச சபை வற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறுத்தியது.

ஆனால் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளாத பிரித்தானிய அரசு இலங்கையில் சகல பிரிவினரையும் குறிப்பாக சிறுபான்மையினரையும் கலந்தாலோசிப்பது அவசியமென்று கருதி இலங்கைக்கு சோல்பரி ஆணைக்குழுவை அனுப்பி வைத்தது. சோல்பரி ஆணைக்குழு இலங்கை வருவதையோ அல்லது பரந்த ஆலோசனைகள் நடத்துவதையோ டி.எஸ்.சேனாநாயக்க தலைமையில் இயங்கிய அமைச்சரவைக் குழுவினர் விரும்பவில்லை. அவர்கள் ஆணைக் குழுக் கூட்டங்களைப் பகிஷ்கரித்தார்கள். ஆனால் திரை மறைவில் சோல்பரி ஆணைக்குழுவோடு பேச்சுவார்த்தைகள் நடத்தினார்கள். பேச்சுவார்த்தையோடு நின்றுவிடாமல் ஆணைக்குழுவிற்கு பல விருந்துபசாரங்கள் அளித்து குழுவைத் தங்கள் கருத்தை ஏற்றுக்கொள்வதற்கு இடைவிடாது முயற்சி செய்தனர். சோல்பரி ஆணைக்குழு அமைச்சர்கள் தயாரித்த யாப்பு வரைபை தங்களது அடிப்படை ஆவணமாகப் பயன்படுத்தினார்கள். டி.எஸ்.சேனாநாயக்கவினுடைய கருத்துகள் சோல்பரி ஆணைக்குழு யாப்பு தயாரிக்கும் போது உள்ளடக்கப்பட்டது என்று அரசியல் அறிஞர்கள் கருத்து வெளியிட்டிருக்கின்றார்கள்.



டி.எஸ்.சேனாநாயக்கவுடன் சோல்பரி ஆணைக்குழு உறுப்பினர்கள்

ஒரு பக்கத்தில் யாப்புக்குரிய நியாயமான கோட்பாடுகளும் உறுப்புரைகளில் சேர்த்துக்கொள்ளப்பட்ட அதேநேரத்தில், டி.எஸ்.சேனாநாயக்கவின் கருத்துகளுக்கு இடமளிக்கும் வகையில் யாப்பு வரைபு மேற்கொள்ளப்பட்டது. இதனால் நல்லகோட்பாட்டு அம்சங்களோடு இந்தக் கோட்பாடுகளை சரிவர நடைமுறைப் படுத்துவதற்குத் தடைகளும் குறைகளும் யாப்பில் இடம்பெற்றன.

யாப்பின் விதிகள் பார்ப்பதற்கு பாராட்டத்தக்கதாய் இருந்தாலும் நடைமுறையில் அவற்றை அமுல்படுத்துவதற்கு முடியாதபடி வேறு விதிகள் இருந்தன. இந்த முரண்பட்ட நிலையைப் புரிந்து கொள்வதற்கு இலங்கையின் யாப்பு வரலாற்றுப்பின்னணியை சுருக்கமாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கையின் அரசியல் யாப்பு வரலாறு 1833ஆம் ஆண்டில் அறிமுகமான கோல்பரி-கமரோன் (Colebury - Cameron) சீர்திருத்தங்களோடு தான் தொடங்கியது. இந்தச் சீர்திருத்தங்களின் மூலம் நிர்வாகசபை, சட்டசபை என இரு சபைகள் அமைக்கப்பட்டன. இவை அன்று இலங்கையின் நிர்வாகத்துக்குப் பொறுப்பாக இருந்த ஆளுநருக்கு சிறந்த முறையில் ஒத்தாசையாக இருக்கும் என்று அறிக்கை கூறியது.

சட்ட சபை உத்தியோகத்தர்களும் உத்தியோகப்பற்றவர்களும் கொண்ட அமைப்பாக இருந்தது. ஆரம்பத்தில் உத்தியோகப்பற்றவர்களும் நியமன அங்கத்தவர்களாகவே இருந்தனர். காலப்போக்கில் சட்டசபையினுடைய அங்கத்துவம் கூட்டப்பட்டதுடன், அவர்களில் ஒரு பகுதியினர்தேர்தல்மூலம்அங்கத்தவரானார்கள். சட்ட சபை முறை டொனமூர் திட்ட அறிமுகத்துடன் 1931ஆம் ஆண்டில் ரத்தாகியது. 1924 - 1931 இற்குமிடையில் இயங்கிய சட்டசபை தான் கடைசி சட்ட சபை. இதிலிருந்த 37 அங்கத்தவர்களுள் 34 பேர் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்கள். 3 பேர் நியமன அங்கத்தவர்கள்.

சட்டசபைத் தேர்தல்முறை இலங்கையிலிருந்த சகல இனப்பிரிவினருக்கும் அவரவர்களுடைய விகிதாசாரத்திற்கேற்ப பிரதிநிதித்துவம் அமையவேண்டுமென்ற கொள்கையைக் கடைப்பிடித்தது. 1924 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட சட்டசபையில் இரண்டு தெரிவு செய்யப்பட்ட இந்தியவம்சாவளிப் பிரதிநிதிகள் இடம் பெற்றிருந்தனர். மேலும் ஒருவர் இந்திய வம்சாவளி மக்கள் சார்பாக சபைக்கு நியமனம் பெற்றார்.



சோல்பரி பிரபுவுடன் எஸ்.டபிள்யு.ஆர்.டீ.பண்டாரநாயக்கவும் டட்லியும்

1931ஆம்ஆண்டுடொனமூர்அரசியல் யாப்பு நடைமுறைக்கு வந்தது. தேர்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை அடியோடு மாற்றப்பட்டு சர்வஜன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டது. இதுவரை நடைமுறையில் இருந்த பல இனத்தவருக்கும் அவரவர் மக்கள் தொகைக்கு ஏற்ப பிரதிநிதித்துவம் என்ற கொள்கை கைவிடப்பட்டது. நாட்டைத் தனி அங்கத்தவர் தொகுதிகளாக பிரித்து சர்வஜன வாக்குரிமை மூலம் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்கள் ஒவ்வொரு தொகுதியிலும் அங்கத்தவர்களைத் தெரிவுசெய்தனர்.

இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்கள் டொனமூர் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட அரச சபை (State Council) உறுப்பினர்களானார்கள். இந்த முறை பெரும்பான்மை இனத்தவருக்கு அதிக அங்கத்துவத்தைப் பெறும் ஒரு நிலையை உண்டாக்கியது. டொனமூர் அரசியல்யாப்பு பேரினவாதசிந்தனைக்கு உரம் அளிப்பதாக அமைந்தது. சிங்களப் பேரினவாதம் வளர்வதற்கு இது களம் அமைத்துக் கொடுத்தது.

1931ஆம் ஆண்டு சர்வஜனவாக்குரிமையின் அறிமுகத்திற்குப் பின்னர் வாக்காளர்களாக பதிவு செய்வதற்கு தகுதி நிர்ணயிக்கப்பட்டது. இந்தத் தகுதி நிர்ணயம் இந்திய வம்சாவளியினரைப் பெரிதும் பாதிப்பதாக இருந்தது. அவர்கள் மத்தியில் இருந்து பதிவுசெய்யப்படும் வாக்காளர்களின் தொகையை கூடிய அளவு மட்டுப்படுத்துவதாக இருந்தது. தகுதிகளுக்காக நிர்ணயிக்கப்பட்ட பல்வேறு விதிகளை திருப்திப்படுத்தி இந்திய வம்சாவளி மக்கள் மத்தியிலிருந்து ஒருலட்சம் பேர் வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்டனர். 1931ஆம் ஆண்டு இடம்பெற்ற அரசசபைத் தேர்தலில் 2 இந்திய வம்சாவளிப் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்டனர்.

சர்வஜன வாக்குரிமைபற்றிய செய்திகளும் வாக்காளர் பதிவின் அவசியம் பற்றிய பிரசாரமும் நாடுமுழுவதும் பரவியது. சகல இனத்தைச் சார்ந்தவர்களும் வாக்காளர்களாக பதிவுசெய்து கொள்வதில் அக்கறை எடுத்து முனைப்பாக செயல்பட்டனர்.

பின்தங்கிய நிலையில் இருந்தாலும் இந்திய வம்சாவளி மக்களும் தங்களை வாக்காளர்களாக பதிவுசெய்துகொள்ள முயற்சிகள்மேற்கொண்டனர். 1931ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் இந்திய வம்சாவளியினர் வாக்காளர் பட்டியலிலே இடம்பெற்றிருந்தனர். இதர சமூகத்தினரோடு ஒப்பிடும்போது விகிதாசார அடிப்படையில் இந்த எண்ணிக்கை



சுதந்திர இலங்கையின் முதலாவது அமைச்சரவை

குறைந்ததாக இருந்தாலும் அவர்களால் இந்திய வம்சாவளியினர் செறிவாக வாழும் பிரதேசத்தில் உள்ள இரண்டு தொகுதிகளில் அங்கத்தவர்களை தெரிவு செய்ய முடிந்தது.

வாக்காளர் பதிவு பற்றிய செய்திகள் நாடு முழுவதும் பரவியது. எல்லா இடங்களிலும் தங்களை வாக்காளராக பதிவுசெய்துகொள்ள மக்கள் முன்வந்தனர். ஒதுக்கலுக்கு ஆளாகியிருந்த இந்திய வம்சாவளி மக்கள் மத்தியிலிருந்தும் பதிவுசெய்துகொள்வோரின் தொகை கூடியது. 1936ஆம் ஆண்டில் இந்திய வம்சாவளி வாக்காளர் தொகை 1,45,000 ஆக உயர்ந்தது. 1939 ஆம் ஆண்டில் இந்த தொகை 2,25,000 ஆக எழுந்தது. இந்தத் தொகை இதர சமூகத்தினரோடு ஒப்பிட்டுப்பார்க்கையில் மக்கள் தொகைக்கு ஏற்ப விகிதாசாரம் குறைவாகத்தான் இருந்தது.

ஆனால் சிங்களப்பேரினவாதத் தலைவர்களுக்கு இது பொறுக்கவில்லை. இந்திய வம்சாவளி வாக்காளர் தொகையை எப்படியாவது குறைத்து விட வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டு ஆட்சேபனைகளை எழுப்பினார்கள். இந்திய வம்சாவளியினர் வாக்காளர்களாக பதிவு செய்துகொள்ள நேரடியாக பதிவாளர் முன் தோன்ற வேண்டும் என்று ஒரு புது நடைமுறையைக் கொண்டுவர அவர்கள் காரணமாயிருந்தனர். நேரடி விசாரணை பற்றிய அறிவிப்புகள்சரியான முறையில் மக்களைச் சென்றடையவில்லை. இதனால் பெருந்தொகையினர் நேரடி விசாரணைக்கு வர முடியாது போய்விட்டது.

1941இல் இந்திய வம்சாவளி வாக்காளர் தொகை 1,68,000 ஆகக் குறைக்கப்பட்டது. இந்த அநியாயத்தைப் பற்றி முறையிட்டபோது நேரடி விசாரணைக்கு வராதது அவர்களுக்கு வாக்குப்பதிவில் அக்கறையில்லை என்பதைத் தான் காட்டுகிறது என்று மெத்தனமான பதில் கூறப்பட்டது.

இதுபற்றி 1944ஆம் ஆண்டில் கருத்துத் தெரிவித்த சோல்பரி ஆணைக்குழு, வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட இந்திய வம்சாவளி வாக்காளர் நேரடி விசாரணைக்கு வந்திருந்தால் அவர்களில் பெரும்பாலானோர் பூரண வாக்காளர் தகுதியுடையவர்கள் என்பதை நிரூபித்திருப்பார்கள்என்பதைஉறுதியாக நம்பலாம் என்று சுட்டிக் காட்டியுள்ளார்.

இதுபற்றி மேலும் சோல்பரி ஆணைக்குழு இவ்வாறு கூறியுள்ளது. "வாக்குரிமை என்பது ஒரு குறிக்கோளை அடைவதற்கான சாதனை மட்டுமேயாகும்... ஆனால் வாக்காளர் பற்றி பாரபட்சமான சட்டங்கள் இருந்தாலோ அல்லது வாக்குரிமை பெறுவதற்குப் போதுமான ஏற்பாடு இல்லாவிட்டாலோ இது பயனற்றதாகிவிடும்...."

1941இல் 2,25,000 வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தால் இந்திய வம்சாவளியினருக்கு 1947 தேர்தலில் குறைந்தபட்சம் 10 பிரதிநிதிகளை தெரிவு செய்திருக்க முடியும். தங்கள் அறிக்கையில் சோல்பரி ஆணைக்குழு இந்திய வம்சாவளியினருக்கு 14 ஆசனங்கள் கிடைக்க வேண்டுமென்று மதிப்பிட்டிருந்தார்கள்.

தொகுதிகளை நிர்ணயம் செய்யும்போது சிறுபான்மைப் பிரிவினரின் பிரதிநிதித்துவத்தை கருத்திற் கொண்டு சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறைகளைப் பின்பற்றவேண்டு மென்று சோல்பரி ஆணைக்குழு சிபாரிசு செய்திருந்தது. நாட்டின் தேர்தல் தொகுதிகளில் சமமான மக்கள் தொகையைக் கொண்டிருக்க வேண்டுமென்றாலும் சிறுபான்மைப் பிரிவினரின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த குறிப்பிட்ட தொகுதிகளில் அவசியமான மக்கள் தொகையைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்பதை சோல்பரி திட்டம் ஒரு கட்டளையாக முன்வைத்திருந்தது. மேலும் சிறுபான்மை மக்கள் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பல அங்கத்துவ தொகுதிகளையும் சிபாரிசு செய்திருந்தது. இவையெல்லாம் வரவேற்கத்தக்க அம்சங்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

ஆனால் 1948ஆம் ஆண்டில் பிரஜா உரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டு அதைத் தொடர்ந்து பிரஜைகள் மாத்திரம் தான் வாக்காளர்களாக ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் என்ற நியதியை ஏற்படுத்தி 1947இல் வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்டிருந்த இந்திய வம்சாவளியினர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டனர். இதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் பிரிவுகவுன்சில் வரை சென்றது. ஆனால் சோல்பரி அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்டு இருந்த விதிகள் இந்த நியாயமற்ற செயலைத் தடுக்கப் போதுமானதாக இருக்கவில்லை. 1952ஆம் ஆண்டில் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஒரு இந்திய வம்சாவளியினர் கூட தெரிவுசெய்யப்படவில்லை. 14 இந்திய வம்சாவளியினர் பாராளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்படுவார்கள் என்று சோல்பரி அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது அர்த்தமற்றதாகி விட்டது.

சிறுபான்மையினரின் பாதுகாப்பிற்கென சோல்பரிஅரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்டிருந்த உறுப்புரை 29(2) பின்வரும்வாசகத்தைக் கொண்டிருந்தது.
"எந்தவொரு சட்டமும்

அ. எந்தவொரு நபரும் சுதந்திரமாக ஏதாவது ஒரு சமயத்தைப் பின்பற்றுவதை தடைசெய்யவோ கட்டுப்படுத்தவோ முடியாது.

ஆ. இதர சமூகத்தவருக்கோ அல்லது சமயம் சார்ந்தவர்களுக்கோ ஊறு விளைவிக்காத அல்லது கட்டுப்படுத்தாத விதிகளை ஏதாவது ஒரு தனி சமூகத்தையோ அல்லது சமயத்தைச் சார்ந்தவர்களையோ கட்டுப்படுத்த முடியாது.

இ. எந்தவொரு தனிச் சமூகத்தவர்களுக்கோ அல்லது சமயம் சார்ந்தவர்களுக்கோ அளிக்கப்படாத சலுகைகளைப் பிறசமயம் சார்ந்தவர்களுக்கோ அளிக்க முடியாது.

ஈ. எந்தவொரு சமய நிறுவனத்தின் யாப்பையும் அந்த நிறுவனத்தின் நிர்வாக சபை அனுமதியின்றி மாற்ற முடியாது."

1956ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டம் ஒரு சமூகத்துக்கு மட்டுமே சலுகையளிப்பதாக இருந்தது. இதுவும் சோல்பரி யாப்பு நடைமுறையில் இருந்தபோது தான் இடம்பெற்றது.

சோல்பரி அரசியல் யாப்பில் அடிப்படை உரிமைகள் பற்றி அத்தியாயம் இடம்பெறவில்லை. 29(2) உறுப்புரை சிறுபான்மையினருக்கு பாதுகாப்பாக இருக்கும். அவர்களுடைய அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கும் என்று கூறப்பட்டது வெறும் கானல் நீராகவே முடிந்தது.

எனவே தீபிகா உடகம கூறியது போல



சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் கைச்சாத்து

சோல்பரி யாப்பின் அடிப்படை இலட்சணங்கள் ஒப்பீட்டளவில் சிறப்பாக இருந்தது உண்மையென்றாலும் அதனுடைய பலவீனங்களும் நடைமுறையில் பயன்படுத்தமுடியாத பாதுகாப்பு விதிகளும் சோல்பரி யாப்பு வரையப்பட்டபோது இரண்டுவிதமான போக்குகளை இணைப்பதற்கு முயற்சி செய்யப்பட்டதே காரணம் என்று கருதலாம்.

இங்கே அரசாங்கங்கள் சட்டத்தையே தங்கள் தேவைக்கு வளைத்து அல்லது நிர்வாகத்தை பயன்படுத்தி சட்டத்தையே செயலிழக்கச் செய்த போக்குகளைப் பற்றியும் குறிப்பிட வேண்டும். 1939இல் புதிய பாரபட்சமான நடைமுறையைக் கையாண்டு இந்திய வம்சாவளி வாக்காளர் தொகையை குறைத்தது. 1948இல் அவர்களை வாக்காளர் பட்டியலிலிருந்து அகற்றியது. இந்திய பாகிஸ்தானிய (வதிவோர்) பிரஜாவுரிமைச் சட்டம் அமுல் நடத்தப்படும் போது இரகசிய சுற்றறிக்கை அனுப்பி சட்டத்தை செயலிழக்கச் செய்தது ஆகியவற்றை குறிப்பிடலாம்.

இந்திய, பாகிஸ்தானிய (வதிவோர்) பிரஜாவுரிமைச் சட்டத்தின் கீழ் 80,0000 பேரை உள்ளடக்கிய 2,37,000 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதிலும் அதை விசாரணைகள் நடைமுறைப்படுத்திய விதத்திலும் பல சிக்கல்கள் இருந்தன. அற்ப காரணங்களுக்காக விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. இந்த கெடுபிடிகளுக்கெல்லாம் ஈடு கொடுத்து ஆவணங்கள் சமர்ப்பித்தும் நேரடி விசாரணைகளில் தெளிவான விளக்கங்களை அளித்தும் சட்டத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்து பலர் பிரஜைகளாக பதிவுசெய்யப்பட்டனர். இவ்வாறு பதிவு செய்யப்பட்டவர்களின் தொகை அதிகரித்த போது 85% சதவிகித விண்ணப்பங்களை நிராகரிக்கும்படி ஒரு இரகசிய சுற்றறிக்கை மூலம் விசாரணைக்கு பொறுப்பாக இருந்த உதவி ஆணையாளர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. கபடத்தனமான இந்தப் போக்கு பல இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

ஒரு பாராளுமன்ற விவாதத்தின் போது எஸ். டபிள்யூ.ஆர்.பண்டாரநாயக்க தனக்கு தெரிந்த உண்மையை வெளியிடும் ஒரு நிகழ்ச்சி இடம் பெற்றது. எல்லாம் தெரிந்தது போல் பேசிக்கொண்டிருந்த ஒரு அரசாங்க பாராளுமன்ற அங்கத்தவரின் பேச்சை எள்ளி நகையாடுவதற்காகவே இந்த உண்மையை அவர் வெளியிட்டார்.

பிரஜாவுரிமைச் சட்டத்தை இயற்றிய பின் சிலரோடு பேசிக் கொண்டிருக்கும் போது இந்திய, பாகிஸ்தானிய (வதிவோர்) பிரஜாவுரிமை சட்டத்தின் கீழ் 50000 பேர் மாத்திரம்தான் பதிவு செய்யப்படுவார்கள் என்று டி.எஸ்.சேனாநாயக்க கூறியது எந்தச் சந்தர்ப்பத்தில் இடம்பெற்றது என்று சொன்னார். இந்தக் கூற்றைப் பார்க்கும் போது 85% சதவிகித விண்ணப்பங்களை நிராகரிக்கும்படி உதவி ஆணையாளருக்கு கட்டளை பிறப்பித்த தன் காரணம் நன்கு விளங்குகிறது.

1948ஆம் ஆண்டு சட்டங்கள் மூலம் இந்திய வம்சாவளியினர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டதால் சோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ல்பரி ஆணைக்குழு சிபாரிசு செய்த சமநிலை பிரதிநிதித்துவம் சரிந்து போனது. தொகுதிகள் நிர்ணயத்துக்கான மக்கள் தொகையை கணக்கில் எடுக்கும் போது முழு இந்திய வம்சாவளியினர் மக்கள் தொகையும் சேர்த்துக்கொள்ளப் பட்டது. இந்திய வம்சாவளியினர் வாக் குரிமை பறிக்கப்பட்டுவிட்டதால் அந்தத் தொகுதிகளின் வாக்காளர் தொகை குறைந்து இவ்வாறு மலைநாட்டில் பல தொகுதிகள் உருவாகின.

இத்தகைய சிறிய வாக்காளர் கொண்ட தொகுதிகளின் துணையோடு 1952ஆம் ஆண்டு தேர்தலிலே ஐக்கியதேசியக் கட்சி அமோக வெற்றியீட்டியது. இந்த சம யத்தில் சேனநாயக்காவுக்கும் பண்டார நாயக்கவுக்கும் இடையில் போட்டி ஏற்பட்டது. பண்டாரநாயக்கவுக்கு சகல தகுதிகளும் இருந்தாலும் தனக்கு அடுத்தபடியாக தன்னுடைய மகன் தான் பிரதமராக வேண்டுமென சேனநாயக்கா விரும்பினார். கருத்துவேறுபாடு தீவிரம டைந்து பண்டாரநாயக்க 1951இல் ஐ.தே.க.விலிருந்து விலகி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற பெயரில் புதுக்கட்சி யை ஆரம்பித்தார். இந்த சமயத்தில் டி.எஸ்.சேனாநாயக்க ஒரு விபத்தில் இறந்துபோனார். டட்லி சேனநாயக்கா பிரதமரானார்.

இந்தப் பின்னணியில் 1952ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்று அரசாங்கம் அமைந்தது.

1952ஆம் ஆண்டு தேர்தலிலே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஒரு சில ஆசனங்களே கிடைத்தன. ஆனால் அடுத்த தேர்தல் இடம்பெற்ற 1956ஆம் ஆண்டுக்குள் பண்டாரநாயக்க மக்கள் ஐக்கிய முன்னணி அமைத்து அதில் ஒரு மார்க்சிஸ்ட் கட்சியையும் தீவிர சிங்கள இனவாத சக்தியையும் ஒன்றிணைத்து அதீதமான பௌத்த சிங்கள உணர்வு களை மேலோங்கச் செய்து "சிங்களம் மட்டும் உத்தியோகபூர்வமொழி" என்ற சுலோகத்தை முன்வைத்து ஐக்கிய தேசியக் கட்சியை படுதோல்வியடையச் செய்தார்.

இந்திய வம்சாவளி மக்களுடைய வாக் குரிமை பறிக்கப்பட்டதால் உச்சாட்டம் பெற்று சிங்களப்பேரினவாத உணர்வுகள் மேலும் வளர்ச்சியடைந்தன. மேலெழு ந்துவிட்ட பௌத்த சிங்கள பேரினவாதத் தின் பிடியில் அகப்பட்டு அதை மீறிச் செயல்படமுடியாத ஒரு நிலைக்கு பண்டாரநாயக்க ஆளானார். 1958ஆம்



1972இல் முதலாவது குடியரசு அரசியலமைப்பு கொண்டு வரப்பட்டபோது அரசியலமைப்பு அமைச்சராக இருந்தவர் முதுபெரும் இடதுசாரி தலைவர்களில் ஒருவரான கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா. இந்த அரசியலமைப்பு சிங்கள பேரினவாதத்தை ஊக்குவிப்பதாகவே அமைந்தது

ஆண்டு ஒரு பௌத்த பிக்குவினால் பண்டாரநாயக்கா சுட்டுக்கொல்லப் பட்டார்.

1960ஆம் ஆண்டில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காபிரதமர்பதவியேற்றார். 1964இல் ஸ்ரீமாவோ - சாஸ்திரி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. பிரஜா வுரிமை பதிவுக்கு பின் எஞ்சிய 9,75,000 நாடற்றவர்கள் பிரச்சினையைத் தீர்ப்ப தற்கு இந்த ஒப்பந்தம் ஏற்பட்டது. ஆனால் யதார்த்தத்திற்கு முரணாக அமைந்த இந்த ஒப்பந்தத்தை முழுமையாக செயல்படுத்த முடியவில்லை. இறுதியில் வேறுவழிகளில் நாடற்றவர் பிரச்சினை ஒரு முடிவிற்கு கொண்டுவரப்பட்டது. 1970களில் திருமதி பண்டாரநாயக்கா ஆட்சியிலிருந்தபோது வடகிழக்கு தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளும் தீவிரமடைந்தது.

1972ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட குடியரசு யாப்பில் பௌத்த சமயத்துக்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டது. சோல்பரி யாப்பில் இருந்த உறுப்புரை அகற்றப் பட்டது. அதற்கு மாற்றீடாக முறையான அடிப்படை உரிமைகள் பற்றிய உறுப் புரைகள் இடம்பெறவில்லை. 1972ஆம் ஆண்டு யாப்பு சிங்கள பேரினவாதத்தை ஊக்குவிப்பதாகவே அமைந்தது.

1970களில் தமிழர் கூட்டணி தோன் றியது. 1974இல் வட்டுக்கோட்டை தீர் மானம் நிறைவேற்றப்பட்டது. வட்டுக் கோட்டைதீர்மானம் மலையகத்தமிழரின் பிரச்சினைக்கு தீர்வாக அமையாது என்று உணர்ந்த மலையகத் தலைவர்கள் அன் றைய எதிர்க்கட்சியாகிய ஐ.தே.கட்சியுடன் உறவை வளர்த்துக் கொண்டார்கள்.

1977இல் அறிமுகம் செய்யப்பட்ட அரசியல் யாப்பு புத்தசாசனம் பற்றிய உறுப்புரையை அப்படியே வைத்துக் கொண்டது. நிர்வாக ஜனாதிபதி முறையும் விகிதாசார தேர்தல் முறையும் ஒரு புதிய சூழ்நிலையை தோற்றுவித்தன. நிர்வாக ஜனாதிபதி முறை ஜனநாயக வீழ்ச்சிக்கு வழிவகுத்துள்ளது. திறந்த பொருளா தாரத்தின் அறிமுகம், 1981,1983 வன்முறைகள், வடகிழக்கில் எழுந்த தமிழ்த் தீவிரவாதம்,கடுமையான உள் நாட்டுப்போர், எண்ணிலடங்கா மனித உரிமை மீறல்கள் சட்ட ஒழுங்கு வீழ்ச்சி யென நாடு எங்கோ இட்டுச் செல்லப் பட்டுள்ளது.

1994 ஆம் ஆண்டு சந்திரிகாகுமார துங்க ஜனாதிபதியாக இருந்த சமயத்தில் புதிய யாப்பு ஒன்று தயாரிப்பது பற்றி பாராளுமன்றத்தில் சகல கட்சிக்குழு வொன்று செயல்பட்டு ஒரு வரைவுகூட தயாரித்தது. தேர்தல் சீர்திருத்தம் தவிர இதர விடயங்களைப் பற்றி ஒரு வரைவுகூட தயாரிக்கப்பட்டது.

இதுபோன்று வேறு சிறியளவிலும் பெரியளவிலும் பல முயற்சிகள் நடை பெற்றுள்ளன. சர்வகட்சி மகாநாடு பல விடயங்களை ஆராய்ந்து பெரும்பாலான விடயங்களில் ஒருமைப்பாட்டைக்கூட எட்டியுள்ளது. இவையாவும் நடைமுறை மாற்றங்களை ஏற்படுத்துவதில் வெற்றி யடையவில்லை.

அடிமட்டத்திலிருந்து ஒவ்வொரு விட யத்தையும் தனித்தனியாக எடுத்து ஆலோசனைகளை உருவாக்கினால் பயனுள்ளதாக இருக்கலாம். எப்படியி ருந்தாலும் புதிய அணுகுமுறை பற்றி சிந்தித்து பார்ப்பது அவசியமாகும்.

உள்ளூராட்சி நிறுவன மட்டத்திலி ருந்தும், கீழ்மட்ட நிர்வாக அமைப்பு களிலிருந்தும் சீர்திருத்த முயற்சிகளை மேற்கொள்வதைப்பற்றிச் சிந்திக்கலாம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழக அரசியல்

சென்னையிலிருந்து
முத்தையா
காசிநாதன்

பிரபாகரனின் பெயர் சொல்லாமல் ரெசோ மகாநாடு நடத்தியது தி.மு.க. ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு என்ற தொனியில் ஸ்டாலினின் பேச்சு



# ரெசோ கு

ரெசோ, தமிழகத்தில் மீண்டும் புதுப் பிக்கப்பட்டிருக்கிறது. கடந்த 12ஆம் திகதி சென்னையில் அறிவிக்கப்பட்ட ரெசோ மாநாடு நடக்குமா, நடக்காதா என்று தனியாக பட்டிமன்றம் நடத்த வேண்டிய அளவிற்கு சிக்கலில் மாட்டிக் கொண்டது. மாநாடு நடை பெறும் இடத்தில் அதிகபட்சமாக பத்தாயிரம் பேருக்கு மேல் கூடமுடியாது என்று தெரிந்தும், "ஆயிரக்கணக்கில் கூடுங்கள்" என்று அழைப்பு விடுத்த வண்ணம் இருந்தது தி.மு.க. தலைமை. குறிப்பாக அக்கட்சியின் அதிகாரபூர்வ பத்திரி கையான முரசொலியிலேயே ஒரு லட்சம் பேர் பங்கேற்பார்கள் என்று அறிவிப்பு வெளியாக அதையே ஆதாரமாக எடுத்துக் கொண்டு சென்னை உயர்நீதிமன்றத்திற்குப் போனார் அம்புலன்ஸ் ஓட்டுநர்களின் தலைவராக இருப்பவர்.

அவரது கோரிக்கைகளுக்கு அரசும் ஆதரவு அளிக்க, அனுமதி கொடுக்கும் பொறுப்பை சென்னை மாநகரப் பொலிஸ் கமிஷனரிடம் கொடுத்தது சென்னை உயர்நீதிமன்றம். 10ஆம் திகதி நள்ளிரவு மாநாடு நடத்துவதற்கு அனுமதி கேட்டிருந்த தென் சென்னை மாவட்டச் செய லாளர் அன்பழகனைத் தேடி இரவு 12.30 மணிக்கு பொலிஸ் போனது. "உங்கள் மாநாட் டிற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது" என்று கூறி கடிதம் கொடுக்க, அவரோ, "என்னிடம் ஏன் தருகிறீர்கள். தலைவரிடம் கொடுங்கள்" (கருணாநிதி) என்று கூறி வாங்க மறுத்தி ருக்கிறார். ஆனால் போலீஸோ "நீங்கள்தான் அனுமதி கேட்டீர்கள். ஆகவே பெற்றுக்கொள் ளுங்கள்." என்று சொல்லி கொடுத்து விட்டுச் சென்றார்கள்.

அனுமதி மறுக்கும் பொலிஸ் என்பது முன்கூட்டியே தி.மு.க. தலைமைக்குத் தெரியும். இருந்தாலும் நீதிமன்றத்தில் இதற்காக ஒரு போராட்டத்தை நடத்தி விடுவது என்று கருதி காத்திருந்தது. 11ஆம் திகதி நீதிமன்றத்தை அணுகினார்கள். ஆனால் நீதியரசர் பால் வசந்த குமாரோ, "இந்த வழக்கை ஏற்கனவே இரு நீதிபதிகள் விசாரித்துள்ளார்கள். ஆகவே நான் தீர்ப்பளிப்பது சரியாக இருக்காது" என்று கூறி விட்டார். அதுவும் இரு தரப்பு வாதங்களையும் இரண்டு மணி நேரங்களுக்கு மேல் கேட்டுவிட்டு அவ்வாறு பதில் சொன்னதும், தி.மு.க. தலைவர் கருணாநிதி மிகவும் டென்ஷனாகி விட்டார். உடனே கருணாநிதியின் கோபாலபுரம் இல்லத் தில் தி.மு.க. முன்னணியினர், வழக்கறிஞர்கள் ஆகியோரின் அவசரக்கூட்டம் நடைபெற்றது. நீதிமன்றம் ஒத்துழைக்காததற்கு மத்திய அரசு எழுதிய கடிதம்தான் காரணம் என்று தி.மு.க. வழக்கறிஞர்கள் எடுத்துக் கூறினார்கள். அதாவது ரெசோ மாநாடு நடத்துவதற்கு அனு மதி கேட்டு தி.மு.க. தரப்பு முதலில் மத்திய உள்துறை அமைச்சருக்குத்தான் கடிதம் எழுதி யிருக்க வேண்டும். அதற்குப் பதில் அவர்கள் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு கடி தம் எழுதினார்கள். அக்கடிதத்தைப் பெற்றுக் கொண்ட மத்திய வெளியுறவுத்துறை அமைச்ச கம், "ரெசோ மாநாடு போடுவதில் எங்களுக்கு ஆட்சேபனையில்லை. ஆனால் "ஈழம்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தக் கூடாது என்று உத்தரவு போட்டது. இக்கடிதத்தை வாபஸ் பெறாமல் மாநாட்டிற்கு அனுமதி கிடைப்பது சிரமம் என்று தி.மு.க. வழக்கறிஞர்கள் கருணா நிதியிடம் கூறிவிட்டார்கள். இதற்கிடையில் வழக்கை இரு நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு மாற்றுமாறு தி.மு.க. வழக்கறிஞர் வில்சன் தலைமை நீதிபதியிடம் கோரிக்கை வைத்தார். ஆனாலும் தி.மு.க.வின் அவசரத்திற்கு வழக்கு விசாரிக்கப்படாது என்ற முடிவிற்கு வந்தார் கருணாநிதி. மத்திய அரசின் கடிதத்தை வாபஸ் பெறுவதற்கு டெல்லிக்கு அழுத்தம் கொடுக்கத் தொடங்கினார்கள்.

"ஈழம் என்பது வரலாற்றுடனும், இலக்கியங்களுடனும் தொடர்புடைய பெயர். அது தமிழர் பகுதியைக் குறிக்கும் பெயர். அதைச் சொல்வதால் நாங்கள் தனி ஈழம் கேட்டு தீர்மானம் போடப் போகிறோம் என்று அர்த்தமல்ல." என்ற ரீதியில் விளக்கக் கடிதம் ஒன்றை அவசரமாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்திற்கு அனுப்பி வைத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## வாபஸ் ஆன மத்திய அரசு உத்தரவு:

வழக்கமாக சி.ஐ.டி. நகரில் உள்ள இல்லத்திற்குச் செல்லும் கருணாநிதி அன்றைய தினம் முழுவதும் கோபால புரத்தில் உள்ள இல்லத்திலேயே கட்சியின் சீனியர் நிர்வாகிகளுடன் அமர்ந்து ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தார். இந்த வேளையில் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் "ஈழம்" என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதற்கு எங்களுக்கு ஆட்சேபனையில்லை என்று ரெசோ செயலாளர் ஹசன் முகமது ஜின்னாவிற்கு கடிதம் எழுதியது. ஆனால் அக்கடிதத்தில், "இந்தியாவுடன் தூதரக உறவில் உள்ள எந்த நாட்டின் இறை யாண்மை, ஒற்றுமை, டெரிட்டோரியல் இன்டெக்ரிட்டி போன்றவற்றை கேள்வி கேட்கும் விதத்தில் எந்த விதமான பிரகடனமோ, முடிவுகளோ மாநாட்டில் எடுக்காமல் மாநாட்டை நடத்துபவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்" என்று ஒரு நிபந்தனையுடன் அந்த அனுமதியைக் கொடுத்தது. இந்தக் கடிதம் வந்த பிறகு தான் மாநாடு நடக்கும் என்ற நம்பிக்கைக் கீற்று தி.மு.க. தலைமைக்கு வந்தது. ஆனாலும் நீதிமன்றத்தில் இரு நீதிபதிகள் அன்று மாலை வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவில்லை. அதனால் 11ஆம் தேதி ரெசோ மாநாட்டிற்கு பொலிஸ் அனுமதி கிடைக்குமா என்ற கேள்விக்குறி தொடர்ந்தது. அதற்கு முன்பே மாவட்டங்களில் உள்ள தி.மு.க. நிர்வாகிகளுக்கு தனியாக ஃபக்ஸ் அனுப்பி, "அனைவரும் மாநாட்டிற்கு வர வேண்டியதில்லை. சில பேர் வந்தால் போதும்" என்று உத்தரவிடப்பட்டது. ஏனென்றால் மாநாடு நடக்கும் ஒய். எம்.சி.ஏ. இடத்தின் கெப்பாசிட்டியான 8000 பேர் மட்டுமே மாநாட்டிற்கு வரு வார்கள் என்பதை நீதிமன்றத்திற்கு காட் டுவதற்காக இந்த ஏற்பாடு செய்தது தி.மு.க. ஆனாலும் அன்று இரவு வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட வில்லை என்பதால் அப்செட் ஆன தி.மு.க. தலைவர் கருணாநிதி, "நாளை தடையை மீறி மாநாட்டை நடத்துவோம். கைது

# டு பிடிக்குமா?

# போகாத ஊருக்கு வழிகாட்டுகிறார் கலைஞர்



பழ. நெடுமாறன்
தமிழர் தேசிய இயக்கத் தலைவர்

தி.மு.க. தலைவர் கருணாநிதி நடத்திய ரெசோ மாநாட்டில் யாருக்காக அவர் மாநாடு நடத்தினாரோ அந்த ஈழத்தமிழர் தலைவர்களில் ஒருவர் கூட பங்கெடுக்க வில்லை. அகில இந்திய அளவில் முக்கியத் தலைவர்களான சரத்பவார், பரூக் அப்துல்லா, சரத்யாதவ் போன்றவர்களும் கலந்து கொள்ளவில்லை. தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு எம்.பி.க்கள் பலரின் பெயரை விளம் பரப்படுத்தியிருந்தும் ஒருவர் கூட வரவில்லை. எனவே 2009ஆம் ஆண்டில் முள்ளிவாய்க் கால் பகுதியில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட போது அதைத்தடுக்கக்கூடிய அதிகாரமும், சக்தியும் இருந்தும் கூட கருணாநிதி எதுவும் செய்யா ததை மன்னிப்பதற்கு ஈழத்தமிழர்கள் தயாராக இல்லை என்பதையே இது எடுத்துக்காட் டுகிறது.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட முக்கியமான தீர்மானம் - ஐ.நா. பேரவை இதில் தலையிட இந்திய அரசு ஆவன செய்ய வேண்டும் என்பதுதான். மத்திய அரசில் கருணாநிதியின் தி.மு.க.வும் அங்கம் வகிக்கிறது. முச்சந்தியில் மக்களைக் கூட்டி இந்திய அரசுக்கு வேண்டு கோள் விடுப்பது ஏமாற்று வேலையாகும். மத்திய அமைச்சரவையில் இவர் மகன் உட்பட ஐந்து பேர் அமைச்சர்களாக இருக்கிறார்கள். அவர்கள் பிரதமரைச் சந்தித்து இந்தக் கோரிக் கையை வலியுறுத்த வேண்டும். இந்திய அரசு அவ்வாறு செய்ய மறுக்குமானால் மந்திரிச பையிலிருந்து விலக வேண்டும். இதுதான் அரசியல் நாணயம் ஆகும். அதைச் செய் யாமல் மாநாடு போடுகிறேன் என்று சொல்வது பித்தலாட்டம். எதிர்க்கட்சியாக இருக்கும் நான் இப்படி ஓரிடத்தில் கூட்டம் போட்டு தீர்மானம் போடலாம். எங்களுக்கு வேறு வழியில்லை. ஆனால் இவர் இப்படித் தீர்மானம் போடுவது யாரை வலியுறுத்துவதற்கு? தன்னைத்தானே வலியுறுத்திக் கொள்ளத் தீர்மானம் போடுகி றாரா? இது போகாத ஊருக்கு வழிகாட்டுகிறார்.

ரெசோ மாநாட்டிற்கு தடை போட்டுவிட் டார்கள் என்கிறார் கருணாநிதி. நான் நடத்த நினைத்த எட்டு மாநாடுகளுக்குத் தடை போட்ட வர் இவர். உயர்நீதிமன்றம் போய் உத்தரவு வாங்கியே மாநாடுகளை [redacted]ம். இப் போது தன் மாநாட்டிற்கு தடை போட்டு விட்டார்கள் என்று புலம்புவதில் அர்த்த மில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும்பரவாயில்லை. அதற்குநானே தலைமையேற்கிறேன்'' என்று ஆவேசப் பட்டிருக்கிறார். ஆனால் வழக்கறிஞர் களோ, "ஈழம் என்ற வார்த்தையைப் பயன்படுத்தலாம் என்று மத்திய அரசு கூறிவிட்டது. அந்தக் கடிதம் இருப்பதால் நமக்கு நீதிமன்ற அனுமதி எப்படியும் கிடைத்துவிடும். அதனால் தடையை மீறத் தேவையில்லை'' என்று கூறவே, இறுதி யில் நீதிமன்றத்தை அணுகும் வேலைகள் நடக்கட்டும். அதே நேரத்தில் மாற்றுத் திட்டத்தையும் அறிவித்து வைப்போம் என்ற முடிவிற்கு வந்தார் கருணாநிதி. இதன் பின்னணியில்தான் "அக்கார்டு ஹோட்டலில் ஏற்கனவே அறிவிக்கப் பட்டபடி 12ஆம் திகதி காலை ஆய்வரங்கம் நடைபெறும். நீதிமன்றத் தடை நீடிக்கு மேயானால் மாநாடு தி.மு.க.வின் தலை மைக்கழகமான அண்ணா அறிவாலயத் தில் மாலை நடைபெறும். 20ஆம் திகதி யிலிருந்து 30ஆம் தேதி வரை ரெசோ மாநாட்டுத் தீர்மானங்களை விளக்கி தமிழ்நாடு முழுவதும் பொதுக்கூட்டங்கள் நடத்தப்படும்'' என்று 11ஆம் திகதி மாலை அறிவித்தார் தி.மு.க. தலைவர் கருணாநிதி.

### "அக்கார்டு" ஹோட்டலில் ஆய்வரங்கம்:

ஏற்கனவே ஒய்.எம்.சி.ஏ. மைதானத் தில் தடபுடலாக பந்தல், மேடை எல்லாம் அமைக்கப்பட்டிருந்தது. அந்த மேடைக்கு மட்டும் 75 லட்சம் ரூபாய் செலவாம். இதை அப்படியே விட்டு விட்டு "அண்ணா அறிவாலயத்திலும்'' ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினார்கள். மாநாடு ஒன்று. ஆனால் நடத்த விரும்பிய இரு இடங்களிலும் மாநாட்டு ஏற்பாடுகள் என்று வித்தியாசமான காட்சியாக இருந்தது. இந்நிலையில் பரபரப்பான சூழ் நிலையில் 12ஆம் தேதி காலை வழக்கம் போல் "அக்கார்டு'' ஹோட்டலில் ஆய் வரங்கம் தொடங்கியது. இலங்கையிலி ருந்து வந்திருந்தவர் நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்தின மட்டும்தான்! அகில இந்தியத் தலைவர்களான சரத்பவார், பரூக் அப்துல்லா, சரத் யாதவ் ஆகியோர் வரவில்லை. முலாயம்சிங்கின் சகோதரர் ராம்கோபால் யாதவ் கூட வரவில்லை.



திராவிட இயக்கப்பேரவையின் சுப வீரபாண்டியன் மட்டுமே அந்த தம்பிகள் என்று விடுதலைப் புலிகளை தனது பேச்சில் மறைமுகமாக குறிப்பிட்டார். ஈழத்தமிழர்களே கருணாநிதியை நம்புங்கள் என்றும் அழைப்பு விடுத்தார்

இத்தனைக்கும் ரெசோ மாநாட்டுப் பணிகளைக் கவனித்தவர்களில் ஒருவ ரான வழக்கறிஞர் கே.எஸ். ராதாகிருஷ் ணன் இலங்கைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களுடன் தொடர்பில் இருந்தார். "அனைவரும் வருகிறார்கள்'' என்று கடைசி வரை சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் இலங்கைத் தமிழ் எம்.பி.க்கள் ஒருவர் கூட வராததால் மாலையில் மாநாடு நடைபெற்ற போது அமைதியாக கீழ் வரிசையில் அமர்ந்துவிட்டார் ராதாகிருஷ்ணன். அந்த அளவிற்கு அவர் அப்செட் ஆகிவிட்டார்.

### தீர்மானங்களும், விவாதங்களும்:

ஆய்வரங்கத்திற்கான "வரைவுத் தீர்மானங்கள்'' 11ஆம் திகதி மாலையே தயாராகி விட்டது. அந்தத் தீர்மானங்கள் ஆய்வரங்கத்தில் விவாதத்திற்கு விடப் பட்டது. இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளுக்கு இந்திய குடியுரிமை வழங்க வேண்டும் என்பது பற்றிய தீர்மானம் வந்த போது காஷ்மீரிலிருந்து தேசிய மாநாட்டுக் கட்சியின் சார்பில் பரூக் அப்துல்லாவின் பிரதிநிதியாக வந்திருந்த ஷாரிக், "அது பிரச்சினைக்குரியது. சாத் தியமில்லாதது. இப்போது அஸாமில் நடைபெறும் கலவரம் அப்படியொரு பிரச்சினையால்தான் நடக்கிறது.'' என்று கூறியிருக்கிறார். ஆனால் தி.மு.க. தரப் பிலோ, "அது சட்டவிரோதமாக குடியேறி யவர்கள் பிரச்சினை. இது அகதிகள் தொடர்புடையது. இரண்டிற்கும் வித்தி யாசம் இருக்கிறது'' என்று விளக்கினார் கள். அந்த நேரத்தில் நைஜீரியாவிலி ருந்து வந்திருந்த எம்.பி. அப்துல் ரஜாக் மோமோ, ஸ்வீடன் எம்.பி நஸீக் மாலிக் போன்றோர், வேறு ஒரு விஷயத்தை ஆய்வரங்கத்தில் கூறினார்களாம். அது தான் அகதிகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் மன்றத்தின் ஒப்பந்த ஆணை பற்றியது. இது பற்றிக்கூறிய அவர்கள், "இதுவரை 120க்கும் மேற்பட்ட நாடுகள் அந்த ஒப்பந்த ஆணையில் கையெழுத்து இட்டன. ஆனால் இந்தியா மட்டும் கையெ ழுத்திடவில்லை. அதை வற்புறுத்துங்கள். இலங்கைத் தமிழர்களில் இங்குள்ள அகதிகள் "பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும்'' என்று கூறியிருக்கிறார்கள். இதை ஏற்றுக் கொண்டுதான் "மத்திய அரசு (இந்திய அரசு) அனைத்து இலங்கை அகதிகளுக்கும் இந்தியக்குடியுரிமை வழங்க வேண்டும். அகதிகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் மன்றத்தின் ஒப்பந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணை இந்தியாவில் பின்பற்றப்பட வேண்டும்என்றுஇம்மாநாடுவற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது'' என்று ஆய்வரங் கத்திலேயே (9ஆவது தீர்மானம்) முடிவு செய்யப்பட்டது.


ரெசோ மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட 14 தீர்மானங்களில் இந்த 9ஆவது தீர்மானம் மட்டுமே வெளிநாட்டுப் பிரதி நிதிகளின் ஆலோசனையின் பேரில் வடிவமைக்கப்பட்டது. அதேபோல் மாநாட் டிற்கு தடை விதிக்க முயற்சி செய்த அ.தி.மு.க. அரசைக் கண்டிக்கும் கடைசித் தீர்மானமான 14ஆவது தீர்மானத்தை ஆய்வரங்கில் முன்மொழிந்தவர் உள்நாட் டில் உள்ள லோக்ஜனசக்தித் தலைவரான ராம்விலாஸ் பஸ்வான். இந்த இரு தீர்மானங்கள் தவிர மற்றத் தீர்மானங்கள் எல்லாமே ஜெனீவா தீர்மானம், எல். எல்.ஆர்.சி அறிக்கை போன்றவற்றை அடிப்படையாக வைத்து போடப்பட்டது தான். முக்கியமாக ஆய்வரங்கத்தில் கலந்து கொண்ட வெளிநாட்டுப் பிரதி நிதிகள் எல்லாமே, “தனி ஈழம் போன்ற வற்றை வலியுறுத்தாதீர்கள். ஏனென் றால் ஐ.நா.வை வலியுறுத்தும் தகுதி படைத்த வலிமையான நாடுகள் எல் லாமே விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்திருக்கிறார்கள். ஆகவே மனித உரிமை, மறு வாழ்வு போன்றவற்றை வலியுறுத்தி இலங்கை அரசுக்கு கிடுக் கிப்பிடி போடுங்கள்'' என்று ஆலோசனை வழங்கியிருக்கிறார்கள். அதனால்தான் நிறைவேற்றப்பட்ட 14 தீர்மானங்களில் பெரும்பாலானவை இலங்கைத் தமிழர் களின் மறுவாழ்வு தொடர்புடையதாகவே இருந்தது. இவற்றில் நான்காவது தீர் மானத்தில், “இலங்கையில் தமிழ் மக்கள் தாங்கள் விரும்பும் அரசியல் தீர்வை தாங்களே முடிவு செய்து கொள்ளும் வகையில் அவர்களுக்கு முழு உரிமை வழங்குவதற்கு இந்திய அரசு ஐ.நா. மன்றத்தில் தீர்மானம் கொண்டுவர வேண்டும்'' என்ற வரிகளும், பத்தாவது தீர்மானத்தில், “இலங்கைத் தமிழர்க ளிடம் ஐக்கிய நாடுகள் மன்றத்தின் மூலம் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண் டும். அது தெற்காசிய மனித உரிமைகள் பிரச்சினையாக முன்னிலைப்படுத்த வேண்டும்'' என்ற வரிகளும் முக்கியமா னதாக கருதப்படுகிறது.

### விலகிய ரெசோ தீம் பேப்பர்:

ரெசோ மாநாட்டிற்கான “தீம் பேப் பரை'' முன்கூட்டியே வெளியிட்டார் கருணாநிதி. அதில் இந்தியாவை வற் புறுத்தும் ஆலோசனைகள் அதிகம் இருந் தன. இலங்கை மீது பொருளாதார அழுத்தம் கொண்டு வர இந்தியா பாடுபட வேண்டும் என்பதும் விவாதத்திற்கு வைக்கப்பட்டது. ஆய்வரங்கத்தில் பேசிய வெளிநாட்டுப் பிரதிநிதிகள், “நீங்கள் இந்தியாவை மட்டுமே நம்பியிருப்பதை விட, “சார்க்'' மற்றும் “ஏசியான்'' அமைப்புகளை நம்புங்கள். அவர்கள் முன்பு இப்பிரச்சினையை எடுத்துச் செல்லுங்கள் என்று கூறியிருக்கிறார்கள்.

ஆனால் உள்நாட்டுப் பிரதிநிதிகளான ராம்விலாஸ் பஸ்வான் போன்றோர், “அந்த நாடுகள் எல்லாமே வர்த்தக ரீதியாக இலங்கையுடன் தொடர்பில் இருக்கின்றன. அதே போல் இந்தியாவு க்கும் பிரச்சினைகள் இருக்கிறது'' என்று கூறவே, அது தீர்மான வடிவில் வர வில்லை. முதலில் அனைத்து தீர்மானங் களும் இந்தியாவை வலியுறுத்தியே இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண் டும் என்று முடிவு செய்யப்பட்டது. ஆனால்

## தி.மு.க. தொண்டர்களை திருப்திப் படுத்துவதே நோக்கம்



**டி.கே. ரங்கராஜன்**
ராஜ்யசபை உறுப்பினர்
மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி
தமிழர் தேசிய இயக்கத் தலைவர்

தி.மு.க. எப்போதுமே இனம், மொழி சொல்லியே மக்களை தன் பக்கம் வைத்துக் கொண்டு வந்திருக்கிறது. அந்தக் கட்சியின் தொண்டர்களையும் அப்படியே வளர்த்து வைத்துள்ளது. தேர்தல் தோல்விக்குப் பிறகு தங்கள் அணி பலமாக இருக்க வேண்டும் என்ப தற்காகவும், தொண்டர்களை திருப்திப் படுத்தவும் இந்த ரெசோ மாநாட்டை கையிலெடுத்திருக்கிறது தி.மு.க. ரெசோ மாநாடு நடத்தப்பட்டதில் அவர்கள் எதிர்பார்த்ததை விட எதிர்ப்புகள்தான் அதிகம் வந்திருக்கிறது.

ஆனால் அந்த மாநாட்டை தடை செய்வது சரியல்ல. ஜனநாயக நாட்டில் ஒவ்வொருவருக்கும் கருத்துச் சொல்ல உரிமை உண்டு. அவர்கள் சொல்லும் கருத்து சரியா, தவறா என்பதை முடிவு செய்ய வேண்டியது மக்கள்தானே தவிர பொலிஸ் கமிஷனர் அல்ல. இந்த மாநாடு முழுக்க முழுக்க தி.மு.க.வின் நலனுக்காகவே நடத்தப்பட்டது.

நாட்டை வாட்டும் பொருளாதாரப் பிரச் சினைகள், மத்திய - மாநில உறவுகள் போன்றவை பற்றியெல்லாம் தி.மு.க. வால் இப்போது பேசி அரசியல் பண்ண முடியாது.

ஏனென்றால் அவர்கள் மத்திய அமைச்சரவையில் அங்கம் வகிக்கி றார்கள். அதனால் தன் கட்சியைப் பலப் படுத்தவும், நிலைநிறுத்திக் கொள்ளவும், மொழி, இனம் போன்றவற்றில் வளர்ந்து விட்ட தன் தொண்டர்களை உற்சாகப் படுத்தவும் இந்த மாநாட்டை நடத்தி யிருக்கிறார்.

“ஐ.நா சபை தலையிட இந்தியா வலியுறுத்த வேண்டும்'' என்று போட்டிருக்கின்ற தீர்மானத்தைப் பொறு த்தமட்டில், இந்தியா அந்த முயற்சியில் இறங்காது. ஏனென்றால் இந்திய - இலங்கை வர்த்தக உறவுகள் 25000 கோடி ரூபாய் மதிப்பில் நடைபெற்று வருகிறது. நம்மூர் டி.வி.எஸ்-பிப்டி வாக னங்கள் இலங்கையில் ஓடிக் கொண் டிருக்கிறது. இங்குள்ள சிமெண்ட் பேக்டரி எல்லாம் அங்கே போயிருக்கிறது. இப் படிப்பட்ட வர்த்தக உறவைப் பாதிக்கும் விதமாக இலங்கைத் தமிழர் பிரச்சி னையில் ஐ.நா. தலையிட வேண்டும் என்ற கோரிக்கையை ஒரு காலத்திலும் இந்தியா முன்வைக்காது.

ஏனென்றால் எப்போதுமே இந்தியா தன் நலனுக்கு எதிராக மற்றொரு நாட்டு விவகாரத்தில் தலையிடாது. அது இலங்கைக்கும் பொருந்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வரங்கத்திற்கு பிறகு ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி ஏழு தீர்மானங்களிலும், இந்திய அரசை வலியுறுத்தி ஐந்து தீர்மானங்களிலும் வாசகங்கள் சேர்க்கப்பட்டன. குறிப்பாக ரெசோ தீம் பேப்பரில் சொல்லப்பட்டிருந்த இலங்கை மீதான பொருளாதார அழுத்தம் பற்றிய தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை. ஆனால் அதில் சொல்லப்படாத கச்சதீவு மீட்பு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## கூட்டமும், குரல்களும்!

தீர்மான விவாதங்கள் முடிந்த பிறகு மாலையில் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் மாநாடு தொடங்கியது. மருந்துக்குக் கூட பொலிஸ் பாதுகாப்பிற்கு இல்லை. அதற்குப் பதில் தி.மு.க.வின் தொண்டரணியைச் சேர்ந்தவர்களே அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளையும் கவனித்துக் கொண்டார்கள். மேடையில் ஈழத்தமிழர்கள் இன்னல்களை விளக்கும் பாடல்கள் பாடப்பட்டன. அதில் "இருட்டறையில் உள்ளதடா ஈழம். அங்கு எலும்புக்கூடாய் தமிழன் இருக்கின்றானே" என்ற வரிகள் அடங்கிய கருணாநிதியின் பாடல் முதலில் ஒலிக்கப்பட்டது. இப்பாடலை பத்து நிமிடத்தில் எழுதிக் கொடுத்திருந்தார் கருணாநிதி. இதே போல் 12 பாடல்கள். வைரமுத்து உள்ளிட்ட பல்வேறு கவிஞர்கள் எழுதியிருந்தாலும், மேடையேறியது ஆறு பாடல்கள்தான். அவற்றில் "மனித உரிமை உலக நீதி எல்லாம் போலியா, அறுக்குதய்யா முள்ளு வேலியா" "ஓய்ந்தது நேற்றைய யுத்தம், சுயஉரிமை கேட்குது நம் ரத்தம்" போன்ற வரிகள் குறிப்பிடத்தக்கவை. கவிஞர் வைரமுத்துவின் பாடலான "ஈழத்தமிழா, ஈழத்தமிழா பிறந்தும் இறவா ஈழத்தமிழா" என்ற பாடல் உருக்கமாக இருந்தது. மேடையில் பாடல்கள் முடிந்ததும், முதலில் ரெசோ வரவேற்புக் குழுத் தலைவர் மு.க.ஸ்டாலின் பேசினார். அவரது பேச்சில் குறிப்பிடத்தக்க அம்சம், "ஒரே கொடி, ஒரே அரசியல் சட்டம் என்று சொன்னால் கூட பரவாயில்லை. நம்மால் புரிந்து கொள்ளவும், பொறுத்துக்கொள்ளவும் முடியும்" என்ற வரிகள் குறிப்பிடத்தக்கவை. ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு என்பதை வலியுறுத்துவது போல் ஸ்டாலினின் பேச்சு அமைந்தது. ஆனால் தந்தை செல்வா பற்றிப் பேசிய அவர் பிரபாகரன் பற்றிப் பேசவேயில்லை. பிரபாகரன் பெயர் சொல்லாமல் ரெசோ மாநாடு நடத்தியது தி.மு.க. என்றே சொல்ல வேண்டும்.



நைஜீரியா எம்.பி. அப்துல் ரசாக் மோமோ, "ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த சார்க், ஏசியான் போன்ற அமைப்புகள் மூலம் இலங்கை மீது அரசியல் ரீதியான அழுத்தம் கொடுக்க வேண்டும். அதைக் கேட்கவில்லையென்றால் பொருளாதார ரீதியாக அழுத்தம் கொடுக்க வேண்டும்" என்றார். மாநாட்டில் இலங்கை மீது பொருளாதாரரீதியாக அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று பேசிய வெளிநாட்டுப் பிரதிநிதி இவர் மட்டுமே. திராவிடர் இயக்கப் பேரவையின் சார்பில் பேசிய சுப வீரபாண்டியன் மட்டும், "அந்த தம்பிகள்" என்று விடுதலைப் புலிகளை மறைமுகமாகக் குறிப்பிட்டார். உள்ளூரில் ரெசோ மாநாட்டை விமர்சிப்போரை, "நேற்றுப் பெய்த மழையில் இன்று முளைத்த தம்பிகள் விமர்சிக்கிறார்கள்" என்று சாடியவர், "அடுத்தகட்டமாக கூட்டம் போட வாருங்கள் என்று உலகத் தமிழினம் அழைக்கிறது. ஆனால் உள்ளூர் தமிழினமோ நமக்கு எதிராக ஒன்று திரண்டிருக்கிறது" என்றவர், "ஈழத்தமிழர்களே இந்தத் தலைவரை (கருணாநிதியை) நம்புங்கள்" என்றார் ஆவேசமாக. லோக்ஜன சக்தி தலைவர் ராம்விலாஸ் பஸ்வான், "இலங்கை சுதந்திரம் அடைந்ததில் இருந்து அங்கு எந்தத் தமிழரும் பிரதமராகவோ, அதிபராகவோ ஆக முடியவில்லை. தமிழர்கள் கொத்துக் கொத்தாக கொல்லப்படுகிறார்கள். இங்கோ தமிழர்கள் என்றாலே எல்.டி.டி.ஈ.யா என்று வடமாநிலங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கிறார்கள். இலங்கையில் தமிழர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். நீங்கள் எங்கள் பகுதியிலும் வந்து மாநாடு போடுங்கள். அப்போதுதான் இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி அவர்களுக்கும் தெரியும். தீர்வு எட்ட வேண்டியது ஐக்கிய நாடுகள்சபையா, மத்திய அரசா என்பதை நாம் முடிவு செய்வோம்'' என்ற ரீதியில் பேச அதற்கு பலத்த கைதட்டல்.

ஆம்னெஸ்டி இன்டர்நேஷனலின் தேசிய இயக்குநர் ஆனந்த் குருசாமி, "நாங்கள் மனித உரிமை மீறல் பற்றித் தான் அதிக கவலை கொள்கிறோம். 2009இல் போரின் போது இலங்கை அதிபர் ராஜபக்ஷ வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. மனித உரிமை மீறல்கள், வெள்ளை வான் கடத்தல்கள், விசாரணை இன்றி தீர்ப்பு, தண்டனை எல்லாம் இன்னும் இலங்கையில் தொடருகிறது. ஆனால் இலங்கையுடன் சீனாவின் உறவைக் கண்டு இந்தியா அஞ்சுகிறது. மனித உரிமைகள் மீறல் விடயத்தில் நடவடிக்கை எடுக்காமல் "கொள்கையற்ற சுயநலத்தில்'' சிக்கிக் கிடக்கிறது இந்தியா. இங்கும் மனித உரிமை மீறல்கள் இருப்பதால், கண்ணாடி வீட்டிற்குள் இருந்து கல்லெறியும் நிலையில் இந்தியா இருக்கிறது. வருகின்ற நவம்பர் மாதம் ஐ.நா. மன்றத்தில் இலங்கை பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அந்தக் குழுவில் இந்தியாவும் இருப்பதால் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கலாம்'' என்றவர், "மனித உரிமை மீறல்களை இலங்கை அரசும் செய்திருக்கிறது. விடுதலைப் புலிகளும் செய்திருக்கிறார்கள்'' என்றார். ரெசோ மாநாட்டு மேடையில் விடுதலைப் புலிகளும் மனித உரிமை மீறல்கள் செய்தார்கள் என்று பேசியது இவர் மட்டுமே! ஆனால் ஸ்வீடன் நாட்டு எம்.பி. நாஸிம் மாலிக் சற்று வித்தியாசமாகப் பேசினார். அவர், "கடந்த காலத்தை மறந்து விடுங்கள். பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண முயற்சி செய்யுங்கள்.

பிரச்சினைக்குத் தீர்வு காண வன்முறை உதவாது. ஒரு நாட்டின் இறையாண்மை மற்றும் சட்டத்தை நாம் மதிக்க வேண்டும்'' என்றவர் மேடையில் வீற்றிருந்த கருணாநிதிக்கு ஒரு "கிரிஸ்டலையும்'' எதிர்காலத் தலைவர் என்று கூறி ஸ்டாலினுக்கு "ரோஸு''ம் அன்பளிப்பு வழங்கினார். மேடையில் இருந்த முன்னாள் அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசனுக்கு ஒரு பேனாவையும் பரிசளித்தார். தி.மு.க. தலைவரின் பாடலைப் பாடிய பாடகர் வேல் முருகனுக்கும் அன்பளிப்பு கொடுத்தார். அடுத்து வந்த தேசிய மாநாட்டுக் கட்சி பிரதிநிதி ஷாரிக் காஷ்மீரைச் சேர்ந்தவர். அவர் என்ன பேசப் போகிறார் என்று ஆவலுடன் கவனித்தார்கள். அவரோ, "மனித உரிமைகளை மீட்பதற்கும், இலங்கைத் தமிழர்கள் கண்ணியத்துடன் வாழ்வதற்கும் காஷ்மீர் மக்கள் உறுதுணையாக இருப்பார்கள்'' என்று பேசி முடித்துக் கொண்டார். விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத் தலைவர் திருமாவளவன், "இடையில் ஏற்பட்ட அரசியல் முரண்பாடுகளால் அமைதிகாத்தார் கலைஞர். எந்த விடுதலை இயக்கமும் வல்லரசுகளின் துணையில்லாமல் வெற்றி பெற்றதில்லை. ஆகவே நாம் சர்வதேச ஆதரவைப் பெற வேண்டும். எல்.டி.டி.ஈ.யினர் பயங்கரவாதிகள் என்று உலக நாடுகளில் ரணில் விக்ரமசிங்க செய்த பிரசாரத்தை இப்போது அதிபர் ராஜபக்ஷ அறுவடை செய்கிறார். தமிழ் ஈழமே தீர்வு என்பதற்கு சர்வதேச ஆதரவைத் திரட்ட வேண்டும்'' என்றவர், "ஈழத்தமிழர்களுக்காக பாயும் புலியாகப் புறப்படுங்கள். உங்கள் தலைமையில் நாங்கள் களமிறங்கத் தயார்'' என்று உணர்ச்சிகரமாகப் பேசினார். அவர் மட்டும்தான் "ஈழம் வெல்லும். காலம் சொல்லும்'' என்று தன் பேச்சை முடித்தார்.

நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்ரமபாகு கருணாரத்ன, "எல்.எல்.ஆர்.சி. பரிந்துரைகளை அமுல்படுத்துவேன் என்று அதிபர் ராஜபக்ஷ வாக்குறுதி கொடுத்தார். ஆனால் செய்யவில்லை. இந்தியத் தலைமையை வலியுறுத்துங்கள். அழுத்தம் கொடுங்கள்.'' என்றவர், "தமிழ் நேஷன் இருப்பதை அங்கீகரிக்க வேண்டும்'' என்று பேசினார். திராவிடக் கழகத் தலைவர் வீரமணியோ, "ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு என்கிறார்கள். ஓநாய் வயிற்றுக்குள் எப்படி ஆட்டுக்குட்டி இருக்க முடியும். ஏன் ஈழம் கேட்கவில்லை என்கிறார்கள். நான் சொல்கிறேன்.


காலத்தின் கட்டாயம் ஈழத்தை நோக்கியே போகும். இப்போது நாம் அது பற்றிப் பேச வேண்டாம்'' என்றவர், "இங்குள்ளவர்களுக்கு பொது எதிரி கலைஞரா, ரெசோவா, ராஜபக்ஷவா'' என்று கேள்வி எழுப்பினார். "நீங்கள் யாருடைய அம்பிற்கும் வில்லாகி விடாதீர்கள். அதனால் நஷ்டம் எங்களுக்கு இல்லை'' என்று புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு எச்சரிக்கை விடுத்தார். இவரும் "வாழ்க தமிழ் ஈழம்'' என்றே தன் பேச்சை முடித்தார். இறுதியில் பேசிய தி.மு.க. தலைவர் கருணாநிதி, ""இந்த மாநாட்டின் வெற்றி உலகம் முழுவதும் இருக்கின்ற தமிழர்கள் மாத்திரமல்ல, தமிழரல்லாதோரும், அரசியல்வாதிகளும், ஈழத்தமிழர்கள் பால் அன்பு கொண்ட அத்தனை பேரும், இரக்கம் கொண்ட அத்தனை பேரும் அழுத்தம் கொடுத்து இந்தத் தீர்மானத்தை (தமிழ் மக்கள் தாம் விரும்பும் அரசியல் தீர்வை முடிவு செய்து கொள்ளும் உரிமை) வலியுறுத்துவார்களேயானால் நாம் காணுகின்ற கனவு நிச்சயமாக நிறைவேறும். இலங்கையில் அல்லல் தீரும்'' என்றார் தீர்க்கமாக.

### ஐ.நா.வுக்குப் போகிறது தி.மு.க.:

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் எதிர்க்கட்சி வரிசையில் இருந்து இப்போதுதான் தீவிரமாக கையிலெடுத்து இருக்கிறார் தி.மு.க. தலைவர். வருகின்ற 20ஆம் தேதி முதல் 30ஆம் தேதி வரை தமிழகமெங்கும் பொதுக்கூட்டங்கள் போட்டு ரெசோ மாநாட்டுத் தீர்மானங்களை விளக்கப் போகிறார். மத்திய அரசில் பங்கேற்பதால் விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றியோ, பிரபாகரன் பற்றியோ மேடையில் பேசாமல் தவிர்த்து இருக்கிறார்கள்.

அதனால்தான் முன்கூட்டியே மாநாட்டுப் பந்தலுக்கு பதாகைகளோ, கொடிகளோ கொண்டுவரக்கூடாது என்று தி.மு.க. தலைமைக் கழகம் உத்தரவு போட்டிருந்தது. ரெசோ விளக்கப் பொதுக் கூட்டங்கள் முடிந்தவுடன் தி.மு.க.வோ அல்லது மாநாட்டில் பங்கேற்ற வெளிநாட்டுப் பிரதிநிதிகள் மூலமாகவோ இந்தத் தீர்மானங்களை ஐ.நா. மன்றத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லும் முயற்சிகளில் இப்போதே தீவிரமாக இறங்கியுள்ளார் தி.மு.க. தலைவர் கருணாநிதி என்பதுதான் ஹைலைட். ஐ.நா. தீர்மானத்தின்படி இலங்கை அரசு எடுக்கும் நடவடிக்கையை மேற்பார்வையிட சர்வதேச குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்ற தீர்மானம் இருப்பதால், ரெசோ தீர்மானங்களை இந்திய அரசுக்கே அனுப்பி, இந்தியா மூலம் ஐ.நா. மன்றத்திற்கு அனுப்பலாம் என்று சில ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாம். எப்படியிருந்தாலும் இனி தமிழகத்தில் "ரெசோ'' சூடு பிடிக்கும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கிழக்குத் தேர்தல்




# இருப்புக்கும் இரு
# இடையிலான பே

### ஏனிந்தத் தேர்தல்?

கிழக்கில் தேர்தல் களம் சூடு பிடித்துள்ளது. மும்முனைப் போட்டி என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயமே. ஆயினும் எந்தக் கட்சி முதலிடத்தை, அதாவது அதிகூடிய ஆசனங்களைப் பெறும் என்பதில்தான் போட்டி களைகட்டியுள்ளது. இந்த மாகாணத்தின் இன விகிதாசாரம் துரிதமாக மாற்றமடைந்த வகையில் தற்போது முதலிடத்தில் முஸ்லிம்கள் உள்ளனர். இரண்டாம் இடத்திலேயே தமிழ் மக்கள் உள்ளனர். அப்படிப் பார்க்கையில் முஸ்லிம் ஒருவரே முதலமைச்சராக வரவேண்டும் என்ற எதிர்பார்ப்பில் உள்ளநியாயத்தைநிராகரித்திடமுடியாது. ஆனால் ஆளுங்கட்சிக் கூட்டணிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் மோசமாகப் பிளவுபட்டிருப்பதால் முஸ்லிம் முதலமைச்சர் கனவு கேள்விக்குறியாகவே உள்ளது.

எந்தவொரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெறும் நிலையிலும் இல்லை. யார் முதலமைச்சர் என்று முன்கூட்டியே அறிவிக்கக்கூடிய அரசியல் ஸ்திரப்பாட்டுடனும் இல்லை. இது களநிலையின் அந்தரிப்பு நிலையை வெளிக்காட்டி நிற்கின்றது. எல்லா முஸ்லிம் கட்சிகளையும் தன்னோடு இணைத்துப் போட்டியிட வைப்பதன் மூலம் ஆட்சியை மீண்டும் கைப்பற்றி விடலாம் என்ற அரசின் ஆசையில் மண்போடுவதாக அமைந்தது முஸ்லிம் காங்கிரஸின் இறுதிநேர அறிவிப்பான தனித்துப் போட்டியிடல் அறிக்கையாகும்.

காங்கிரஸின் அடிமட்டத் தொண்டர்களின் நெருக்குவாரம், ஹசன் அலி, நிசாம் காரியப்பர் போன்ற கிழக்குத் தலைவர்களின் விடாப்பிடியான நிலைப்பாடு, முஸ்லிம் ஒருவர் முதலமைச்சராக நியமிக்கப்படுவார்என்றஉத்தரவாதத்தை வழங்க அரசாங்கம் பின்னடித்தமை, கூட்டமைப்பு சார்பில் புத்திஜீவிகள் சிலர் முன்னெடுத்த மதியுரைச் சந்திப்புக்கள் என்று எல்லாமாகச் சேர்ந்து காங்கிரஸைத் தனிவழிபோக வைத்து விட்டது.

இன்னும் ஒன்றரை வருட காலம் நீடித்திருக்க வேண்டிய ஆட்சி ஏன் கலைக்கப்பட்டு அவசரமாகத் தேர்தல் எதிர்கொள்ளப் படுகின்றது என்பதிலே பல கேள்விகளுக்குமான விடையை நாங்கள் கண்டு கொள்ளலாம். தன்னுடைய இரண்டாவது பதவிக்காலம் ஆரம்பிக்க முன்னரேயே அவசரத்திருத்தம் என்ற பெயரில் அரசியலமைப்புக்குப் பதினெட்டாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ழப்புக்கும்
# மாதல்

மாறவர்மன்

திருத்தத்தைக் கொண்டுவந்து, ஜனாதி பதிப் பதவிக்கு எத்தனை தடவைகள் வேண்டுமானாலும் போட்டியிடலாம் என்று தனது மூன்றாவது தடவைக்கு அத்திவாரமிட்ட அதே ஜனாதிபதி மாகாண சபைகளின் பதவிக்காலத்தை மட்டும் ஏன் முற்கூட்டியே முடிவுக்குக் கொண்டு வந் தார் என்பதை வாக்களிக்கப்போகின்றவர் கள் சிந்திக்காமல் இருக்க முடியாது.

2008 ஆம் ஆண்டு மே மாதம் முதன் முறையாக நடாத்தப்பட்டது கிழக்கு மாகாணசபைத் தேர்தல். இது நடாத்தப் பட்டதன் முக்கிய நோக்கம், பிரித்தெடுக் கப்பட்டகிழக்கு மாகாணத்துக்குதனியான தொரு நிருவாகத்தை உடனடியாகக் கொண்டு வருவதாகும். ஏனெனில், ஏற் கனவே சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்த கிழக்கு மாகாண விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்கும் ஆதரவாளர்களுக் கும் ஒரு தெளிவான சமிக்ஞையைக் கொடுத்து அவர்களை முற்றாகக் கள நிலையிலிருந்து அப் புறப்படுத்த வேண் டிய உடனடித் தேவை அன்றிருந்தது. எனவே தான் அரசாங்கம் தானே முன்ன தாக அப்போதைய பிரதியமைச்சர் ஹிஸ் புல்லாவுக்கு வழங்கியிருந்த வாக்குறுதி யையும் மீறி பிள்ளையான் என்கின்ற முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினரை முதலமைச்சர் ஆக்கியது. புலிப் போராளி உடையைக் களைந்த பிள்ளையான், வேஷ்டி, சேர்ட்டு, சால்வை என்று அணி யத் தொடங்கி முதலமைச்சர் சிவநேச துரை சந்திரகாந்தனாக மாறிவிட்டார். வெறுமனே ஒரு சிற்றூழியரைக் கூட நியமிப்பதற்கு அதிகாரமற்ற முதல மைச்சர் பதவி என்று தெரிந்த பின்னரும் அவரால் அதன் பின்னர் ஆடைமாற்றம் செய்ய முடியாமல் போய்விட்டது. ஆனாலும் அவர் தனது கட்சிக்கு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி என்ற பெயரையே இன்னமும் தக்க வைத்துக் கொண்டிருக்கின்றார்.

ஆயின், தற்போதைய அவசர தேர்தலுக் கான உண்மைக் காரணம் என்னவாக இருக்கும்? மாகாணத்தில் பெரும் பாலான மக்கள் இஸ்லாமியர்களாக இருக்கையில் அரசாங்கம் நோன்புக் காலத்தில் தேர்தலை வரச்செய்துவிட்டது. மறுபுறத் தில் க.பொ.த. (உ.த.) பரீட்சை யில் மாணவர்கள் தோற்றிக் கொண்டிருக் கையில் தேர்தல் பிரசாரங்கள் அவர்கள் கவனத்தைத் திசைமாற்றி ஈர்க்கக் கூடும். இதையெல்லாம் பற்றி அரசாங்கம் கொஞ்சமேனும் கவலைப்பட்டதாகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தெரியவில்லை. செப்ரெம்பர், ஒக்டோபர் என்றுகாத்திருக்கக்கூடஅதற்குஅவகாசம் இருந்திருக்கவில்லை. என்னதான் அவசரமோ?

இந்த விடயத்தில் கூட்டமைப்பு கூறும் காரணத்துக்கும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டுக்கும் இடையில் அதிசயமான ஓர் ஒற்றுமை காணப்படுகின்றது. இது சர்வதேசத்துக்குக் காட்டுவதற்கான தேர்தல் என்கின்றது கூட்டமைப்பு. ஆம், மக்கள் எங்களுடன்தான்என்பதைக்காட்டுவோம் என்கின்றது அரசாங்கம். புலிகளை ஓரங்கட்டுவதற்காகவே அன்றைய தேர்தல் என்றால் சர்வதேசத்தை ஓரங்கட்டுவதற்காகவே இன்றைய தேர்தல் என்பதில் சந்தேகமில்லை. ஆனாலும் இந்த முயற்சியில் காட்டப்படும் அவசரம் நவம்பர் மாதத்தைய ஜெனீவா அமர்வுகள் மற்றும் மனித உரிமைகள் பேரவையின் மார்ச் மாதத்தைய முக்கிய அமர்வுகள் என்பவற்றை இலக்கு வைத்துள்ளமையை ஏற்கத்தான் வேண்டும். முன்னைய தேர்தல் யுத்த தந்திரோபாயமாகப் பாவிக்கப்பட்டது என்றால் தற்போதைய தேர்தல் யுத்தத்தை வென்ற முறை சரியானதே என்பதற்கான உத்தர வாதத்தை அதனால் பாதிக்கப்பட்டிருக்கக் கூடிய ஒருசாரரிடமிருந்து பெற்று உலகுக்குக் காட்டுவதற்கே நடாத்தப்படுகின்றது எனலாம்.

அது மட்டுமன்றி, இத்தேர்தலில் கிடைக்கும் வெற்றி வடக்குக்கும் ஒரு செய்தியைச் சொல்லாமற் சொல்லும். அபிவிருத்தி வேண்டுமென்றால் எங்களோடு நில்லுங்கள். இருப்பதைக்கொண்டுவாழப்பழகுங்கள், அதைவிடுத்து என்னதான் கரடியாகக் கத்தினாலும் ஆகப்போவது ஒன்றுமில்லை என்பதாக இச்செய்தி அமையலாம். அதற்கும் மேலாக, கடந்த காலம் போலன்றி, யுத்தத்தின் பின்னர் நடாத்தப்படும் இத்தேர்தலில் அரசின் வெற்றி யானது "நீங்கள் வேறு - நாங்கள் வேறு" என்றொரு தகவலையும் கிழக்கானது வடக்குக்குச் சொல்வதாக அமையலாம். இதையே அரசும் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளது.

## மக்கள் யார் பக்கம் ?

தமிழ்ப் பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இந்த மாகாணத்தில் சனத்தொகையில் முதலிடத்தில் அம்பாறை (திகாமடுல்ல) மாவட்டமே உள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தைவிட ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் இருக்கக்கூடிய விதத்தில் அம்பாறை மாவட்டம் காணப்படுகின்றது. கடந்த தேர்தலில் இந்த மாவட்டத்தில் உள்ள பதினான்கு ஆசனங்களில் எட்டு ஆளுங்கட்சிக்கும் ஆறு எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் கிடைத்தன. முஸ்லிம்காங்கிரஸ்எதிர்க்கட்சிஅணியில் இத்தேர்தலைச் சந்தித்தமையினால் தான் ஆறு ஆசனங்கள் அங்கு எதிர்க்கட்சிக்குப் போயின. இம்முறை களநிலைமை மாறியுள்ளது. கூட்டமைப்பு கடந்த தேர்தலைப் பகிஷ்கரித்து இருந்தாலும் தமிழ் வாக்காளர்கள் எல்லோருமே வாக்களிக்காமல் இருந்து விட்டார்கள் என்று கூற முடியாது. அவர்கள் வாக்களிக்க வேண்டிய கட்டாயத்திலிருந்தார்கள்என்பதற்குப் பல்வேறு காரணங்கள் இருந்தன. இம்முறை கூட்டமைப்பும் இருப்பதால் கள நிலைமை மேலும் சிக்கலானதாகவும் இறுக்கமானதாகவும் மாறிவிட்டது.



கூட்டணி ஆட்சிதான் என்பதில் சந்தேகமில்லை என்றாலும் யார் யாருடன் கூட்டமைப்பது என்பதிலேயே கிழக்கின் அரசியல் தடுமாறுகின்றது. மும்முனைப் போட்டியில் முஸ்லிம் காங்கிரஸ் மூன்றாம் இடத்தில் இருந்து இரண்டாமிடத்துக்கு முன்னேறத் துடிக்கின்றது. கூட்டமைப்பு இரண்டாமிடத்திலிருந்து முதலிடத்துக்கு வரமுயற்சிக்கின்றது. இந்த முயற்சியில் முதலமைச்சர் பதவி பற்றி அது அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. ஆளுந் தரப்போ தனது முதலிடத்தைத் தக்க வைக்கப் போராடுகின்றது. இங்கே முதலிடப்போட்டியில்முதலமைச்சர்பதவியும் உள்ளடங்கும். முதலிடத்தைப் பெறும் கட்சிக்கு போனஸ் ஆசனங்கள் இரண்டு உள்ளமையினால் இது கடுமையான

---



# தமிழரின் நிலைப்பாட்டை சர்வதேச சமூகத்திற்கு மீண்டும் உணர்த்த ஒரு வாய்ப்பு

சி.குருநாதன்

'கிழக்கு மாகாணசபைத் தேர்தல் தமிழ் மக்களினதும் முஸ்லிம் மக்களினதும் அரசியல் வரலாற்றில் திருப்பு முனையாக அமைவதற்குப் போதிய வாய்ப்புகள் உண்டு. இனப்பிரச்சினைக் குத் தீர்வு காண்பது தொடர்பான சர்வதேச சமூகத்தின் பங்களிப்பைப் பலவீனப் படுத்துவதற்காக கிழக்கு மாகாணத்தில் தேர்தல் நடத்தப்படு கின்ற நிலைப்பாட்டை எதிர்த்துத் தமிழ்பேசும் மக்கள் வாக்களிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது''.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி. சமகாலத்துக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

கிழக்கில் தீவிரமான தேர்தல் பிரசாரங்களில் அவர் ஈடுபட்டிருக்கின்றதற்கு மத்தியிலும் இப்பேட்டியை அளிப்பதற்கு இணங்கிய சம்பந்தனிடம் இரு கேள்விகளைக் கேட்டோம்.

**இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுவது தொடர்பாக சர்வதேச அனுசரணையுடன் மேற்கொள் ளப்பட்டு வரும் முயற்சியில் கிழக்குமாகாண சபைத் தேர்தல் முக்கிய**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய இரு அரசியல் பேரியக்கங்களைப் பலவீனப் படுத்துவதற்காக எமது கிழக்கு மாகாண சபை தேர்தல் பிரசாரங்களுக்கு இனவாத சாயம் பூசுகின்ற செயற்பாடுகள் தாராளமாக முன்னெடுக்கப்படுகின்றன. இத் தேர்தலில் எங்களிடமிருந்து வெற்றியைத் தட்டிப்பறிக்க எல்லாப் பிரயத்தனங்களையும் மேற்கொள்கின்றனர். தமது இருப்பை பாதுகாப்பதற்கு தனித்துவமான அரசியல் இயக்கங்கள் பலப்படுத்தப்படவேண்டும் என்பதில் கிழக்கு மாகாண மக்கள் தெளிவாக இருக்கின்றனர் என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் 'சமகால'த்திற்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

கிழக்கில் தீவிரமான தேர்தல் பிரசாரங்களில் அவர் ஈடுபட்டிருக்கின்றதற்கு மத்தியில் அதுவும் குறிப்பாக ரமழான் பண்டிகை பரபரப்புக்கு இடையிலும் எமக்கு இப்பேட்டியை அளிப்பதற்கு முன்வந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் தெரிவித்த கருத்துகளை கேள்வி-பதில் வடிவில் தருகிறோம்.

கேள்வி: கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் இதுகாலவரை மேற்கொள்ளப்பட்டிருக்கும் பிரசாரங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடுகளுக்கு எத்தகைய ஆதரவு கிடைக்கும் என்று உங்களால் அனுமானிக்கக் கூடியதாக இருக்கிறது?

பதில் : கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தேசியக் கட்சிகள் தங்களுக்குள்ள சிங்கள வாக்குவங்கியைத் தளமாகப் பாவித்து, 75 வீதத்திற்கும் மேற்பட்ட தமிழ் பேசும் மக்களின் அதிகபட்ச ஆதரவைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய இரு பெரும் பேரியக்கங்களையும் பலவீனப் படுத்துவதற்காக எமது தேர்தல் பிரசாரங்களுக்கு இனவாத சாயம் பூசி வருகின்றன.

பதவிகளைக் கொடுத்து இவ்விரு பாசறைகளிலும் இருந்து விலைபோனவர்களை வைத்துக்கொண்டும், முன்னாள் ஆயுதக் குழுக்களின் முக்கியஸ்தர்களை

# பேரினவாத மேலாதிக்கத் திணிப்பு குறித்து கிழக்கு மக்கள் ஆத்திரம்

போட்டியாகவே இருக்கும்.

ஆளுங்கட்சிக்கு உள்ள ஆசனங்களில் சிலவற்றை எப்படியாவது பிரித்து எடுத்து விட வேண்டும் என்பதிலேயே கூட்டமைப்பும் காங்கிரஸும் குறியாக உள்ளன. மறுபுறத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா ஒவ்வோர் ஆசனத்தையாவது இம்முறை கூடுதலாகப் பெறுவதன் மூலம் தனித்து ஆட்சி அமைக்கும் நிலையை உருவாக்க எல்லா "வழிவகைகளையும்" கையாள்வதற்கு ஆளுந்தரப்பு பின்னிற்கப் போவதில்லை. இவ்விடயத்தில் கூட்டமைப்புக்கும் காங்கிரஸுக்கும் பொதுவான நோக்கொன்று உள்ளது. கையைப் பொத்திப் பிடித்துக்கொண்டு உள்ளதைப் பறிகொடுக்காமல் பார்ப்பதாயின் தனித்துவ அடையாளத்துக்கான வாக்குச் சீட்டுப் போரொன்றை இவ்விரு கட்சிகளும் நடாத்தியே ஆகவேண்டும்.

ஆளுங்கட்சி சென்ற தேர்தலில் மொத்தமுள்ள முப்பத்தேழு ஆசனங்களில் பதினெட்டைப் பெற்று அத்துடன் போனஸ் ஆசனங்கள் இரண்டையுஞ் சேர்த்து இருபது ஆசனங்களைக் கொண்டு ஆட்சியமைத்தது. இம்முறை எப்படிப் பார்த்தாலும் பதினெட்டு பத்தாகக் குறையப் போவதில்லை. அதேவேளை வேறு எந்தக் கட்சியும் பதின்மூன்று வரை முன்னேறுமா என்பதும் நிச்சயமில்லை. ஆளுங்கட்சியின் வெற்றி பதினைந்து ஆசனங்களுக்கு என மட்டுப்படுத்தப்பட்டாலே போதும். அது எதிர்க் கட்சிகளுக்குப் பாரிய வெற்றியாகப் போய்விடும். இந்தப் பொதுவான இலக்கு நோக்கியே காங்கிரஸும் கூட்டமைப்பும் வியூகம் வகுத்துள்ளன. இது கைகூடும் சாத்தியம் இல்லை என்று கூறமுடியாது.

இந்நிலையில், காங்கிரஸ் விரும்பினால் நிச்சயமாகக் கூட்டமைப்புடன் சேர்ந்து ஆட்சியமைக்கும் வாய்ப்பு இருக்கவே செய்கின்றது. இந்தக் கூட்டுக்கான சாதக பாதகங்கள் பற்றிப் பலரும் பலவிதமான கருத்துகளை ஏற்கனவே முன்வைத்துள்ளார்கள்.

மறைந்த தலைவர் மர்ஹூம் அஷ்ரப் அவர்களினால் தனித்துவ அடையாளம் வேண்டும் என்ற கோஷத்துடன் ஸ்தாபிக்கப்பட்ட கட்சியே முஸ்லிம் காங்கிரஸ். அவருக்கான ஆதரவு பெருகிவந்த நேரத்தில் தமிழ் மக்களுடனும் சேர்ந்து அவர் கூட்டமைப்பார் என்ற நிலை வந்தபோது தென்னிலங்கையில் ஒரு விநோதமான பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது. இலங்கைவாழ் முஸ்லிம்களின் தாய்மொழி

திருப்புமுனையாக அமையும் என்று கூறுகின்றீர்கள் அது பற்றி விபரிப்பீர்களா?

இரா.சம்பந்தன்: ஓர் இனத்தின் அரசியல் வரலாற்றில் பலவிதமான ஏற்றங்களும் இறக்கங்களும் ஏற்படுவது சகஜம். விசேடமாக நீண்டகாலமாக ஒரு இனத்தின் தேசியப் பிரச்சினை தீர்க்கப்படாத ஒரு சூழலில் இவ்விதமான நிலையை நாம் எதிர்பார்க்க வேண்டும்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டு நடத்தப்படுவதற்கு சில உள் நோக்கங்கள் இருந்தன. இந்த உள்நோக்கங்களை அரசாங்க அமைச்சர்கள் தற்போது பகிரங்கமாகக் கூறிவருவதற்கு ஆரம்பித்துள்ளனர். அவர்கள் கூறுவது என்னவென்றால் சர்வதேச சமூகத்தின் தலையீட்டையும் அக்கறையையும் குறைப்பதற்கும் பலவீனப்படுத்துவதற்கும் மாகாண சபைத் தேர்தல் முடிவுகள், விசேடமாக கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் முடிவுகள் தமக்குப் பக்கபலமாக அமையும் என்பது ஆகும். வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை பிற்போட்டு வரும் அரசாங்கம் கிழக்கு மாகாணசபைத் தேர்தலை அதன் ஆயுள் முடிவடைவதற்கு இன்னும் ஒரு வருடம் இருக்கையில் முன்கூட்டியே நடத்துவதற்கான காரணம் தெளிவாகப் புரிகின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மத்திய அரசாங்கத்தில் பங்காளியாக இருப்பதன் நிமித்தம் அதன் உதவியுடன் கிழக்கு மாகாணசபை ஆட்சியைக் கைப்பற்றுவது இலகுவான காரியமாக இருக்கும் என்று இலங்கை அரசாங்கம் நினைத்தது. ஆனால் முஸ்லிம் மக்களின் உறுதியான கருத்தின் அடிப்படையில் முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணைந்து போட்டியிடுவதை எதிர்த்த பிறகு தனித்துப் போட்டியிடும் முடிவை முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்தது. இது தேர்தல் நிலைவரத்தில் பாரிய மாற்றம் ஏற்பட்டது.

தற்போதைய சூழலில் தாங்கள் வெற்றி பெறுவோம் என்ற அரசாங்கத்தின் முடிவு தவிடுபொடியாகி விட்டது. தற்போதைய சூழலில் கிழக்கு மாகாணத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கூடிய ஆசனங்களையும் கூடுதல் வாக்குகளையும் பெறுகின்ற கட்சியாக வருவதற்கு போதிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இது தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசும் மக்களாகிய தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் அரசியல் வரலாற்றில் திருப்புமுனையாக அமைவதற்கு போதிய வாய்ப்பு உண்டு. அரசாங்கத்தினுடைய உள்நோக்கம் இப்போது பகிரங்கமாகிவிட்டது. இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுவது தொடர்பான சர்வதேச சமூகத்தின் பங்களிப்பை பலவீனப்படுத்துவதற்காக கிழக்கு மாகாண சபைத்தேர்தல் நடத்தப்படுகின்ற நிலைப்பாட்டை எதிர்த்து தமிழ்பேசும் மக்களாகிய தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் வாக்களிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஏனெனில் சர்வதேச சமூகத்தின் தலையீட்டினால் தமிழ் பேசும் மக்களாகிய தமிழ் மக்களும் முஸ்லிம் தாம் சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்த பிரதேசங்களில் அவர்கள் எல்லோருக்கும் ஏற்புடைய வகையில் சுயாட்சி பிறப்பதற்கு வழி பிறக்கும். அப்பாதை யிலே நாம் தற்போது சென்று கொண்டிருக்கின்றோம். இக்காரணம் நிமித்தம் நடக்கவிருக்கும் கிழக்கு மாகாண சபைத்தேர்தல் ஓர் அதி முக்கியமான தேர்தல் என்பதை எவராலும் மறுக்கமுடியாது.

**கிழக்கு மாகாண சபைக்கு நடத்தப் படவிருக்கும் தேர்தல் அங்கு வசிக்கின்ற தமிழ் பேசும் மக்களாகிய தமிழ் மக்கள் மற்றும் முஸ்லிம் மக்கள் ஆகியோரின் உறவில் ஆரோக்கியமான வளர்ச்சியை ஏற்படுத்த உதவும் என்ற அபிப்பிராயம் உருவாகியிருக்கின்றது. அதுபற்றிய உங்கள் கருத்தைக் கூறுவீர்களா?**

இரா.சம்பந்தன் : தந்தை செல்வாவினால் ஆரம்பிக்கப்பட்ட உரிமைப் போராட்டம் தமிழ்பேசும் மக்களுக்கு - தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்காகவும் ஆரம்பிக்கப்பட்டது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் தனது அரசியல் வாழ்வை தந்தை செல்வாவின் வழிகாட்டலில் ஆரம்பித்தார் என்பது எல்லாரும் அறிந்த விடயமாகும். தமிழ்பேசும் மக்களாகிய தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் சரித்திர ரீதியாக வாழ்ந்துவந்த பிரதேசங்களில் அவர்களுக்கு ஏற்புடைய வகையில் சுயாட்சி ஏற்படுத்துகின்ற போது அது தமிழ்பேசும் மக்களாகிய தமிழ் மக்களினதும் முஸ்லிம் மக்களினதும் அரசியல்,சமூகம், பொருளாதாரம், கலாசாரம், நிலம்,பாதுகாப்பு போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதாக அமையும்.

தற்போது நாம் சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்துள்ள பிரதேசங்களில் தமிழ்பேசும் மக்களாகிய தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இழைக்கப்படுகின்ற பல அநீதிகள் நீக்கப்பட்டு அவை தொடராமல் வழி செய்யப்படும். இதன் மூலம் பயனடையப் போகின்றவர்கள் தமிழ்பேசும் மக்களாகிய தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களுமே ஆவர். இந்த அடிப்படையில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் தங்களுடைய அரசியல் அபிலாஷைகளை அடைவதற்கு ஒன்றிணைந்து செயற்படவேண்டியது அத்தியாவசியமாகும். தந்தை செல்வா போன்று தமிழ்த்தலைமைத்துவத்தைப் பொறுத்தவரையில் இக்காலத்தில் போதிய விட்டுக் கொடுப்புடன் தமிழ் மக்கள் மற்றும் முஸ்லிம் மக்கள் அனைவரும் நீதியின் அடிப்படையில் திருப்தி அடையும் வகையில் செயலாற்றுவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலிலும் அதன் பிறகும் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் தமிழ் பேசும் மக்கள் என்ற ஒற்றுமையின் அடிப்படையில் ஒரு புதிய யுகம் காணுவதற்கு, புதிய நிர்வாகம் உருவாகுவதற்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை நாம் ஏற்றுக்கொண்டு செயல்படவேண்டும். வேறு எவருக்கும் மாறாக இக்கருத்தை நாம் கூறவில்லை. எம் பிறப்புரிமையைப் பாதுகாத்து நாம் சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்த பிரதேசத்தில் கௌரவத்துடனும் சுயமரியாதையுடனும் வாழ்வதற்கு எமக்குள்ள உரிமையை உறுதி செய்ய வேண்டியது அனைவரினதும் தலையாய கடமையாகும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்த தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களுமாகிய தமிழ் பேசும் மக்கள் என்ற அடிப்படையில் உறுதியான ஒற்றுமை ஏற்பட வேண்டும். இது எம்மைப் பொறுத்தவரையில் அத்தியாவசிய தேவையாகக் கருதுகின்றோம். இதனை அடைவதற்கு தமிழ் மக்கள் மத்தியிலும் முஸ்லிம் மக்கள் மத்தியிலும் நம்பிக்கையைப் பெற்ற அரசியல் தலைமைகள் ஒன்றோடொன்று இணைந்து செயல்படவேண்டும். எம் மக்களுக்காக ஆற்ற வேண்டிய புனிதமான கடமை இதுவாகும். ■

தமிழ் அல்ல என்றும் அஷ்ரப்பின் அரசியல் வடக்கு, கிழக்குக்கு வெளியே உள்ள முஸ்லிம்களின் அரசியல் மற்றும் சமூகப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை உண்டு பண்ணும் என்று இந்தப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. இதில் தென்னிலங்கையில் உள்ள முஸ்லிம் தலைவர்கள் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டார்கள். ஆனால் இதன் விளைவு பேரினவாதிகள் எதிர்பார்த்ததற்கு நேரெதிராக அமைந்திருந்தது. தலைவர் அஷ்ரப்பின் அரசியலுக்கு தென்னிலங்கை முஸ்லிம்கள் மத்தியிலும் செல்வாக்கு அபரிதமாக உயர்ந்தது. பின்னர் இந்தப் பிரசாரம் காணாமற் போய்விட்டது.

## ஆள்புல ஆதரவுத் தளமா, அமைச்சர் பதவிகளா?

கூட்டமைப்புப் போலவே முஸ்லிம் காங்கிரஸும் ஆள்புலத் தளமொன்றை அடிப்படையாக வைத்து அரசியல் செய்ய வேண்டிய கட்சியாகும். ஆள்புலத்துக்கு அப்பாலுள்ள உறவுகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படும்என்றபூச்சாண்டிக்குப்பதிலளிக்க சிறுபான்மைக் கட்சியொன்றுக்குப் பலமான ஆதரவுத் தளமொன்று ஆள்புல ரீதியில் இருக்க வேண்டியது கட்டாயமானதாகும். அரசில் அங்கம் வகிப்பதாலோ அமைச்சர் பதவியினாலோ பாதுகாக்க முடியாத இனத்துவ நலன்களைப் பலமான ஆள்புலத் தளமொன்றின் ஆதரவினால் பேண முடியுமென்பதற்குப் பல முன்னுதாரணங்கள் உள்ளன. அடி வாங்கினாலும் அது பெரிதாக வலிக்கவில்லை என்றோ அல்லது இனி யாருமே அடிக்க மாட்டார்கள் என்று கதையளக்கவோ தான் அமைச்சுப் பதவிகள் சிறுபான்மையினருக்கு உதவி வந்துள்ளன.

ஆனால் ஆதரவுத் தளத்தை ஆள்புல ரீதியில் பேணும் சிறுபான்மைக் கட்சியொன்று (அடிப்பதைத் தடுத்து நிறுத்த முடியாவிட்டாலும்) அடித்தவனை அடையாளங் காட்டவோ அல்லது ஏன் அடிக்கின்றாய் என்று கேள்வி கேட்கவோ தேவையான முதுகெலும்பையாவது கொண்டிருக்கும். அத்தகைய ஆள்புலச் செல்வாக்குள்ள கட்சியொன்றை நோக்கியே பேரினவாதக் கட்சிகள் எப்போதும் கூட்டமைக்க வலைவிரிக்கும். இதனை நின்று, நிதானித்து கவனத்திற் கொண்டு காங்கிரஸ் முடிவெடுக்குமானால் கிழக்கில் கூட்டாட்சியொன்றை கூட்டமைப்புடன் சேர்ந்து அமைத்திட முடியும். காங்கிரஸின் ஆள்புல ஆதரவுத் தளம் முன்னைய நிலைக்குத் திரும்பவும் முடியும். ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கான சில விலையையும் அது கொடுத்தேயாக வேண்டும்.

கட்சிக்குள் சிலர் எந்த நேரமும் காலை வாரி விடலாம் என்ற பயம் காங்கிரஸ் தலைமையைப் பற்றிப் பீடித்துள்ளது. இது பதவிகளுக்காகவும் வேறு சில நலன்களுக்காகவும் தடுமாறும் சிலரைப் பற்றிய அச்சமாகும். பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடக்கம் கட்சி முக்கியஸ்தர்கள் வரை இந்தத் தடுமாற்றம் இருந்து வருகின்றது என்பது உண்மையே. ஆனால் இவர்களுக்காக காங்கிரஸ் தலைவர் கொடுக்கும் விலை வடக்கு, கிழக்கில் முஸ்லிம்களுக்கான தனியலகாகவும் நாடு பூராகவுமுள்ள முஸ்லிம்களின் தனித்துவ அடையாளமுமாக இருக்கப் போகின்றது.

இன்னொரு விதத்தில் பார்ப்பின், கிழக்கில் காங்கிரஸ் கூட்டணி ஆட்சியமைப்பின் அமைச்சர் ஹக்கீமின் நீதியமைச்சர் பதவியை விடக்கூடுதலான நன்மை கிழக்கு முஸ்லிம்களுக்கு வந்தே சேரும் என்பதற்கும் சில ஆதாரங்களைக் காட்ட முடியும்.

கட்சி தனது ஆள்புல ஆதரவுத் தளத்தை இறுகப் பற்றிக்கொள்ளின் கட்சி மாறுவோர் எதிர்காலத்தில் ஒன்றுக்குப் பல தடவைகள் யோசிக்க வேண்டிவரும். ஏற்கனவே தடம் புரண்டோர் திரும்பி வருவதற்கான காரணங்களைத் தேட இலகுவாகவும் இருக்கும். எந்த நோக்கத்துக்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டதோ, எதற்காகக் கட்சித் தொண்டர்கள் முஸ்லிம் போராளிகள் என்று தலைவர் அஷ்ரப் அவர்களினால் அழைக்கப்பட்டனரோ அதற்கொரு கௌரவத்தை, அங்கீகாரத்தை இலங்கைவாழ் முஸ்லிம்கள் வழங்க விரும்புவர். ஒரு புறத்தில் போராளிகள் என்று அழைத்துக் கொண்டும் மறுபுறத்தில் தனித்தனியாகக் கட்சி அமைத்து அமைச்சுப் பதவிகளுக்காகப் போராடிக் கொண்டிருப்பதும் மறைந்த தலைவருக்குச் செய்யும் அகௌரவமாகக் கருதப்படாதா என்பதை முதலில் யோசிக்க வேண்டியவர் அமைச்சர் ஹக்கீம் என்பதே கிழக்கு முஸ்லிம்களின் விருப்பமாக இருக்கும்.

## முதலமைச்சர் முடிச்சை அவிழ்ப்பது யார்?

முஸ்லிம் காங்கிரஸை விட அதிக ஆசனங்களைக் கைப்பற்றினாலும் சில விட்டுக் கொடுப்புகளுக்குத் தயார் என்று கூட்டமைப்புத் தலைமை அறிவித்திருப்பது ஒரு புதிய ஒற்றுமைக்கான அடிக் வைத்துக்கொண்டும் எமது நியாயமான கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கு மிகச்சிறந்தவாய்ப்பாக அமைந்திருக்கும் இத்தேர்தலில் எங்களிடமிருந்து வெற்றியைத் தட்டிப் பறிக்க எல்லாப் பிரயத்தனங்களையும் ஏராளமாகவும், தாராளமாகவும் மேற்கொள்ள முனைகின்றனர். ஆனால் அவர்களின் ஜம்பம் பலிக்காது என்பதை களநிலைவரங்கள் மிகத் தெளிவாக உணர்த்துகின்றன.

கிழக்கில் பேரினவாத மேலாதிக்கம் திணிக்கப்படுவது குறித்து மக்கள் ஆவேசத்தோடும், ஆத்திரத்தோடும் இருக்கின்றனர். தமது இருப்பை பாதுகாப்பதற்கு தனித்துவமான அரசியல் இயக்கங்கள் பலப்படுத்தப்பட வேண்டும். அவற்றின் பேரம்பேசும் சக்தி மாத்திரமே தங்களது பாதுகாப்புக் கவசம் என்பதில் மக்கள் தெளிவாக இருக்கின்றனர்.

சிங்கள மக்கள் மத்தியில் இரண்டு பிரதான தேசியக் கட்சிகள் குறித்த நம்பிக்கை பலவீனமடைந்திருக்கின்றது. பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டி, அபிவிருத்தியை அள்ளிக்கொட்டுகிறோம் என்ற அரசாங்கத்தின் பிரசாரம் புளித்துப் போன ஒன்றாக கடந்த இரண்டு, மூன்று தேர்தல்களின் பிறகு அதன் போலித்தன்மை வெளிப்பட ஆரம்பித்திருக்கின்றது.

ஆங்காங்கே தேர்தல் வன்முறைகள் தலைதூக்குவதும், ஆளும் தரப்பினர் அதில் அடைக்கலம் தேடுவதைத் தவிர வேறு வழியேதும் இல்லையென்பதை உணர்த்துகின்றது. இத்தகைய சூழ்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், முஸ்லிம் காங்கிரஸும் பிரதான தேசியக் கட்சிகளை விஞ்சி நிற்கும் என்பதில் ஐயமில்லை.

கேள்வி : நீங்கள் அமைச்சராக பதவி வகிக்கின்ற போதிலும் கிழக்கில் தனித்துப் போட்டியிடுவதற்கே தீர்மானித்தீர்கள். ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரசாரங்களுடன் முரண்படாத வகையில் உங்களால் செயற்படக்கூடியதாக இருக்கின்றதா?

பதில்: இந்த அரசில் சேர்ந்த பிற்பாடு தான் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் கட்டம் கட்டமாக நடைபெற்ற போது பல இடங்களில் எனது தனித்துப் போட்டியிடும் முடிவை அரசாங்கம் ஜீரணிக்க வேண்டியிருந்தது.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலைப் பொறுத்தவரை முஸ்லிம் காங்கிரஸ் இல்லாமல் ஆட்சியைக் கைப்பற்றுவது அரசாங்கத்தினால் முடியாத காரியம் என்று அறிந்திருந்த போதிலும், வேறு வழியின்றி எங்களை முடக்கி விடலாம் என்ற தைரியத்தில் நாங்கள் தனித்துப் போகின்ற தீர்மானத்தை அரசு அங்கீகரித்திருக்கலாம். ஆனால், களநிலைவரங்களின் யதார்த்தம் முஸ்லிம் காங்கிரஸின் முடிவையும் எமது கட்சியின் பிரசார யுக்திகளையும் விமர்சிக்கும் அளவிற்கு இன்று அரச தலைமைகளை வங்குரோத்து நிலைக்குத் தள்ளியிருக்கின்றது.

அரசாங்கத்தோடு நாம் இணைந்த காலந்தொட்டு எமது கட்சியின் அடிமட்டப் போராளிகள் மத்தியில் எமது இயக்கம் உரிய மரியாதையுடன் நடாத்தப்படவில்லை என்ற விசனமும் விரக்தியும் இருந்திருக்கத்தக்கதாக இந்தக் கட்சியின் செல்வாக்கை மாத்திரமல்லாது இதன் அரசியல் ராஜதந்திரத்தையும் மிகச் சிறப்பாக வெளிக்கொணர்வதற்கு இந்தத் தீர்மானம் வழிவகுத்திருப்பதாக கட்சி அபிமானிகளும், ஆதரவாளர்களும் கருதுகிறார்கள்.

இந்தத் தேர்தலிலும், இதற்கு அப்பாலும் சமூகத்தின் மனச்சாட்சியாக இருந்து மனவுறுதியுடன் போராடுவதற்கு இந்தத் தேர்தலில் அமையப்போகும் ஆட்சியமைக்கும் சமன்பாடு வழிசமைக்கும் என்ற உற்சாகத்தில் எமது ஆதரவாளர்கள் காணப்படுகின்றார்கள்.

அரசாங்கத் தரப்பின் பிரசாரங்களுடன் முரண்படாத வகையில் எமது பிரசாரங்கள் அமைய வேண்டும் என்பது, மும்முனைப் போட்டியாக மாறியுள்ள இத்தேர்தலில் எந்தத் தரப்பும் தமது வெற்றிக்கு மற்றொரு தரப்பை முழுவதுமாக எதிர்பார்க்க முடியாத ஒரு நிலைமைக்கு மாறியிருப்பது நன்கு புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

கேள்வி: போரின் முடிவுக்குப் பின்னரான காலகட்டத்தில் தமிழ் பேசும் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாஷைகளை அறவே மதிக்காத ஒரு மனப்போக்கு சிங்கள அரசியல் சமுதாயத்தில் தீவிரமடைந்திருப்பதற்கு அடிப்படையான காரணம் எதுவென்று நீங்கள் கருதுகிறீர்கள்.?

பதில்: புலிகளைத் தோற்கடிப்பதற்காகத் தெற்கிலுள்ள சிங்கள அரசியல் சமூகத்தில் முன்னெடுக்கப்பட்ட தீவிர பிரசார வெற்றியின் பின்புலத்தில் சிறுபான்மையினருக்கு தீர்வு கொடுப்பதே காட்டிக்கொடுப்பாகிவிடும் என்ற அளவிற்கு அரசியல் மயப்படுத்தப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லாகவும் நல்லிணக்கத்துக்கான அரியதோர் வாய்ப்பாகவும் தோன்றுகின்றது. இந்த ஒற்றுமையைக் குலைப்பதற்கான பல நாசவேலைகள் முன்னெடுக்கப்படும் என்றாலும் பக்குவப்பட்ட தலைமைகள் அவற்றை எதிர்கொள்ளத் தயாராகவே இருக்க வேண்டும்.

எப்படியும் தானில்லாமல் ஆட்சியமைக்கக் கூடிய நிலை ஆளுங்கட்சிக்கு ஏற்படக்கூடாது என்பதே காங்கிரஸின் தற்போதைய ஏக விருப்பாக உள்ளது. அதற்காகவே அது முழுவீச்சுடன் தேர்தல் பிரசாரஞ் செய்கின்றது. தேர்தலின் பின்னர் தனது பேரப்பேச்சினை அரசுடன் அதிகரிக்கலாம் என அது நம்புகின்றது. ஆனால் இந்த நம்பிக்கைக்குள் முதலமைச்சர் பதவியில்லை என்பதும் அதற்கு நன்கு தெரியும். எத்தகைய ஆதரவை வழங்கினாலும் அரசாங்க சார்புக் கூட்டுக்குள் காங்கிரஸ் முதலமைச்சர் என்ற பேச்சுக்கே இடமில்லை.

சென்ற தடவை பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜிநாமாச் செய்துவிட்டு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டவர் ரவூப் ஹக்கீம். இம்முறை அங்ஙனம் போட்டியிட அவர் முன்வரவில்லை. அரசும் அவருக்கு முதலமைச்சர் பதவியை வழங்க இணங்கியிருக்கவில்லை. அப்படி இணங்கியிருந்தால் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடும் அவசியமே ஏற்பட்டிருக்காது. இதனை எல்லாம் தேர்தல் மேடைகளில் அமைச்சர் ஹக்கீம் வெளிப்படையாகக் கூறுகின்றாரோ இல்லையோ யதார்த்தம் அவருக்குத் தெரியாமலில்லை. ஆனால் இது முஸ்லிம் வாக்காளர்கள் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டிய உண்மையாகும். அரசைப் பொறுத்த வரை, ஆகக்குறைந்தது வடக்கின் தேர்தல் வரும் வரையாவது தமிழர் ஒருவரை முதலமைச்சராக வைத்துப் பம்மாத்துக் காட்ட வேண்டியது அவசியமாகும். உள்ளும் புறமும் இதனால் தன்னுடைய அணுகுமுறைக்குப் புதிய வியாக்கியானத்தை அரசு கொடுப்பதற்கு இது உதவியாக இருக்கும்.

முஸ்லிம் காங்கிரஸுக்கு வாக்களிப்பதா, இல்லையா என்பதைவிட முஸ்லிம் முதலமைச்சர் ஒருவரைப் பெறுவதற்கான சாத்தியம் எங்கே உள்ளது என்பதையே முஸ்லிம் வாக்காளர்கள் யோசிக்க வேண்டும். எப்படியும் இறுதியில் ஆளுங்கட்சி வலையில் காங்கிரஸ் சிக்குவதை விட வேறு வழியெதுவும் இல்லை என்று சிலர் அடித்துக் கூறுகின்றனர். மாகாண அமைச்சில் காங்கிரஸ் இரு இடங்களைக் கேட்டு ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் என்பது இவர்களுடைய கணிப்பு. இதுவே யதார்த்தம் என ஏற்றுக் கொண்டாலும் இதன் விளைவாகக் காங்கிரஸ் கிழக்கில் தேய்பிறையாகுமா அன்றேல் வளருமா என்று ஆதங்கப்படுவோர் பலர் உள்ளனர். அவர்களின் விருப்பு காங்கிரஸ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேரம்பேசி முதலமைச்சர் பதவியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதாக உள்ளது. இங்கே முன்னிலைப்படுத்தப்படுவது முதலமைச்சர் பதவியல்ல. காங்கிரஸின் எதிர்காலத்துக்கான உத்தரவாதம் என்பதே. முதலமைச்சர் பதவியை வைத்து எதனையும் வெட்டி விழுத்திவிட முடியாது என்பது அரசியல் தலைமைகள் அறியாததல்ல. ஆனாலும் முஸ்லிம் தேசம் என்பது முற்றிலும் கனவாகிப் போகாமல் பார்த்துக் கொள்ளும் தெம்பினைக் காங்கிரஸ் தன் கைவசம் கொண்டிருக்கும்.

ஆனால் எதிர்காலத்தில் கட்டியெழுப்பப்பட வேண்டியதான இன ஒற்றுமையும் நல்லிணக்கமும் ஆரம்பிப்பதற்கான முதற் புள்ளியாக முதலமைச்சர் பதவி பாவிக்கப்படலாம். இரண்டு இனங்களுக்கும் பொதுவான எத்தனையோ அக்கறைகள் கிழக்கு மாகாணத்தில் உள்ளன. அவை தொடர்பில் பொதுவான வேலைத் திட்டமொன்றை முன்னெடுப்பதன் மூலம் பாரிய அளவில் புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கு அரியதோர் வாய்ப்பு ஏற்படும். இதன் பலாபலன்கள் வடக்கு மாகாணசபைத் தேர்தலிலும் எதிரொலிக்கலாம். எனவே காங்கிரஸ் தற்போது தன் கைவசமுள்ள மத்தியிலான ஒன்றரை அமைச்சர் பதவியைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாமல் தூரநோக்கொடு செயற்படுமானால் அது முஸ்லிம் மக்களின் அமோக ஆதரவை நாடளாவிய ரீதியில் வளர்த்துக் கொள்ளவும் அதன் மூலம் மத்தியில் பேரம் பேசுவதற்கு கௌரவத்தோடு நிமிர்ந்து நிற்கவும் தன்னைத் தயார்படுத்திட முடியும். பதவிகள், சலுகைகள் என்பவற்றுக்காக அல்லாடும் சிலரையும் தற்காலிகமாக மாகாண மட்டத்துக்குள் அடைத்து வைத்துச் சமாளிப்பதும் சாத்தியமாகலாம். கூட்டமைப்போடு காங்கிரஸ் சேர்ந்து ஆட்சி அமைக்குமானால் எக்காரணங் கொண்டும் அதன் செல்வாக்கு ஒரு போதும் குறையப் போவதில்லை. மாறாக அதிகரிக்கவே செய்யும். கட்சி நலன் விரும்பிகள் இதனைக் கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலிலும், அதைத் தொடர்ந்து நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலிலும் பெற்ற அமோக வெற்றியை அடிப்படையாக வைத்து தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு ஒரு நியாயமான தீர்வை காலம் தாழ்த்தாது உடனடியாக முன் வைத்திருந்தால் அதைச்சாத்தியமாக்கியிருக்கலாம்.

எந்தத் தரப்பின் தலைமையாக இருந்தாலும் தீவிரவாதிகளின் பணயக் கைதிகளாக மாறுவதற்கு நாமே இடங்கொடுத்து விட்டால், அதிலிருந்து மீண்டு வருவதென்பது மிகக்கடினமாகப் போய் விடும்.

சிங்கள பௌத்த சமூகத்திற்கு மத்தியில் தற்போதைய ஜனாதிபதிக்குள்ள அசைக்க முடியாத அபிமானத்தை ஓர் இணக்கத் தீர்வை நோக்கி காலம் கடத்தாமல் நகர்த்துவதற்கு அவர் பயன்படுத்த வேண்டும். அவ்வாறான தீர்வொன்றை சிங்கள பௌத்த மக்கள் மத்தியில் சந்தைப்படுத்துவதற்கு இன்றைய ஜனாதிபதியைப் போல செல்வாக்குமிக்க வேறொருவர் குறுகிய காலத்தில் தெற்கில் தோற்ற மெடுப்பார் எனக் கருதமுடியாதுள்ளது.

ஜனாதிபதியைப் பொறுத்தவரை அதனைச்சாதிப்பதற்கு அசாமான்யமான அரசியல் தைரியம் அவருக்குத் தேவை. ஆனால், நாள் போகப்போக தரப்புகள் இன்னும் இன்னும் துருவப்பட்டு, தீர்வு தூரப்பட்டுப் போய்விடும் ஆபத்தை நாம் எதிர்நோக்கியுள்ளோம்.

கேள்வி : தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் எதிர்காலத்தில் ஒன்றுபட்டு அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கான வாய்ப்புகளில் உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா?

பதில் : தமிழர் தரப்பில் ஆயுதப் போராட்டம் குறித்து அதிக நம்பிக்கை மிதவாதச் சக்திகளை ஓரங்கட்டியது மட்டுமல்லாமல், சகோதர முஸ்லிம்களுக்கான நியாயமான தீர்வைக் கிடப்பில் போடவும், ஈற்றில் வெறும் உதட்டளவில் மாத்திரம் அகச்சுயாதிக்க அலகு போன்ற முஸ்லிம்களுக்கான மிக மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான தீர்வுகளைப் பற்றி மட்டும் பேசும் நிலைக்கும் ஆக்கியது.

இன்றுள்ள அந்த நிலைப்பாட்டிலிருந்து தந்தை செல்வா காலத்து முழுமையான சுயநிர்ணய உரிமை பற்றி பேசுகின்ற அடிப்படையிலான விட்டுக்கொடுப்புகள் வருமா என்பது குறித்த தெளிவுகள் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கறியப்பட்ட ஹதீதில் கூறப்பட்டவாறு ''என்னுடைய மக்கள் ஒருபோதுமே தவறில் உடன்பட மாட்டார்கள்'' என்பது கிழக்கில் இம்முறை நிரூபணமாக வேண்டும்.

கூட்டமைப்பு பெறப்போகும் ஆசனங்கள் காங்கிரஸ் பெறுவதைவிட அதிகமாக இருக்கும் என்பதிலும் சந்தேகமில்லை. இந்த இரு கட்சிகளும் ஒன்றின் வாக்கு வங்கிக்குள் மற்றையது ஊடுருவும் நிலையில் இல்லை. இயன்றவரை தத்தமது வாக்கு வங்கிகளை அதிகரிப்பதற்கே இவை போராடி வருகின்றன. ஊடுருவல் என்பது ஆளுங்கட்சியின் வாக்கு வங்கிக்குள் தான் இடம்பெறப்போகின்றது. அதற்கான வாய்ப்புகளை அந்தக் கூட்டுக்குள் உள்ளவர்களே தமது அடாவடித்தனங்களால் ஏற்படுத்திக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

## தமிழ்வாக்காளர்களின்கடமை

ஒத்துழைப்பு அரசியல் என்பது தமிழர்க்குப் புதிதல்ல. அது காலாதிகாலமாக தமிழர் அரசியலில் இருந்தே வருகின்றது. எதிர்ப்பு அரசியல் நடாத்திக் கண்ட பயன் என்ன? பாலங்கள், வீதிகள், பள்ளிக் கூடங்கள், பட்டதாரி நியமனங்கள், தேவையான இடமாற்றங்கள் என்பவற்றைப் பெற்றுக் கொண்டாவது முன்னேறப் பார்த்தாலென்ன என்ற வினா கிழக்குத்தமிழர் மத்தியில் தொடுக்கப்பட்டு வருகின்றது. இதெல்லாம் அவசியமற்றவை என்று யாரும் கூறிவிட முடியாது. ஆனால் இவற்றைப் பெறுவதற்குத் தமிழராக இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. தமிழ் வேட்பாளராக இருக்க வேண்டும் என்பதும் அவசியமில்லை. அரசாங்கக் கட்சியில் சிங்கள வேட்பாளர்களை நிறுத்தி அவர்களை வெற்றிபெற வைத்தால் தேச ஒருமைப்பாடு இன்னும் சிறப்பாக வளர்ந்துவிடும். அதை விடுத்து, ஏன் ஆளுங்கட்சி தமிழ் வேட்பாளர்களை நிறுத்துகின்றது? முன்னாள் முதலமைச்சரும் இந்நாள் பிரதியமைச்சரும் ஏன் தமிழ் வாக்குகளைக் கேட்கின்றார்கள்? தமிழர் வாக்குகள் ஏதோவொரு நோக்கத்துக்காக அவசியமாகத் தேவைப் படுகின்றது இல்லையா? ஆயின், இக்கட்டத்தில் அபிவிருத்தியா, அடையாளமா முக்கியத்துவம் பெறுகின்றது?

கொலைச் சம்பவம் ஒன்றையடுத்து சென்ற வருடம் மே மாதம் 24 ஆம் திகதி முதலமைச்சரது வீடும் அலுவலகமும் இரகசியப் பொலிஸாரால் சோதனையிடப்பட்டது. திருகோணமலையில் கடத்திக் கொலை செய்யப்பட்ட சிறுமியுட்பட இன்னும் பலரது கொலைகள், வங்கிக் கொள்ளைகள் தொடர்பில் அவரது கட்சி உறுப்பினர்கள்சிலர்சந்தேகத்தின்பேரில் கைதானார்கள். சிலர் இன்னும் கம்பி எண்ணுகின்றார்கள். வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்ல முடியாத நிலையிலும் சிலர் இன்னும் உள்ளனர்.

கல்முனை தமிழ்ப்பிரிவு பிரதேச செயலர் அலுவலக விடயத்தில் பிரதியமைச்சர்தமிழ்வாக்குகளைக்குறிவைத்து காரியம் ஆற்றுகின்றமை பரம ரகசியம். இங்கே அபிவிருத்தி முன்னிற்கின்றதா அன்றேல் அடையாளந் தேவைப்படுகின்றதா? அபிவிருத்தி தேவைதான். ஆனால் அதற்காக அடையாளத்தை விலைபேசி அபிவிருத்தி பெறுவதானால் நாளைக்கு அந்த அபிவிருத்தியை அனுபவிக்க ''வாக்களித்தவர்கள்'' இருக்க மாட்டார்கள். கண்களை விற்றுச் சித்திரம் வாங்கிய கதையாக கிழக்குத் தமிழர் வரலாறு பதியப்பட்டுவிடக் கூடாது.

இன்னொரு விதத்தில் பார்ப்பின் அரசாங்கம் நேர்மையானதும் தாராள சிந்தை கொண்டதுமாக இருந்தால் அபிவிருத்தி பற்றி அச்சப்படத் தேவையேயில்லை. மாகாண சபையை யார் கைப்பற்றினாலும் கபடமற்ற மத்திய அரசாங்கம் முட்டுக்கட்டை போட முன்வராதல்லவா? அப்படியானால் ஏன் அபிவிருத்தி கருதி ஆளுங் கட்சிக்கே சிறுபான்மையினர் வாக்களிக்க வேண்டும்?

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஒரு சிங்களவரை முதலமைச்சர் ஆக்குவதற்கு முன்னாள் முதலமைச்சர் சந்திரகாந்தனும் பிரதியமைச்சர் முரளிதரனும் வாக்குக் கேட்டால் அதிலோர் அரசியல் நேர்மையாவது இருக்கும். அப்படியில்லாமல், தமிழ் வாக்குகளைப் பெற்று பொம்மலாட்டம் நடாத்துவதற்கு அபிவிருத்தி என்ற பெயர் அவ்வளவாகப் பொருந்துவதில்லை என்பதை 2008க்குப் பிந்திய எல்லாத் தேர்தல்களிலும் கிழக்குத் தமிழ் வாக்காளர்கள் நன்றாகவே தெளிவுபடுத்தியிருந்தனர். அதில் தற்போது புதிதான மாற்றமேதும் ஏற்படப் போவதில்லை. ஒருமித்த தமிழ் வாக்குகளின் முக்கியத்துவம் முன்னரெப்போதையையும்விடத்தற்போது இன்னும் நன்றாகவே உணரப்பட்டிருக்கின்றது எனலாம்.

மேலும், அந்த இருவரையும் பொறுத்தவரை மத்தியில் ஆட்சியிலுள்ள கட்சியை தமதுவாழ்நாள்பூராவும்ஆதரிப்பதைவிட

இத்தேர்தல்கால தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமைகளுடைய பேச்சுக்கள் வெறும் சந்தர்ப்பவாதம் சம்பந்தப்பட்டதா என்ற சந்தேகம் நிலவுகிறது.

தேர்தலின் பின்னரான கிழக்கு மாகாண ஆட்சி குறித்த சமன்பாடு இது விடயத்தில் சாதகமான தாக்கங்களை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையில் அடுத்த கட்ட அரசியலைப்பற்றி நாம் சிந்திக்கலாம்.

கேள்வி : கிழக்கு மாகாணத் தேர்தலின் முடிவில் முஸ்லிம் காங்கிரஸ் எடுக்கக்கூடிய நிலைப்பாடு அந்த மாகாண சபையின் எதிர்கால நிருவாகம் யார் கையில் போகும் என்பதைத் தீர்மானிக்கும் வல்லமை பொருந்தியதாக பரவலாகக் கருதப்படுகிறது. தமிழ் மக்களும் தங்களால் தெரிவு செய்யப்படக்கூடிய பிரதிநிதிகளுடன் சேர்ந்து முஸ்லிம் காங்கிரஸ் நிருவாகத்தை அமைக்க வேண்டுமென்றே விரும்புகிறார்கள். இது குறித்து?

பதில் : முஸ்லிம் காங்கிரஸ் என்ற பேரியக்கத்தைப் பலவீனப்படுத்தும் நோக்கில் எம்மிடமிருந்து பிரிந்து சென்றவர்கள் வெகுளித்தனமாக வங்குரோத்துப் பிரசாரங்களைச் செய்ய ஆரம்பித்துள்ளனர். அதில் ஒன்றுதான் வடக்கு - கிழக்கு இணைப்பு சம்பந்தமான முஸ்லிம்களின் கலந்தாலோசனை இல்லாமல் தற்காலிக வடகிழக்கு இணைப்பு உருவாகிய போது எமது கட்சி ஆரம்பத்திலிருந்தே தமிழர்களின் அடிப்படை அரசியல் அபிலாஷைகளுக்கு குறுக்கே நிற்காத ஒரு நேர்மையான நிலைப்பாட்டை எடுத்து, கிழக்கில் ஒரு சர்வஜன வாக்கெடுப்பு என்ற விஷமத்தனமான பலப்பரீட்சை சாத்திய மானதல்லவென்றும் அதற்கு மாற்றீடாக முஸ்லிம்களுக்கு நிலத் தொடர்பற்ற அலகு என்ற நிபந்தனை குறித்துப் பேசி வந்தோம்.

இன்றைய சூழலில் வங்குரோத்து அரசியல் செய்கின்ற, அரசியல் தரப்பு முதுகுகளில் சவாரி செய்து தமது பலவீனத்தை மறைத்துக்கொண்டு எடுத்ததெற்கெல்லாம் முஸ்லிம் காங்கிரஸின் மீது பழி சுமத்துகின்ற தரப்புகளின் பிரசாரங்களில் எந்த உண்மையும் இல்லை என்பதை நாம் நிரூபித்தாக வேண்டியுள்ளது.

ஆரம்பகால வடகிழக்கு மாகாண சபையில் மாத்திரமல்ல, கடந்த கிழக்கு மாகாண சபையிலும், நிருவாக ரீதியான மேலாதிக்க வாதம் தொடர்ந்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு தெரிவெதுவும் அவர்களுக்கில்லை என்பது சாதாரண பாமரனும் நன்கறிந்த விடயமேயாகும். எனவே அவர்களது பேச்சைக் கேட்டு தமிழ் வாக்குகள் சிதறிப் போகும் என்று நம்புவதற்கில்லை. அது அவர்களுக்கே நன்கு தெரிந்திருப்பதால் தான் பல்வேறு சுயேச்சைக் குழுக்களை யும் களத்தில் இறக்கியுள்ளார்கள். அங்ஙனம் ஐந்தும் பத்துமாகப் பொறுக்கியெடுக்கும் வகையில் தமிழ் வாக்குகள் சிதறிப்போகாமல் பார்த்துக்கொள்வதே தமிழ் வாக்காளர்களது கடமையாகின்றது. ஒரு கட்டுக்கோப்பான வாக்களிப்பு முறை இங்கே அவசியமாகின்றது. தமிழ்வாக்காளர்கள் முதலமைச்சர் பதவிக்கு வாக்களிக்கவில்லை. தமது இருப்புக்கும் அதற்கு அவசியமான அடையாளத்துக்கும் வாக்களிக்கின்றார்கள் என்பதை மனதிலிருத்தல் வேண்டும்.

மொழி, இன, பிரதேச, கலாசாரத்தால் ஒன்றுபட்ட எம்மைக் கூறுபோடும் சக்திகள் எந்த வடிவில் வந்தாலும் இடமளியோம் என்பதற்கான திடசங்கற்பத்தை செப்ரெம்பர் 08 இல் தமிழ் வாக்காளர்கள் மீண்டும் ஒருமுறை உரத்துச் சொல்ல வேண்டியது அவசியமாகின்றது. அது புதுடெல்லி, ஜெனீவா ஊடாக வாஷிங்டன் வரை தெளிவாகக் கேட்கப்பட வேண்டிய செய்தியாகின்றது.

### முடிவாக..!

இனத்துவ அரசியல் என்பது இலங்கையின் அரசியற் சமூகத்தைப் பொறுத்தவரை அதில் இரண்டறக் கலந்தவொரு விடயமாகும். அத்தகைய போக்கு இல்லையென வாதிடல் கண்களை மூடிப் பால்குடிக்கும் பூனையின் கதைதான்.

கிழக்கைப் பொறுத்தவரையில் பேரின வாதிகள் முஸ்லிம் வாக்குகளைப் பிரித்துள்ள அளவுக்குத் தமிழ் வாக்குகளைப் பிரிக்க முடியாதவர்களாக இருக்கின்றார்கள். கிழக்கில் அரசை ஆதரிக்கும் எந்தவொரு தமிழ் பாராளுமன்ற உறுப்பினரும் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டவராக இல்லை. ஆனால், முஸ்லிம்களின் நிலைமையோ வேறு. இதனாலேயே காங்கிரஸ் சற்று அச்சத்தில் உள்ளதுடன், முடிவுகளை எடுக்கத் தடுமாறுகின்றது. அத்தகைய தடுமாற்றங்கள் இனி ஏற்படாமலிருப்பதற்கு அது தனக்கென ஆதரவுத் தளமொன்றினைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ளவேண்டும். அதற்கு இந்தத் தேர்தல் தேவையான சந்தர்ப்பத்தினை வழங்கியுள்ளது. காங்கிரஸின் அரசியல் சாணக்கியத்துக்கும் இதுவொரு அக்கினிப் பரீட்சையே.

தமிழ் மக்களைப் பொறுத்தளவில் அவர்களது உள்ளுணர்வு வாக்குச் சீட்டில் பதியப்பட வேண்டியது மட்டுமே தேவையாகின்றது. அதன் மூலம் அவர்கள் எதனைப் பெறுகின்றார்கள் என்பதல்ல முக்கியம். எதனை வெளிப்படுத்துகின்றார்கள் என்பதை மற்றவர்கள் அறிய வைப்பதே அவசியமாகின்றது. ■

நிலவி வந்தது. மாகாண சபையில் நிதி மற்றும் நிருவாகச் செயற்பாடுகளில் ஆளுநரின் தற்றுணிவு அடிப்படையிலான தலையீடு அதிகாரப் பகிர்வையே கேலிக் கூத் தாக் கியுள்ளது.

தெற்கிலுள்ள மாகாண சபைகளில் ஆளுநர்கள் வெறும் பொம்மைகள் போன்றிருக்கும் போது, கிழக்கில் வேறுவிதமாக இருப்பது இங்கு ஆரோக்கிய மான அதிகாரப்பகிர்வு அமைவதை மத்திய அரசு அங்கீகரிக்க மாட்டாது என்பதையே காட்டுகின்றது.

தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு இந்த நிருவாக மேலாதிக்க வாதத்தை முறியடிக்க வேண்டிய வியூகம் ஒன்றைப்பற்றி முஸ்லிம் காங்கிரஸ் சிந்திக்க வேண்டிய அவசியம் ஒன்றுள்ளது.

தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் கட்சிக்கட்டுப்பாட்டில் இருப்பார்களாயின், அதிக ஆசனங்களைப் பெறும் இரண்டு தரப்பினர் மிகவும் சாணக்கியமாகவும், இராஜ தந்திரத்துடனும் செயற்பட்டு ஓர் உண்மையான அதிகாரப் பகிர்வை சாத்தியப்படுத்தக்கூடிய வித்தியாசமான வியூகமொன்றைப் பற்றிச் சிந்திக்க முடியும்.

முதலில் தமிழ், முஸ்லிம் மக்கள் தமது பேராதரவை எங்கள் கைகளில் தருவார்களாயின் இந்த மாற்று வழிகள் பற்றி நாம் தீவிரமாகச் சிந்திக்கலாம்.

கேள்வி : சுதந்திரத்துக்குப் பின்னர் கொழும்பில் அதிகாரத்தில் இருந்த சகல அரசாங்கங்களுடனும் ஒப்பிடுகையில் தற்போதைய அரசாங்கமே பேரினவாத நிகழ்ச்சித் திட்டத்தை தீவிரமாகவும் வெளிப்படையாகவும் முன்னெடுக்கிறது என்ற பரவலான அபிப்பிராயம் இருக்கிறது. முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாஷைகளையோ அல்லது மத உணர்வு களையோ மதிக்காத சக்திகளுக்கு எதிராக எதையுமே செய்யாத இன்றைய அரசாங்கத்துடன் உங்களால் எப்படி அனுசரித்துப் போக முடிகிறது?

பதில் : யுத்தத்தின் பின்னரான அரசியல் சூழல் சில நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தியது மாத்திரமல்ல, கட்சிக் கட்டுப்பாட்டை மீறி உறுப்பினர்கள் செயற்படுவதைத் தடுப்பதற்கும் சில மாற்று நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிலைமையை ஏற்படுத்தியது என்பது எமது ஆதரவாளர் கள் ஜீரணித்த விடயமாகும்.

நாம் எடுத்த முடிவை கட்சியில் அதிக பெரும்பான்மையானோர் மிகவும் சாணக்கியமானது எனக் கருதுகின்றனர்.

தமிழ்த் தேசியப் பரப்பில் சில தீவிர சக்திகள் இதை அடிக்கடி மலினப்படுத்தி பேசி வந்தாலும், கள நிலைவரத்தின் யதார்த்தம் புரிந்தவர்கள் முஸ்லிம் காங்கிரஸின் முடிவை முரட்டுத்தனமாக விமர்சிப்பதில் நியாயமில்லை என்பதை உணர்வார்கள்.

கேள்வி : காவியுடைப் பயங்கரவாதம் பற்றிய உங்கள் கருத்து அண்மையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. நீங்கள் மகா சங்கத்திடமும் சிங்கள பௌத்தர் களிடமும் மன்னிப்புக் கேட்டிருக்கிறீர்கள். இது முஸ்லிம் மக்கள் மத்தியில் எந்த வகையாக உணரப்பட்டிருக்குமென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

பதில் : மன்னிப்புக் கோருவது என்பது, அதிலும் குறிப்பாக விபரீத விளைவுகளைத் தடுப்பதற்காக பெருந்தன்மையுடன் அதைச் செய்ய முன்வருவது எமது அரசியல் நேர்மையைக் காட்டுகின்றது. முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைத்து அரசியல் செய்யும் கையாலாகாத பேர்வழிகள் சிலர் இருக்கின்ற சமூகத்தில், அதுவும் அம்போ என்று சரணாகதி அரசியல் செய்யும் ஆட்கள் மலிந்துள்ள சமூகத்தில் துணிகரமாகப் பேசுவது என்பது அபூர்வமாகப்போய்விட்ட நிலையில் தப்பாக ஏதேனும் ஒன்றைச் செய்வதற்கும் ஓர் அசாமான்ய தைரியம் வேண்டும். ■


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காலக் கண்ணாடி

கே.எஸ்.சிவகுமாரன்

# எளிமையான ஆங்கிலத்தில் வாசகர்களைக் கவர்தல்




இலகுவான மொழி நடையில் எழுதுவதனால் அங்கு ஆழமில்லை என்று நமது நாட்டுத் தமிழ் 'விமர்சகர்'களுள் சிலர் அபிப்பிராயங் கொண்டிருப்பதை நாம் அறிவோம். அவர்களுடைய அறியாமை ஒரு புறமிருக்க எளிமையான நடையில் ஆங்கில மொழியைக் கையா ளும் ஓர் அமெரிக்க எழுத்தாளர் எவ்வாறு பல்லாயிரக்கணக்கான வாசகர்களைக் கொள்ளை கொண்டார் என்பதனை அவர் தம் வாக்கியங்களில் தமிழில் தருவதன் மூலம் நாம் அறிந்து கொள்வோம்.

அந்த எழுத்தாளர் ஒரு கறுப்பர். பெயர் ரிச்சர்ட் றைட் (RICHARD WRIGHT) அவர் சுயசரிதை சார்ந்த ஒரு படைப்பை THE BLACK BOY (கறுப்புப் பையன்) என்ற பெயரிலே எழுதினார். அதில் வரும் ஒரு பகுதியை இலண்டன் சாதாரணதரப் பத்திரப் பரீட்சை மாணவர்களுக்கு எடுத்துக் காட்டும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது.

இந்தப் பகுதியிலே, அவருடைய பந்தியொன்று இவ்வாறு அமைகிறது.

"எனது புதிய பாடசாலையின் முதல் நாளன்று எனது வகுப்பறை என்னைச் சிரிப்புக்கு இடமானவனாக ஆக்கியது. குழுமத்தின் மத்தியில் நான் இன்னமும் வெட்கறையானவனாகவும் பாதி செயலிழந்தவனாக இன்னமும் இருக்கிறேன்."

எனது பெயரையும்,முகவரியையும் கரும்பலகையில் எழுதுமாறு நான் கேட்கப்பட்டேன். எனக்கு என் பெயரும் முகவரியும் தெரியும். அவற்றை எவ்வாறு எழுத்துக் கூட்டுவது என்பதையும் அறிவேன். ஆயினும் எனக்குப் பின்னால் என் முதுகைப் பார்க்கும் சிறுமிகளும், சிறுவர்களும் இருப்பதைக் கண்டு என்னுள் அனைத்தும் விறைத்துப் போனது. எந்தவொரு எழுத்தைத் தன்னும்என்னால்எழுதமுடியவில்லை. "உமது பெயரைத் தெரியாதா?" என்று ஆசிரியை கேட்டார். நான் அவரைப் பார்த்தேன். பதில் கூற முடியவில்லை. ஆசிரியை தனது இருப்பிடத்திலிருந்து எழுந்து புன்னகையுடன் எனது பக்கம் வந்தார். எனது தோளின்மேல் மெல்லென தனது கையை அவர் வைத்தார்.

உமது பெயரென்ன? என்று ஆசிரியை கேட்டார்.

ரிச்சர்ட், நான் ரகசியம் பேசினேன்

என்ன ரிச்சர்ட்

ரிச்சர்ட் றைட்

எழுத்துக் கூட்டும்

எனது பெயரை விரைவாக எழுத்துகளைச் சேர்த்து, எனது உறைந்த வெட்கத்தை தவிர்க்க முயன்றேன்.

எனக்கு கேட்கும் வகையில் மெல்லமாக எழுத்துக்கூட்டும் என்று ஆசிரியை பணித்தார்.

நான் அவ்வாறு செய்தேன்

இப்போ,எழுத முடியுமா?

ஓம் மடம்

அப்போ எழுதும்

மீண்டும் கரும்பலகை முன் திரும்பி எழுத என் கையை உயர்த்தினேன், மீண்டும் என்னில் வெருமைதான் இருந்தது. என் புலன்களை மீண்டும் உயிர்ப்பிக்க நான் கடும் பிரயத்தனம் எடுத்தேன். ஆனால் ஒன்றுமே என் நினைவுக்கு வரவில்லை. எல்லாவற்றையும் மீறி என்னுள் நிரம்பிய உணர்வு எதுவெனில் என் முதுகுக்குப் பின்னால் அமர்ந்திருக்கும் சிறுமிகளும், சிறுவர்களுமே தான். நான் படுதோல்வியைத் தழுவுவதையும், எவ்வாறு பலவீனமடைவதையும் நான் உணரத் தொடங்கினேன். குளிர்மையான கரும் பலகையில் கொதிக்கும் எனது நெற்றியைச் சாய்ந்து நின்றேன். அறைமுழுவதும் பெருத்த சிரிப்பு. நீடிக்க காரணமாக எனது தசை நார்கள் உறைந்து போயின "நீர் உமது ஆசனத்தில் போய் அமரும்" என்றார் ஆசிரியை.

நான் உட்கார்ந்து என்னையே சபித்துக் கொண்டேன். கூட்டத்தின் முன்னே பேச அழைக்கப்படும் போது எப்பொழுதுமே நான் மடைத்தனமாக நடந்து கொள்வது ஏன்?

வகுப்பிலுள்ள எந்தவொரு மாணவர் போல நன்றாக என்னால் எழுத முடியும், சந்தேகமின்றி அவர்களில் எவரேனையும் விடச் சிறப்பாக என்னால் வாசிக்க முடியும். நான் நம்பிக்கையுடன் இருக்கும்பொழுது சரளமாகவும் விளக்கமான முறையிலும் நான் பேசுவேன். அப்படியாயின் அந்நியமான முகங்கள் என்னை உறையச் செய்கின்றன.

என்காதுகளும்,கழுத்தும்கொதிக்கும் நிலையில் நான் போய் அமர்ந்தேன். மாணவர்கள் ரகசியமாக என்னைப் பற்றி குசுகுசுப்பதைக் கேட்டு என்னையே வெறுத்தேன். அவர்களையும் வெறுத்தேன்.

நான் தமிழாக்கித் தந்ததை ஆங்கில மூலத்தில் நீங்கள் படிக்கும் பொழுது, ரிச்சர்ட் றைட்டின் எழுத்துத் திறனை அறிந்து கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# துடிப்பான எதிரணியாக வளர்ந்துவரும் சிவில் சமூகம்

எம்.பி.வித்தியாதரன்

## பார்வையாளர்களாக மாறிவரும் எதிர்க் கட்சிகள்






இந்தியாவில் அடுத்த பொதுத்தேர்தலுக்கு இன்னும் இருவருடங்கள் இருக்கின்றன. ஆனால் அடுத்த தேர்தலை இலக்காகக் கொண்ட பிர சாரங்கள் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டன. இத்தடவை ஆச்சரியம் என்னவென்றால் இந்தப் பிரசாரங்கள் எதிரணிக்கட்சிகளால் அல்ல ஊழல் மோசடிகளுக்கும் வெளிநாட்டு வங்கிகளில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் கறுப்புப் பணத்துக்கும் எதிரான சிவில் சமூக அமைப்பு களினாலேயே முன்னெடுக்கப்படுகின்றன.

தூய்மையான தலைவர் என்ற ஒரு படிவத்தைக் கொண்ட பிரதமர் கலாநிதி மன்மோகன்சிங் தலை மையிலான அரசாங்கத்தின் மீது தொடர்ச்சியாக பெரு வாரியான ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டதை யடுத்து 2010 ஆம் ஆண்டு தற்போதைய ஊழல் எதிர்ப்பு இயக்கத்துக்கான விதைகள் ஊன்றப்பட்டன. அந்த வருடம் ஒக்டோபரில் இந்தியா நடத்திய பொது நலவரசு விளையாட்டுப்போட்டிகளுக்கு சற்றுமுன்ன தாக ஊழலுக்கெதிரான மக்களின் கோபம் ஒரு உச்ச நிலைக்கு வந்தது. ஊழல் குற்றச்சாட்டுகளுடன் சேர்த்துசெயற்திட்டங்களைநடைமுறைப்படுத்துவதில் காட்டப்பட்ட மட்டுமீறிய தாமதங்களும் உலகளாவிய ரீதியில் இந்திய அரசுக்கு அவப்பெயரை ஏற்படுத்திக் கொடுத்தன. இவை எல்லாவற்றுக்கும் மத்தியில் அர சாங்கம் குற்றவாளிகளைக் கைதுசெய்யத் தவறிவிட் டது. ஊழல்குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட அமைச்சர் களையும் ஏனைய அரசியல்வாதிகளையும் மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிரங்கமாக ஏளனம்செய்து கூப்பாடு போட்டன. பொதுநலவரசு விளையாட்டுப் போட்டியின் அங்குரார்ப்பண வைபவத்தில் கூட பொது மக்கள் அரசியல் வாதிகளை நோக்கி கூப்பாடுபோட்டு அவமதித்தனர். பிரதமரைக்கூட அவர்கள் விட்டு வைக்கவில்லை.

மக்களுடைய கோபம் அதிகரித்துக் கொண்டே வந்தது. ஆனால் அரசாங்க அதிகாரிகள் அதைத் தணிப்பதற்கு உரிய முறையில் பதிலளிக்கத் தவறினர். இந்தச் சூழ்நிலையின் பின்னணியில் பாபா ராம்தேவ் ஊழலுக்கும் கறுப்புப் பணத்துக்கும் எதிரான ஒரு போராட்டத்தை ஆரம்பித்தார். அநேகமாக சகல மாநிலங்களிலும் இவரது நம்பிக்கை நிதியங்கள் செயற்படுகின்றன. அந்தவேளையில் பெரிதாக மக்களுக்குத் தெரியாதிருந்த அண்ணாஹசாரே உட்படசகலமுன்னணி சிவில் சமூகத் தலைவர்களையும் இந்தப் போராட்டத்தில் பாபா ராம்தேவ் ஒன்றிணைத்தார். ஊழலுக்கெதிரான இந்தியா என்ற அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனத்தைச் சேர்ந்தவரான அரவிந்த் கெஜ்ரிவால் (டில்லி இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தின் பட்டதாரியான இவர் இந்திய வருமான வரி சேவையின் முன்னாள் அதிகாரியுமாவார்), அவசரகால நிலை காலகட்டத்தில் காலஞ்சென்ற சஞ்சய் காந்தியைக் கூட விட்டுவைக்காதமைக்கான பெயர்போன முன்னாள் பொலிஸ் அதிகாரியான கிரான் பேடி ஆகியோர் பாபா ராம்தேவின் போராட்டத்தில் இணைந்துகொண்ட சிவில் சமூகத் தலைவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். 2010 பெப்ரவரி 27 இல் பாபா ராம்தேவ் டில்லியில் ராமலீலா மைதானத்தில் பிரமாண்டமான பேரணியொன்றை ஏற்பாடு செய்தார். ஏப்ரல் 5ஆம் திகதியிலிருந்து அண்ணா ஹசாரே காலவரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிப்பார் என்று அந்தப் பேரணியில் வைத்து அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து ஊழலுக்கு எதிரான போராட்ட இயக்கத்தை அண்ணா ஹசாரே தனது கையில் எடுத்துக்கொண்டார். டில்லி ஜந்தர் மந்திரில் தனது சாகும் வரையிலான உண்ணாவிரதப்போராட்டத்தை ஆரம்பித்த அவர் பின்னர் போராட்ட அரங்கை ராம் லீலா மைதானத்துக்கு மாற்றிக் கொண்டார். இந்த மைதானம் ஊழலுக்கெதிரான இயக்கத்தின் சின்னமாக இப்போது மாறிவிட்டது. அண்ணா ஹசாரேயின் போராட்டத்துக்கும் மக்களின் ஆதரவு பெருகத்தொடங்க, மன்மோகன்சிங் அரசாங்கம் பல தவறுகளை இழைக்கத் தொடங்கியது. அண்ணா ஹசாரேயை பொலிஸார் கைது செய்தனர். சிறைக்குள் அவர் உண்ணாவிரதத்தை தொடர்ந்த போது எதையும் செய்யமுடியாத நிலையில் அரசாங்கம் விடுதலை செய்தது. அவர் பொது மக்களுடன் போராட்டத்தில் இணைந்து கொண்டார். நாடு பூராகவும் இலட்சக்கணக்கான மக்கள் வீதிகளுக்கு இறங்கி அவருக்கு ஆதரவு தெரிவித்தனர். இறுதியாக அண்ணா ஹசாரே மற்றும் அவரது குழுவினருக்கு முன்னால் அரசாங்கம் அடிபணியவேண்டியதாயிற்று. ஊழலுக்கெதிராக உறுதியான லோக்பால் சட்ட மூலமொன்றை இயற்றுவதற்கு இணங்கிய அரசாங்கம் அண்ணா ஹசாரேயின் குழுவினரால் முன்வைக்கப்பட்ட சகல அம்சங்களையும் அந்தச் சட்ட மூலத்தில் உள்வாங்கிக் கொள்வதாகவும் உறுதியளித்தது.

ஊழலுக்கெதிரான இயக்கம் மிகப் பெரிய வெற்றியாக அமைந்தபோதிலும் கூட, அண்ணா குழு பாபா ராம்தேவை பாரதிய ஜனதாவுக்கும் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்துக்கும் நெருக்கமானவர் என்ற காரணத்தைக் காட்டி அவரை ஓரங்கட்ட ஆரம்பித்ததையடுத்து சிவில் சமூக முகாமுக்குள் துரதிர்ஷ்டவசமான பிளவுகள் ஏற்பட்டன. மக்களின் ஆதரவினால் பெரும் உற்சாகமடைந்த அண்ணாகுழு தங்களது மேடைகளில் அரசியல் தலைவர்களை அனுமதிப்பதில்லை என்ற தீர்மானத்தையும் எடுத்தது. தங்களது போராட்டத்துக்கு பாராளுமன்றத்தில் ஆதரவைத் திரட்டுவதற்கான எதிர்க்கட்சித் தலைவர்களை நாடிச்சென்ற போதிலும் கூட இத்தகைய தீர்மானம் ஒன்றை எடுக்கின்ற அளவுக்கு மக்களின் ஆதரவு அண்ணா குழுவுக்கு துணிச்சலைக் கொடுத்தது.

ஓரங்கட்டப்பட்ட நிலையில் ராம்தேவ் மீண்டும் ஊழலுக்கெதிரான போராட்டத்தின் முன்னரங்கத்திற்கு மீண்டும்வரும் முயற்சியாக அதே மைதானத்தில் ஜுன் மாதம் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார். எவ்வாறெனினும், ஆரம்பத்தில் டில்லியில் பாபா வந்திறங்கிய போது அவருடன் பேச்சுவார்த்தை நடத்த விமானநிலையத்துக்கு மத்திய அமைச்சர்களை அனுப்பி வைத்த அரசாங்கம் பிறகு நள்ளிரவில் பொலிஸ் படையைப் பயன்படுத்தியது. ஒரு பெண்ணின் ஆடையை அணிந்தவராக பாபா ராம்தேவ் உண்ணாவிரத அரங்கில் இருந்து உத்தராஞ்சலில் உள்ள தனது ஆச்சிரமத்துக்கு தப்பியோட வேண்டி ஏற்பட்டது. அவமதிப்புக்குள்ளாக்கப்பட்ட பாபா கிராமங்களுக்குச் சுற்றுலா சென்று ஊழலுக்கெதிராக மக்களின் ஆதரவை மேலும் திரட்டிக்கொண்டு கூடுதலான பலத்துடன் திரும்பிவரப்போவதாகச் சூளுரைத்தார்.

உருப்படியான ஒரு லோக் பால் சட்ட மூலத்தைக் கொண்டுவருவதாக உறுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யளித்தபோதிலும்கூட அரசாங்கம் பயனுறுதியுடைய எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கத் தவறிவிட்டது. இதனால் அண்ணா ஹசாரே குழுவும் அதன்போராட்டஇயக்கத்தைவலுப்படுத்த நிர்ப்பந்திக்கப்பட்டது. கடந்த வருட இறுதியில் மும்பாயிலும் இவ்வருடம் ஜுலையிலும் டில்லியிலும் அவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை மீண்டும் நடத்தினார்கள். ஆனால் இரு சந்தர்ப்பங்களிலும் பொது மக்களிடமிருந்து அரைகுறை மனத்துடனான ஆதரவே கிடைத்தது. மக்களின் கோபம் தணிந்துவிட்டது என்று நினைத்த அரசாங்கத்திடம் இருந்து எந்தப் பதிலுமே வராத நிலையில் உண்ணாவிரதப் போராட்டத்தை அண்ணாகுழு இடைநிறுத்த வேண்டியதாயிற்று. ஆனால், இந்தப் போராட்டங்களின் இறுதிக் கட்டங்களில் மக்கள் மீண்டும் பெருமளவில் வந்து குவியத்தொடங்கியதை அவதானிக்கக் கூடியதாகவும் இருந்தது. இவ்வாறு ஊழலுக்கு எதிரான உணர்வு வேகமடையத் தொடங்கிய போது அண்ணாகுழு திடீரென்று உண்ணாவிரதத்தை முடிவுக்கு கொண்டு வந்ததுடன், போராட்டத்தை பாராளுமன்றத்துக்கு எடுத்துச் செல்வதற்கு புதியதொரு அரசியல் சக்தி அவசியமானது என்று அறிவித்தது பெரும் மகிழ்ச்சியாக இருந்தது. அரசாங்கமும் அரசியல் கட்சிகளும் தங்களது கோரிக்கைகளுக்கு பதிலளிக்காததால் விரும்புகின்ற மாற்றங்களைக்கொண்டுவருவதற்கு பாராளுமன்றத்தை பயன்படுத்தவேண்டும் என்ற நியாயப்பாட்டை அவர்கள் முன் வைத்தார்கள். இந்தத் திடீர் அறிவிப்பு ஆதரவாளர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஏனென்றால் நாட்டைப் பிடித்திருக்கும் சகலவிதமான குறைபாடுகளுக்கும் ஊழல் மோசடிகளுக்கும் அரசியல் தலைவர்களும் ஆட்சி முறையுமே காரணமென்று அண்ணா குழுவின் தலைவர்கள் இது நாள் வரை குற்றஞ்சாட்டி வந்தன. புதிய அறிவிப்பு சரியான ஒரு நடவடிக்கையா என்று அண்ணா குழுவின் முக்கிய தலைவர்கள் பலரும் செயற்பாட்டாளரும் இளைஞர்களும் சந்தேகித்தனர். அண்ணா பல தடவைகள் தானாகவே ஒத்துக்கொண்டதைப் போல தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றி பெறுவது அவ்வளவு இலகுவான காரியமல்ல என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள்.

சோர்வடைந்த ஆதரவாளர்கள் ஊழல் அற்றநாடொன்றுக்கானபோராட்டத்துக்கு இன்னொரு சந்தர்ப்பமாக பாபா ராம்தேவின் உண்ணாவிரதத்தைக் கண்டனர். இந்திய சுதந்திர தினத்துக்கு முன்னதாக ஆகஸ்ட் 14ஆம் திகதி முடிவுக்கு வந்த பாபாவின் 6 நாள் உண்ணாவிரதத்தின் போது அவருடன் ஆயிரக்கணக்கான மக்கள்இணைந்துகொண்டார்கள். உண்ணாவிரத முடிவில் பாபா இரண்டாவது புரட்சியொன்றுக்கு அழைப்பு விடுத்ததுடன், அடுத்த தேர்தலில் காங்கிரஸை பதவியிலிருந்து விரட்டுமாறு மக்களைக் கேட்டுக் கொண்டார். தங்களது கோரிக்கைக்கு அரசாங்கம் பதிலளிக்காதிருப்பதால் உண்ணாவிரதத்தை தொடருவதில் எந்த அர்த்தமுமில்லை என்று கூறி அண்ணா ஹசாரே செய்ததுபோன்று ராம்தேவும் தனது உண்ணாவிரதத்தை முடித்திருக்கிறார். ஆனால் அவர் மக்களுக்கு விடுத்த செய்தி தெளிவானது. காங்கிரஸைப் பதவியிலிருந்து விரட்டவேண்டும் என்பதே அச்செய்தி. (அதேவேளை அண்ணா முகாமின் செய்தி பெரும்பாலும் பக்கச்சார்பான அரசியல் தொனியற்றதாகவே இருக்கிறது.) ஆனால் இதனால் ஏதாவது பயன் இருக்குமா? காங்கிரஸ் தனக்கு அனுகூலமான முறையில் மக்களின் வாக்குகளை சிதறடிப்பதற்கு இந்த சூழ்நிலையைப் பயன்படுத்தாதா? அண்ணாகுழு குழப்பமடைந்து பிளவுபட்டிருப்பதாகவே தோன்றுகின்றது.

அமைப்பு ரீதியான ஊழலுக்கெதிரான போராட்டத்தை தற்போது பிரபல்யமாக்கும் ஒரு முக்கிய பிரமுகராக ஓய்வுபெற்ற இராணுவத் தளபதி ஜெனரல் வீ.கே.சிங் விளங்குகிறார். அண்ணா ஹசாரேயின் ஆர்ப்பாட்டத்தின் போதும் ராம்தேவின் உண்ணாவிரதத்தின் போதும் அவர் மேடையில் காணப்பட்டார். நீதியரசர்கள் வீ.ஆர்.கிருஷ்ணய்யர், சந்தோஷ் ஹெக்டெ, அரசியல் விஞ்ஞானி கலாநிதி யோகேந்திர யாதவ், திரைப்பட நடிகர் அனுபம் கேர் போன்று அண்ணா ஹசாரேயை உண்ணாவிரதத்தைக் கைவிட்டு அரசியல் பாதைக்கு வருமாறு வேண்டுகோள் விடுத்த 22 முன்னணி பிரஜைகளில் ஜெனரல் சிங்கும் ஒருவர்.

அண்ணா ஹசாரேயின் இயக்கமும் பாபா ராம்தேவின் இயக்கமும் இப்போது அரசியல் ரீதியானவையாக மாறிவிட்டன. உண்ணாவிரதத்தின் போது அரசாங்கத்தையும் அமைச்சர்களையும் தாக்கிப் பேசக்கூடாதென்பதில் உறுதியாக அண்ணா ஹசாரே இருந்தபோதிலும் ராம்தேவ் "காங்கிரஸை அகற்றுங்கள், நாட்டைக் காப்பாற்றுங்கள்" என்று நாட்டு மக்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார். ஆனால் இப்போது அவரும் அண்ணாவும் பெரும்பான்மையான அமைச்சர்கள் ஊழல்காரர்கள் என்று வெளிப்படையாகவே கூறுகிறார்கள். இறுதியாக நடந்த உண்ணாவிரதப் போராட்டத்தின் போது அண்ணாகுழு 15 மத்திய அமைச்சர்களுக்கெதிராக சுமத்தப்பட்டிருக்கும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு விசேட குழுவொன்றை நியமிக்க வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தது.

ஜவஹர்லால் நேருவுக்கு பிறகு பிரதமர் பதவிக்கு அடுத்தடுத்து தெரிவு செய்யப்பட்ட ஒரேஒரு அரசியல் தலைவராக விளங்கும் கலாநிதி மன்மோகன் சிங் இப்போது பாரதூரமான நெருக்குதலுக்குள்ளாகியிருக்கிறார். அவரது கட்சியின் தலைவியான சோனியா காந்தி அடுத்த தேர்தலில் எவ்வாறு அதிகாரத்தைத் தக்கவைப்பது என்பது பற்றி ஏதும் புரியாதவராக இருக்கிறார். அவர்கள் மக்களைக் கவருவதற்கு மலிவான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடுகிறார்கள். வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்களுக்கு இலவசமாக கைத்தொலைபேசிகளை வழங்குவது அத்தகைய திட்டங்களில் ஒன்று. ஆனால் இந்திய கிராமப்புற மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கு இந்தத் திட்டங்கள் போதுமானவையா? ஒன்று மட்டும் தெளிவானது. ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி இலட்சக்கணக்கான வாக்குகளை அதுவும் குறிப்பாக நகர்ப்புற மக்களின் வாக்குகளை நிச்சயமாக இழக்கப்போகிறது. நகர்ப்புற வாக்காளர்களில் பெரும்பான்மையினராக விளங்கும் இளைஞர், யுவதிகள் ஊழலுக்கும் கறுப்புப் பணத்திற்கும் எதிராக கடும்கோபத்தில் இருக்கிறார்கள். இந்தியாவில் உள்ள கறுப்புப் பணம் தொடர்பில் 2012 மே யில் வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கையில் சுவிஸ் தேசிய வங்கி இந்தியப் பிரஜைகளினால் 2010 இறுதியளவில் சகல சுவிஸ் வங்கிகளிலும் வைப்பிலிடப்பட்டிருக்கும் பணத்தின் தொகை 210 கோடி அமெரிக்க டொலர்கள் (9,295 கோடி இந்திய ரூபா). என்று மதிப்பிடப்பட்டிருந்தது. இந்திய வெளியுறவு அமைச்சினால் தகவல் கோரப்பட்டதன் பெயரில் இந்தப் புள்ளி விபரத்தைசுவிஸ்வெளியுறவுஅமைச்சும் ஊர்ஜிதம் செய்தது. எவ்வாறெனினும் சில ஊடகங்கள் சுவிஸ் வங்கிகளில் இந்தியர்கள் வைப்பிலிட்டிருக்கும் பணத்தின் தொகை 1.4 ட்ரில்லியன் டொலர்கள் என்று தகவல் வெளியிட்டிருந்தன. சுவிஸ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட தொகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் தொகையிலும் பார்க்க சுமார் 700 மடங்கு குறைவானதாகும்.

இந்தியாவில் இன்று பெரியதோர் பிரச்சினையாக இருக்கும் ஊழலை எதிர்த்துப் போராட உருப்படியான லோக்பால் சட்டமூலமொன்றை கொண்டுவர வேண்டு மென்றே அண்ணாகுழு கேட்டுக் கொண்டிருந்தது. இதை ஜனாதிபதி என்ற வகையில் தனது கன்னி உரையில் பிரணாப் முகர்ஜியும் ஒத்துக்கொண்டார். ஊழலுக்கெதிரான மக்களின் உணர்வுகளினால் அரசாங்கத்துக்கு எதிராக அதிகரித்துவரும்எதிர்ப்பலைகளைஎளிதாகத் தணித்திருக்கக்கூடிய அவசியமான நடிவடிக்கைகளை ஏன் காங்கிரஸ் அதுவும் குறிப்பாக ராகுல் காந்தி இதுவரை எடுக்கவில்லை. இந்த முக்கியமான பிரச்சினைக்கு எதிராகப் போராடுவதில் பாரதிய ஜனதாவும் இடதுசாரிக் கட்சிகளும் கூட தவறவிட்டன. இதன் விளைவாக சிவில் சமூகம் செயலூக்கமுடைய ஒரு எதிரணியாக வளர்ந்து வருகிறது. எதிர்க்கட்சிகள் பயனற்றவையாக வெறுமனே பார்வையாளர்களாக மாறிக்கொண்டிருக்கின்றன.


## அடுத்த பிரதமர் யார்?

இந்தியாவின் அடுத்த பிரதமராக யார் வருவார் என்பது தொடர்பில் இன்னொரு சுவாரஸ்யமான விவாதமொன்று நடந்து கொண்டிருக்கிறது. அவர் காங்கிரஸைச் சேர்ந்தவரா? பாரதிய ஜனதாவைச் சேர்ந்தவரா?அல்லது வேறு ஏதாவது கட்சியைச் சேர்ந்தவரா?


ஆரம்பத்தில் பிரதமர் விவாதம் காங்கிரஸுடனும் பாரதிய ஜனதாவுடனும் மட்டுப் படுத்தப்பட்டதாக இருந்தது. கலாநிதி மன்மோகன் சிங்கிற்கு 82 வயதாகிவிட்டது. மீண்டும் பிரதமர் வேட்பாளராக தான் நிற்கப்போவதில்லை என்பதை அவர் ஏற்கனவே தெளிவுபடுத்திவிட்டார். பிரதமர் இடத்துக்கு ராகுல்காந்தியைக் கொண்டு வருவதில் காங்கிரஸ் தலைவர்கள் அக்கறைகொண்டிருக்கிறார்கள் போல் தெரிகிறது. ஆனால் ராகுல் காந்திக்கும் ஏன் அவர் குடும்பத்தினருக்கும் கூட இதுவிடயத்தில் மனவொவ்வாமை இருக்கிறது. ராகுல்காந்தியை தியாகம் செய்வதில் இருக்கக்கூடிய ஆபத்துகள் பற்றி அவரின் குடும்பத்துக்கு பயமிருப்பதன் காரணத்தினால் பிரதமர் வேட்பாளராக அவரை முன்னிறுத்துவதற்கான முயற்சிகள் பயனளிக்கப்போவதில்லை என்றே தோன்றுகின்றது. நாட்டு மக்களின் மனநிலையை காந்தி குடும்பம் நன்கறிந்திருப்பதே இதன் பின்னணியாகும். அத்துடன் பீகார், உத்தரபிரதேசம் போன்ற மாநிலங்களில் சட்டசபைத் தேர்தல்களின்போது ராகுல் காந்தி காங்கிரஸின் பிரசாரப்பொறுப்பை முன்னின்று கையாண்டபோதிலும் பெரிதாக எதையும் சாதிக்கவில்லை. அவரது கட்சிக்கு படுதோல்வியே ஏற்பட்டது. உத்தரப்பிரதேச சட்டசபைத் தேர்தல்களின் போது சோனியா காந்தியும் ராகுல்காந்தியும் பிரதிநிதித்துவம் செய்யும் லோக்சபா தொகுதிகளில் உள்ள சட்டசபை ஆசனங்களில் கூட (காந்தி குடும்பம் முழுவதுமே தீவிரமாக பிரசாரத்தில் இறங்கியிருந்த நிலையிலும்) கூடகாங்கிரஸ்கட்சிதோல்வியையே தழுவியது.

இந்துத்வா ஆதரவாளர்களின் செல்வாக்கை மூலதனமாக்கும் ஒரு முயற்சியாக குஜராத் மாநில முதலமைச்சரை பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்துவதா இல்லையா என்ற கடுமையான விவாதம் பாரதிய ஜனதாவுக்குள் நடந்து கொண்டிருக்கிறது. மோடி ஒரு ஆற்றல் மிக்க நிர்வாகி என்று மதச்சார்பற்ற அரசியல்வாதிகளால்கூட புகழப்படுகிறார். மத்திய அமைச்சர்களான சரத் பவார், பாரூக் அப்துல்லா போன்றவர்கள் மோடியைப் பாராட்டுபவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். எவ்வாறெனினும் மோடியின் பிரச்சினை சிறுபான்மையினரின் குறிப்பாக, முஸ்லிம்களின் வாக்குகளேயாகும். ஆயிரத்துக்கும் அதிகமாகக் கொல்லப்பட்ட 2002 குஜராத் கலவரங்களைக் கையாண்ட விதத்திற்காக மோடி கடுமையாக குற்றஞ்சாட்டப்படுகிறார். அதேவேளையில் பாரதிய ஜனதாத் தலைவர்களில் பெரும்பாலானோர் தாங்கள் பிரதமர் பதவிக்கு வரவேண்டும் என்று கனவு காண்கிறார்கள். நிதின்கட்காரி, அத்வானி, கலாநிதி மனோகர் ஜோஷி, சுஷ்மா சுவராஜ், அருண்ஜெய்ட்லிபோன்றவர்கள் இதில் குறிப்பிடத்தக்கவர்கள். ஆம்.... யார்தான் இந்த உச்சப்பதவியை விரும்பமாட்டார்கள்?

பாரதிய ஜனதாவினதோ அல்லது காங்கிரஸினதோ ஆதரவுடனான மூன்றாவது கட்சி ஒன்றிலிருந்து ஒருவர் பிரதமராகக்கூடிய வாய்ப்புக்குறித்து பாரதிய ஜனதாவின் மூத்த தலைவர் எல்.கே.அத்வானி தனது இணையத்தள வலைப்பின்னலில் தெரிவித்த கருத்து நிலைவரத்தைமேலும்சூடாக்கி இருக்கிறது. ஆர்வமிக்க அரசியல்












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரோகித் சர்மா



என்.டி.திவாரி

அவதானியும் சாதுரியமான அரசியல் வாதியுமான அத்வானி நாட்டு மக்களின் நாடித் துடிப்பை நன்கறிவார். அதன் கார ணத்தினால் தான் தனது கட்சிக்காரர்க ளின் கோபத்துக்கு ஆளாகவேண்டி வருமே என்பதையும் பொருட்படுத்தாமல் கவனத்தைத் தூண்டுகிற இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார் போலும். எதிர்பார்க்கப்பட்டதைப் போலவே பாரதிய ஜனதாவின் நேச சக்திகளான சிவசேனை போன்ற கட்சிகள் சண்டை தொடங்கும் முன்பதாகவே தோல்வியை ஒப்புக் கொண்டுவிட்டதாக அத்வானியை குற் றஞ்சாட்டுகின்றனர். பாரதிய ஜனதாவின் பல தலைவர்கள் அத்வானியின் மீது கோபம் கொண்டிருக்கிறபோதிலும்கூட வெளிப்படையாக அவரிடம் கேள்வி எழுப்பவில்லை.

ஆனால் உண்மையான நிலைவரம் தான் என்ன? தன்னால் தெரிவிக்கப் படக்கூடிய கருத்து கட்சியைப் பாதிக்கும் என்பதைத் தெரிந்திருந்தும் கூட மூன் றாவது கட்சியைச் சேர்ந்த ஒருவர் பிரத மராக வரக்கூடிய வாய்ப்பு தொடர்பாக இக்கருத்தை தெரிவிப்பதற்கு அத்வானி என்ன முட்டாளா? உண்மையில் அத் வானியின் கணிப்பீடு சரியானதாக வரு மென்றே தோன்றுகின்றது. அரசியல் நிலைவரம் காங்கிரஸுக்கும் பாரதிய ஜனதாவுக்கும் சாதகமானதாக இல்லை. அவை மக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்துகொண்டே வருகின்றன. குறிப் பாக நகர்ப்புறங்களில் உள்ள இளைஞர், யுவதிகள் ஊழல் அதிகரித்து வருவது குறித்தும் அரசியல்வாதிகள் மத்தியில் பொறுப்புடைமை இல்லாதமை குறித்தும் கடுமையான ஆத்திரமடைந்திருக்கிறார் கள். அவர்கள் ஒரு மாற்றத்தை விரும்பு கிறார்கள். சிவில் சமூக இயக்கங்கள் அவர்களுக்கு வாய்ப்பொன்றை வழங்கு கின்றனர். அத்துடன் இப்போது அண்ணா குழுவும் பாபா ராம்தேவும் போராட்டத்தை அரசியல் அரங்கிற்கு எடுத்துச் செல்வ தற்கு தங்களது திட்டங்களை பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்கள். அண்ணாகுழு மகாத்மா காந்தியின் பிறந்த தினமான ஒக்டோபர் 2ஆம் திகதி புதிய அரசியல் கட்சியை அறிவிக்கக்கூடிய சாத்தியம் இருக்கிறது. தேர்தல்களில் எவ்வாறு அக் கட்சி செல்வாக்கை வெளிப்படுத்துமோ யாரும்அறியார். ஆனால்ஒன்று மாத்திரம் நிச்சயம். பாரதிய ஜனதாவினதும் காங்கிர ஸினதும் வாக்குவங்கிகளில் இருந்து கணிசமான பகுதியை அண்ணாகுழு தமதாக்கிக் கொள்ளும்.

டில்லியை மையமாகக்கொண்டியங் கும்சந்தைப்படுத்தல் மற்றும்அபிவிருத்தி ஆராய்ச்சி அமைப்பு (MDRA) அண்மை யில் மேற்கொண்ட ஆய்வொன்று அத் வானியின் முன்மதிப்பீட்டை உறுதிசெய்கி றது. அத்வானி அதைத் தெரிவித்ததற்குப் பிறகு வெளியிடப்பட்ட இந்த ஆய்வு மூன்றாவது அரசியல் அணியொன்று அடுத்த தேர்தலில் அதிகாரத்திற்கு வரக்கூடிய சாத்தியம் இருக்கிறது என்றும் காங்கிரஸ் கூட்டணியினாலோ பாரதிய ஜனதாக் கூட்டணியினாலோ 150 ஆச னங்களைக் கூட கைப்பற்ற முடியாமல் போகும் என்றும் கூறியிருந்தது. இப் பொழுது ஒருதேர்தல் நடைபெறுமாக விருந்தால் ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக்கு லோக்சபாவில் கிடைக்கக் கூடிய ஆசனங்களின் எண்ணிக்கை 130-140 ஆகக் குறைந்துவிடும். ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் தற்போதைய லோக் சபா ஆசனங்களின் எண்ணிக்கை (வெளியில் இருந்து கிடைக்கப்பெறும் ஆதரவை தவிர்த்துப்பார்த்தால்) 226 ஆகும். இந்த எண்ணிக்கையிலிருந்து 120 - 130 ஆசனங்களை காங்கிரஸ் இழக்கவேண்டி வரும். அதே போன்று பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியால் 115-125 ஆசனங்களை மாத்திரமே வெல்லக் கூடியதாக இருக்கும்.

காங்கிரஸும் பாரதிய ஜனதாவும் சேர்ந்து ஒரு அரசாங்கத்தை அமைப்பது சாத்தியமில்லை என்பதால் ஏனைய கட்சி கள், இடதுசாரிகள் உட்பட மூன்றாவது முன்னணி அரசாங்கமொன்றை அமைக் கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக ஆய்வு கூறுகிறது. நிலைமை இவ்வாறாக இருக்கு மானால், உத்தரபிரதேசத்தில் முன்னாள் முதலமைச்சர் மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சி அந்த மாநிலத்திற்கு வெளியி லும் நன்றாகச் செல்வாக்கை வெளிப் படுத்தி கணிசமான ஆசனங்களைக் கைப்பற்றுமானால் அவருக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கக்கூடும். ஆய்வில் குறிப் பிடப்பட்டிருக்கும் சாத்தியமான இன் னொரு பிரதமவேட்பாளர் பீகார் மாநில முதலமைச்சர் நிதிஷ்குமார்.

எதிர்பார்க்கப்பட்டதுபோலவே காங்கிர ஸும் பாரதியஜனதாவும் இந்த ஆய்வின் கண்டுபிடிப்புகளை நிராகரித்துவிட்டன. ஆனால் பெயர்பெற்ற ஆய்வாளரான என்.பாஸ்கரராவ் அடுத்த தேர்தலில் பிரதான தேசியக்கட்சிகள் சிறப்பான செயற்பாடுகளை வெளிப்படுத்த முடியா மல் போகக்கூடிய சாத்தியத்துக்கு அண்ணா ஹசாரேயும் ராம்தேவும் முன்னெடுத்திருக்கும் ஊழலுக்கெதிரான போராட்டங்களே காரணமாக அமைய முடியும் என்று உணருகிறார்.

2014 தேர்தல்களுக்கு இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியிருக்கிறது என்பது உண்மையே. இடைப்பட்ட காலத்தில் பிரச் சினைகள் மாறலாம். ஆனால் அரசாங் கத்தை பழிவாங்குவதற்கு சிவில்சமூக இயக்கத்தவர்களுக்கு உதவியாகவும் காலம் மாறலாம். சிவில் சமூகத்துக்கு உறுதிமொழிகளை வழங்கிவிட்டு பின்னர் துரோகமிழைத்த அரசாங்கம் இப்போது கர்வத்தனமாக நடந்துகொள்கிறது.

## அரசியல், பாலியல் குற்றச்செயல்கள்

பாலியலும் குற்றச்செயல்களும் இந் தியாவின் அரசியலின் சுவாரஸ்யமான கூறுகளாக நீண்டகாலமாகவே இருந்து வருகின்றன. வாக்காளர்களின் ஞாபகச் சக்தி குறுகியதென்பதால் பாலியல் விவ காரங்களிலும் குற்றச்செயல்களிலும் ஈடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட அரசியல் தலைவர்கள் தொடர்ந்தும் பொதுவாழ்வில் நீடிக்கக்கூடியதாக இருக்கிறது. கேரளாவில் இருந்து காஷ்மீர் வரை அநேகமாக சகல மாநிலங்களிலுமே பெருவாரியானசம்பவங்கள்இடம்பெற்று வந்திருக்கின்றன.

கடந்த இருவாரங்களில் இரு சம்பவங்கள் கூடுதலான அளவுக்கு கவனத்தை ஈர்த்தன. ஒரு சம்பவத்தில் கீதிகா சர்மா என்ற 23வயதான முன்னாள் விமானப்


கோபால் கோயால்



கீதிகா சர்மா

பணிப்பெண் தற்கொலை செய்வதற்கு உடந்தையாக இருந்ததாக ஹரியானா மாநிலத்தின் உள்துறை அமைச்சர் கோபால் கோயால் கண்டா மீது குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது. கீதிகா சர்மா இந்த அமைச்சருக்கு முன்னர் சொந்தமாக விருந்த விமானசேவையில் பணியாற்றியிருந்தார். சப்பாத்துக்கடையொன்றின் முன்னாள் உரிமையாளரான கண்டா கடந்த இரு தசாப்தங்களிலும் தனது அரசியல் தொடர்புகளைப் பயன்படுத்தி காணி, நிலம், வீடுகள் விற்பனைத் தொழிலில் ஈடுபட்டு பெரும் பணம் சம்பாதித்தார். பிறகு விமான சேவையொன்றை உருவாக்கினார். கோபா மாநிலத்தில் ஹசினோவையும் வாங்கி பெரும் சொத்துகளை சம்பாதித்துக் கொண்டார். கீதிகாவை தனது நலன்களுக்கு பயன்படுத்திக்கொண்ட கண்டா, அவளைத் தொடர்ந்தும் தொல்லைப்படுத்தி வந்தார். தற்பொழுது செயலிழந்துவிட்ட அவரது விமானசேவையை விட்டு விலகி டுபாயில் உள்ள இன்னொரு விமானசேவையில் அவள் இணைந்துகொண்டாள்.ஆனால் அவளை வெருட்டி வலுக்கட்டாயமாக திரும்பி வந்து தனது கம்பனியில் இணையச்செய்தார் கண்டா. ஆனால் இத்தடவை அவளுக்கு அந்தக் கம்பனியில் ஓர் இயக்குனர் பதவி. அத்துடன் அவளின் பதவிக்கான நிபந்தனைகளில் ஒன்று கடமை நேரம் முடிந்தவுடன் கண்டாவை தினமும் அவள் சென்று சந்திக்க வேண்டும். தற்கொலையைத்தொடர்ந்துகண்டா இப்பொழுது தலை மறைவாகிவிட்டார். டில்லி பொலிஸார் அவரைத் தேடிவருகிறார்கள்.

இன்னொரு தற்கொலைச் சம்பவம். அதுவும் ஹரியானா மாநிலத்தில் தான். பிசா என்றழைக்கப்பட்ட அனுராதா பாலி என்ற பெண்மணியே தற்கொலை செய்து கொண்டவர். இவர் ஏற்கனவே திருமணமான பிரதி முதலமைச்சர் சந்தர் மோகன் மீது காதலில் விழுந்து அவரை திருமணம் செய்வதற்கு முன்பதாக உதவி அட்வகேட் ஜெனரலாக பதவிவகித்தவர். இவர்களது திருமணம் 2008 டிசம்பரில் நடைபெற்றது. சந்தர் மோகன் முன்னாள் ஹரியானா முதலமைச்சர் பஜன் லாலின் புத்திரர்களில் ஒருவர். மோகனுடன் ஓடிச் சென்ற பிறகு சட்டத்தில் இருந்து தப்புவதற்காக அனுராதா மதம்மாறிக் கொண்டார். அனுராதா பிசா மொஹமட் என்றும் அமைச்சரான காதல் கணவன் சந்தர் மோகன் மொஹமட் என்றும் வெளிக்கிளம்பினர். எவ்வாறெனினும் இருவருக்கும் இடையிலான உறவு சில மாதங்களே நீடித்தது. அவர்கள் விவாகரத்து பெற்றுக்கொண்டார்கள். மோகன் மீண்டும்தனது முன்னைய குடும்பத்துடன் இணைந்து பழைய மதத்திற்குத் திரும்பினார்.

தனிமைப்பட்ட நிலைமையில் சண்டிகாரில் உள்ளதனது இல்லத்தில் அனுராதா வாழ்ந்து வந்தார். கடந்த 6 ஆம் திகதி அவர் இறந்து கிடக்க காணப்பட்டார். வீட்டுக்குள் இருந்து கெட்ட நெடி ஒன்று வருவதை உணர்ந்த அயலவர்கள் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர். பொலிஸார் வந்து வீட்டைத் திறந்து சடலத்தைக் கண்டனர். அயலவர்களுடன் அனுராதா அடிக்கடி சர்ச்சரவுப்படுவதுண்டு. அவரது உடலில் வெளிக்காயங்கள் எதுவும் இருக்கவில்லை. சடலத்துக்குப் பக்கத்தில் ஒரு மதுபான போத்தலும் சிகரெட் பக்கற்றும் கிடைக்கக் காணப்பட்டது. இது தற்கொலையா அல்லது கொலையா? பிரேதப் பரிசோதனைக்குப் பிறகு மாத்திரமே இதற்கு விடை கிடைக்கும். ஆனால் கோடிக்கணக்கான பணமும் ஆபரணங்களும் வீட்டிலிருந்து மீட்கப்பட்டமை பலவிதமான சந்தேகங்களை கிளப்பியிருக்கிறது.

இவையெல்லாம் உதிரிச்சம்பவங்கள் அல்ல. இதற்கு முன்னதாக சிரேஷ்ட காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அபிஷேக் மனு சிங்வி பாலியல் லீலைகள் தொடர்பான வீடியோ ஒன்று வெளியானதை அடுத்து காங்கி


சந்தர் மோகன், அனுராதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஸ்பேச்சாளர்பதவியிலிருந்துராஜிநாமா செய்யவேண்டியேற்பட்டது. சிங்வி உச்சநீதிமன்றத்தின் ஒரு சிரேஷ்ட வழக்கறிஞராவார். 2009 இல் இன்னொரு சிரேஷ்டகாங்கிரஸ்தலைவர் 83வயதான என்.டி.திவாரி ஹைதராபாத்திலுள்ள ராஜ் பவனில் எடுக்கப்பட்ட பாலியல் வீடியோ ஒன்று அம்பலப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து ஆந்திரப் பிரதேச மாநில ஆளுநர் பதவியிலிருந்து விலகவேண்டியேற்பட்டது. வேறொரு பெண்ணோடு அவருக்கிருந்த தொடர்பினால் பிறந்த மகன் உயிரியல் தந்தை உரிமைகோரி திவாரிக்கெதிராக அண்மையில் வழக்குத் தொடுத்திருந்தார். மரபணு சோதனைக்குப் பிறகு இந்த வழக்கில் திவாரியே அந்த இளைஞனுக்கு தந்தை என்று தீர்ப்பானது.

2003ஆம் ஆண்டு உத்தரப்பிரதேச அமைச்சர் அமர்மானி திரிபாதி அவரது காதலியான மதுமிதா என்ற கவிஞரின் கொலையையடுத்து கைதுசெய்யப்பட்டார். ராஜஸ்தான் மாநிலத்தில் பான்வாரி தேவி என்ற பெயருடைய தாதியொருவரை பாலியல் வன்முறைக்குட்படுத்தி கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டதையடுத்து கடந்த வருடம் அமைச்சர் ஒருவர் சிறைக்கு அனுப்பப்பட்டார். 2009 பொதுத்தேர்தலின் போது முன்னாள் நடிகையும் தற்போது உத்தரப்பிரதேசத் தொகுதி ஒன்றின் பாராளுமன்ற உறுப்பினருமான ஜெயப்பிரதா தனது நிர்வாணப்படங்களை அமைச்சர் அஸாம் கான் விநியோகித்துத்திரிந்ததாக குற்றம் சாட்டினார். தென்னிந்தியாவிலும் இத்தகைய சம்பவங்களுக்கு குறைவில்லை. 2010 ஆம் ஆண்டு கர்நாடக அமைச்சர்களில் ஒருவரான எச்.ஹலப்பா அவரது சொந்த மாவட்டமான ஷிமோகாவில் இடம்பெற்ற பாலியல் வன்முறைச் சம்பவம் ஒன்றைத் தொடர்ந்து பதவி விலக வேண்டியேற்பட்டது. கேரளாவில் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான ராஜ்மோகன் உன்னிதன் முறைகேடான நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக கைதுசெய்யப்பட்டார்.

உத்தரப்பிரதேசம், பஞ்சாப், உத்திரகான், மணிப்பூர் மற்றும் கோவா ஆகிய 5 மாநிலங்களின் சட்டசபைகளுக்கு தெரிவுசெய்யப்பட்ட மொத்தம் 690 உறுப்பினர்களில் 35 சதவிகிதத்திற்கும் அதிகமானவர்கள் அல்லது 252 பேர் குற்றச்செயல் பின்னணி கொண்டவர்கள் என்று இவ்வருடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்று தெரிவித்தது. 2007 நிலைவரத்துடன் ஒப்பிடும் போது இது 7% கூடுதலாகும். இந்திய பாராளுமன்றத்தை எடுத்துக்கொண்டால் லோக்சபாவில் மொத்தம் 543 உறுப்பினர்களில் 153 பேருக்கெதிராக குற்றவியல் வழக்குகள் விசாரணையில் இருக்கின்றன. இவர்களில் 5 பேர் அமைச்சர்கள். அத்துடன் 15 எம்.பி.க்கள் குறைந்தது ஒரு கொலைக் குற்றச்சாட்டாவது சுமத்தப்பட்டவர்களாக இருக்கிறார்கள். ■


# வனவாசத்தின் வன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# செவ்வாயில் கியூரியோசிற்றி

கனகசபை இரத்தினம்

விஞ்ஞானப் புனைகதைகளில் படித்தவை இன்று நிஜமாகி வருகின்றது. 1969இல் சந்திரனில் காலடி எடுத்து வைத்தான் மனிதன். கடந்த ஆகஸ்ட் 6இல் செவ்வாய்க்கிரகத்துக்கு மனிதர்கள் அனுப்பிய கியூரியோசிற்றி (Curiosity) என்ற ரோபோ தற்போது அங்கு ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது.

வேற்றுக்கிரகங்களில் மனிதர்கள் இருக்கின்றார்களா? உயிரினங்கள் வாழ்கின்றனவா? என்பது பற்றி அறிந்துகொள்ளும் ஆவல் நீண்டகாலமாகவே இருந்து வருகின்றது. செவ்வாய்க்கிரகம் பற்றிய தேடல் நெடுங்காலமாகவே இருந்து வருகின்றது. பூமிக்கு அப்பால் கோள்மண்டலத்திலுள்ள கிரகங்களுக்கு மானிடர்களால் சூட்டப்பட்ட பெயர்களும், காரண, காரியத் தொடர்பைக் கொண்டதாகவே காணப்படுகிறது. குளிர்ச்சியான அதாவது வெப்ப நிலை குறைந்த கிரகமான சந்திரனை நிலாவென தமிழில் அழைக்கின்றோம். அதே போன்று ஆங்கிலத்தில் மார்ஸ் (Mars) என்றும் ரெட்பிளனற் (Red planet) என்றும் அழைக்கப்படும். சிவந்த கிரகத்திற்கு செவ்வாய் என்று பெயரிட்டிருக்கிறோம்.



இந்தச் செவ்வாய்க்கிரகத்திற்கான பயணத்தில் அமெரிக்காவிண்வெளி ஆய்வு நிலையமான நாசா (NASA) ஆறு தடவைகள் விண்கலங்களை அனுப்பியுள்ள போதும் கடந்த 6ஆம் திகதி அனுப்பப்பட்ட கியூரியோ சிற்றியொன்று அதாவது (அறியும் ஆர்வம்) என்ற அர்த்தத்தைக் கொண்ட ரோபோ இணைக்கப்பட்ட விண்கலமே செவ்வாயின் தரையில் ரோபோவை இறக்கிவிட்டுள்ளது.

8 மாதகாலத்துக்கு முன்னர் அமெரிக்க விண்வெளி முகவர் நிலையமான நாசா கியூரியோ சிற்றியை செவ்வாய்க்கு அனுப்பி இருந்தது. மணித்தியாலத்திற்கு 13 ஆயிரம் மைல் வேகத்தில் பயணம் செய்த விண்கலம் தன்னுடன் இணைக்கப்பட்டிருந்த ரோபோவை செவ்வாயின் மேற்புறத்தில் தரையிறக்கியமையே இந்தப் பயணத்தின் முக்கியமானதும் வெற்றிகரமானதுமான விடயமாக அமைந்தது. தரையிறங்குவதற்கு 7 நிமிடங்கள் முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்டிருந்தன. அந்த 7 நிமிடங்களையும் "பயங்கரமான தருணம்" என்று நாசா விஞ்ஞானிகள் வர்ணித்திருந்தனர். கியூரியோ சிற்றியின் எடை ஒரு தொன். சாதாரணமான ஒரு காரின் பருமனை இது கொண்டிருந்தது. 13,000 மைல் / மணிவேகத்தில் பயணம் செய்திருந்த விண்கலம் ரோபோவை தரையிறக்கிய போது அதன் வேகம் 1.5 மைல்/மணியாகும். நைலோன் கயிறுகள் மூலமே இந்த ரோபோ தரையிறங்கியது. அத்துடன் தரையிறங்கிய சில செக்கன்களில் கியூரியோ சிற்றி தனது முதல் பிரதிமைகளை பூமிக்கு அனுப்பிவிட்டது. இந்தப் பிரதிமைகள் பூமியை வந்தடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14 செக்கன்கள் எடுத்தது. செவ்வாயை கியூரியோ சிற்றி தொட்டுவிட்டதன் அத்தாட்சியாக அந்த ரோபோவின் சக்கரமொன்றின் (சில்லு) பிரதிமை கிடைத்திருந்தது.

இதுவரை அமெரிக்காவின் கலங்கள் பல செவ்வாயில் தரையிறங்கியிருந்தபோதும் கியூரியோ சிற்றி தரையிறக்கப்பட்டபோது கையாளப்பட்ட புதிய தொழில்நுட்ப முறைமைகளே இதன் வெற்றிக்கு முக்கிய காரணம் என்கின்றனர் விஞ்ஞானிகள்.

பல ஆண்டுகால முயற்சியால் 2.5 பில்லியன் அமெரிக்க டொலர் பணம் செலவிடப்பட்டு அனுப்பப்பட்ட கியூரியோ சிற்றி செவ்வாய்பற்றிய அரிய பல தகவல்களைவழங்கும்என்றஎதிர்பார்ப்புகள் இப்போது அதிகரித்துள்ளன.

கியூரியோ சிற்றி தரையிறக்கப்பட்டபோது புதிய உத்தி கையாளப்பட்டது. பரசூட்டிலிருந்து விண்கலம் பிரிந்து நான்கு கால்களைக் கொண்ட கிரேன் ஒன்றிலிருந்து விண்கலம் தொங்க ஆரம்பித்தது. இந்த க்கிரேனின் கால்பகுதியிலிருந்து வெப்பம் கீழ்நோக்கிப் பாய்ச்சப்பட்டது. ரொக்கட்டிலிருந்து வெப்பம் பாய்ச்சப்படும் போது விண்கலம் மேல்நோக்கிப் பாய முற்படும். இங்கு ஸ்கை கிரேனிலிருந்து கீழ்நோக்கி வெப்பம் பாய்ச்சப்பட்டபோது அது கியூரியோ சிற்றியை மேல்நோக்கித் தள்ளும் விசையை ஏற்படுத்தியது.

இங்கு செவ்வாயின் ஈர்ப்பு சக்தி விண்கலத்தை கீழ்நோக்கி இழுக்க ரொக்கட் விண்கலத்தை மேல்நோக்கித் தள்ளியது. இந்த இரு விளைவுகளின் பெறுபேறாகவே கியூரியோ சிற்றி கீழ்நோக்கி இறங்கும் வேகம் படிப்படியாக குறைக்கப்பட்டு அது மெதுவாகத் தரையிறங்கியது. ஏழு நிமிடங்களில் யாவுமே சிறப்பாக நடந்துமுடிந்துவிட்டது.

கியூரியோ சிற்றியானது முதலில் தரையிறங்கிய பகுதி கேல்குழியாகும் ''பள்ளம்''. இந்தப்பள்ளத்தின் சுற்றுப்புறங்களில் குன்றுகள் உள்ளன. இந்தப் பள்ளத்தின் நடுப்பகுதிக்கும் கியூரியோ சிற்றிக்கும் 515 கி.மீ உயரமான சாப் குன்றுக்குமிடையில் மணல் குன்று சமவெளி காணப்படுவதாக நாசாவிஞ்ஞானிகள் கூறுகின்றனர். கியூரியோ சிற்றி தரையிறங்கிய பகுதியில் சிறிய பாறைகள் உள்ளன. ஆனால் கியூரியோ சிற்றியின் சில்லுகள் 75 செ.மீ. அதனால் இந்தப் பாறைகளால் கியூரியோ சிற்றிக்குப் பிரச்சினை இல்லை. கியூரியோ



நாசாவின் கியூரியோசிற்றி 06.08.2012 அனுப்பிய படம். ரோபோ இறங்கும் போது அதன் நிழல் செவ்வாயில் தெரிகிறது. அப்பால் 3.4 மைல் உயரமான மலை. அதிலும் கியூரியோசிற்றி ஏறவிருக்கிறது. [ராய்ட்டர்ஸ்]

சிற்றி தரையிறங்கியது தொடக்கம் சாதகமான பெறுபேறுகளே கிடைத்து வருகின்றன.

இதேவேளை மனிதர்களுக்குப் போன்று இந்தக் கியூரியோ சிற்றிக்கும் மூளைமாற்று சிகிச்சை (Brain transplant) இடம்பெற்றுள்ளது. புதிய இலக்குகளை அடைவதற்காக கியூரியோ சிற்றியில் பொருத்தப்பட்டுள்ள கணினிகளில் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ள மென்பொருளை (Software) மேலும் நவீனதொழில்நுட்பங்களுடன்கூடியதாக கடந்த வார இறுதியில் நாசா விஞ்ஞானிகள் பதிவேற்றம் செய்துள்ளனர்.

ரோபோவின்கரங்களைப்பயன்படுத்தி அதன் எதிர்கால இலக்குகள் வெற்றிகரமான முறையில் அமைவதற்கு மென்பொருள் பதிவேற்றம் உதவியாக இருக்கும் என்கின்றனர் விஞ்ஞானிகள்.

மூளை மாற்று சிகிச்சையை வெற்றிகரமாக கியூரியோ சிற்றிக்கு செய்திருக்கும் நாசா இப்போது செவ்வாயில் தனது முதலாவது பயணத்தை இந்த ரோபோ மேற்கொள்வதற்கு ஆயத்தப்படுத்திவிட்டதாக பிரிட்டனின் டெய்லி மெயில் பத்திரிகையில் கடந்த 16 ஆம் திகதி தெரிவித்தது. இந்த ரோபோவில் உள்ள மென்பொருளை மேம்படுத்த ஆராய்ச்சியாளர்கள் 4 தினங்களைச் செலவிட்டனர். ஒருவார காலத்திற்குள் கியூரியோ சிற்றி செவ்வாயின்தரையில்தனது ஆராய்ச்சிப் பயணத்தை ஆரம்பித்து விடும் என்று (ஆகஸ்ட் 16இல்) கூறப்பட்டிருக்கின்றது. கியூரியோ சிற்றியின் 6 சில்லுகளிலும் தனித்தனியே பயணம் செய்வதற்கு ஏற்புடையதாக மோட்டர்கள் பொருத்தப்பட்டுள்ளன. சில்லுகளின் நான்கு மூலைகளிலும் இயக்கும் மோட்டர்களும் உள்ளன.

செவ்வாயில் கியூரியோ சிற்றி 687 நாட்களைச் செலவிடவுள்ளது. இது ஒரு செவ்வாய் ஆண்டாகும். மண்,பாறை என்பன பற்றி ஆராய்ச்சி நடத்தக்கூடிய இரசாயன, மண்ணியல்துறை விஞ்ஞானம் அபரிமித வளர்ச்சி கண்டுள்ள நிலையில் செவ்வாய்க்கிரகம் பற்றி அதிகளவான விபரங்களை பூலோகத்திலுள்ளவர்கள் அறிந்துகொள்ள முடியுமென்ற எதிர்பார்ப்புகள் இப்போது அதிகரித்து வருகின்றன. மேற்புறத்தில் ஊர்ந்து திரிவதற்கு கியூரியோ சிற்றி தயாராகிவிட்டது என்று இப்போது அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில், உயிர் வாழ்வுக்கான ஆதாரம் அங்கு இருக்கின்றதா என்பது பற்றிய விபரங்களை 98 வாரங்களுக்குள் நாம் பெற்றுக்கொள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செவ்வாயில் நீர் இருக்கிறதா? என்பது பற்றிய ஒரு தேடல் கியூரியோசிற்றிக்கு முக்கியமான தாகும். அங்கு நீர் இருந்தாலும் 0-10 சதம பாகைக்குள் இருக்க வேண்டும். இதற்கு மேலாக இருந்தால் கொதிநிலையை அடைய முடியாது. செவ்வாய்க் கிரக உயிர் வாழ்க்கை வெறுமனே விஞ்ஞான புனைகதையாகவே அமையும் என்று கூறும் விஞ்ஞானிகள் ஒரு சாரார் தங்கள் நிலைப் பாட்டில் உறுதியாகவே இருக்கிறார்கள்**

முடியுமென்ற எதிர்பார்ப்புகள் இப்போது அதிகரித்துள்ளன. அத்துடன் செவ்வா யின் கடந்த காலத்தைப்பற்றியும் அறிய முடியும். கியூரியோ சிற்றி தரையிறங்கிய பள்ளத்தின் அடிப்பகுதியில் இருக்கும் பாறைகள் 3.5 பில்லியன் ஆண்டுகள் பழைமை வாய்ந்தவையெனவும் மேலே செல்லச் செல்ல அந்தப் பாறைகளின் காலம்குறைந்ததாகஇருக்கலாம்என்றும் ஊகிக்கப்படுகின்ற போதும் கியூரியோ சிற்றி அனுப்பும் தகவல்கள் மூலம் இதுதொடர்பாக திட்ட வட்டமாக நாம் ஒரு தீர்மானத்திற்கு வரமுடியும்.

செவ்வாய்ப்பயணம் பற்றிய அரிய பல தகவல்கள் ஆகஸ்ட் 6 முதல் எமக்கு கிடைத்து வருகின்றன. ஒளிநாடா பிரதி மைகள் தொடக்கம் புகைப்படங்கள் வரை பல்வேறு விபரங்களை நாசா தொடர்ந்து வழங்கிக் கொண்டேயிருக்கிறது.

முன்னர் பலதடவைகள் விண்கலங்கள் அனுப்பப்பட்டிருந்த போதும் தற்போது கிடைத்துள்ளவை போன்ற தகவல்களை தாங்கள் முன்னர் பெற்றிருக்கவில்லை என கியூரியோ சிற்றியை அனுப்பிய விஞ் ஞானிகள் குழுவின் பிரதித்தலைவர் ஜோய் சிறிஸ் டெய்லிமெயிலுக்கு கூறியி ருந்தார்.

பள்ளத்தில் தரையிறங்கிய நாள்முதல் கியூரியோ சிற்றி விஞ்ஞானிகளைப் பரவசப்படுத்தி வருகிறது. 3 மைல் உயரமான மலையின் பிரதிமையையும் படம் பிடித்து அனுப்பியிருக்கிறது. அத்து டன் முதல் தடவையாக வர்ணப்படத்தை யும் இந்த ரோபோ அனுப்பியிருக்கிறது. உடனடியாகவே சுமார் 300 சுருக்கமான விபரங்களை நாசா ஒன்று திரட்டி 2 1/2 நிமிடங்களைக் கொண்ட ஒளி நாடாவைத் தயாரித்திருக்கிறது.

கியூரியோ சிற்றி தரையிறங்கிய நாள்முதலாக அனுப்பிக்கொண்டிருக்கும் நம்பிக்கை அளிக்கும் விடயமானது மனிதர்களின் செவ்வாய்க்கிரகப் பயணத் திற்கும் வழியமைப்பதாக அமையும் என்ற எதிர்பார்ப்பை அதிகரித்திருக்கிறது. கியூரியோ சிற்றி செவ்வாயில் தரையிறங் கியதை நம்பமுடியாத வெற்றியென வர்ணித்திருந்த அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, "செவ்வாய்க்கு மனிதர்கள் துணிச்சலான பயணத்தை மேற்கொள் வதற்கான அடித்தளத்தை இட்டு இருக் கிறது" என்று பாராட்டி உள்ளார்.

கியூரியோ சிற்றி செவ்வாயின் தரைகளில் ஊர்ந்து திரியும் பயணத்தை ஆரம்பிக்கவிருக்கும் நிலையில் அதன் அடுத்த இலக்கு சார்ப்குன்றின் உச்சியை அடைவதாகக் காணப்படுகிறது. தற்போது தரையிறங்கிய சேப் குழியின் தரை யிலிருந்து 5.5 கி.மீ. உயரத்தில் உள்ளது இந்த சார்ப் குன்று. இந்த சார்ப்குன்றின் அடிவாரத்தை ஆராய்ச்சி செய்வதே இந்த ரோபோவின் விஞ்ஞான ரீதியான இறுதி இலக்காகும். இதில் 10விஷேட உப கரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன. செவ்வாயின் புவியியல் வரலாற்றைத் திரட்டி அதன் மூலம் நுண்ணுயிர்கள் உயிர் வாழ்வுக்கான தன்மைகள் இருக்கின்றனவா என்பது பற்றி விஞ் ஞானிகள் ஆராய்ச்சி செய்வார்கள். 687 நாட்களில் சாதகமான விடயங்களை கியூரியோ சிற்றியால் திரட்ட முடியும் என்கின்றனர் நாசா விஞ்ஞானிகள்.

பூமியில் சகல உயிரினங்களின் வாழ் வும் காபனை அடிப்படையாகக் கொண்ட தாகும். இந்த காபனுடன் தொடர்புபட்ட நூற்றுக்கணக்கான ஏனைய விடயங் களும் உள்ளன. ஐதரசன், ஒட்சிசன், காபன் போன்றவையும் வெப்பநிலை, அமுக்கம், குளிர்போன்ற காலநிலை களும் பூமியில் உயிர்வாழ்வை சாத்திய மாக்குகின்றன. யாவற்றிலும் காபனே ஏனைய மூலகங்களுடன் இரசாயனத்




நாசாவில் விஞ்ஞானிகள் குதூகலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தொடர்புகளை உருவாக்குகின்றன. பூமியில் உயிர்வாழ்வுக்கு ஏற்புடைய நிபந்தனைகள் போன்று செவ்வாயிலும் இருக்கின்றதா என்பதே செவ்வாய்க்கிரகத்தில் இப்போது கியூரியோ சிற்றி மூலம் நடத்தி வரும் ஆராய்ச்சியாகும்.

ஆனால் காபனை அடிப்படையாகக் கொண்ட வாழ்வானது செவ்வாயைப் பொறுத்தமட்டில் அனர்த்தமே என்பது இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் பெறுபேறு என்று விஞ்ஞானியிகளில் ஒருசாரார் கருதுகின்றனர். செவ்வாயின் மேற்புற வெப்பநிலை - 55 சதம பாகையாகும். இது இரசாயன மாற்றங்களுக்கு ஏற்புடையதல்ல என்கின்றனர் அவர்கள். நெடுங்காலத்துக்கு முன்பு செவ்வாயில் தண்ணீர் இருந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. ஆனால் இப்போது நீர் இருப்பதற்கான குறிகள் இல்லை. அங்கு நீர் இருக்கிறதா என்பது பற்றி ஒரு தேடல் கியூரியோ சிற்றிக்கு முக்கியமானதாகும். அங்கு தண்ணீர் இருந்தாலும் திரவ நிலையில் இருப்பதற்கு 0-10 பாகைக்குள் இருக்க வேண்டும். இதற்கு மேலாக இருந்தால் கொதிநிலையை அடையமுடியாது.

மேலும் செவ்வாயின் ஈர்ப்பு சக்தியானது பூமியிலும் பார்க்க காற்பங்கே.



அதனால் நைதரசன், ஒட்சிசன், காபனீரொட்சைட் போன்ற வாயுக்களை அங்கு சேகரித்து வைக்க முடியாது. அத்துடன் சூரிய ஒளிப்பிளம்புகளுக்கு செவ்வாயில் காந்தப்புலமும் கவசமாக அமையாது என்று விஞ்ஞானிகள் கூறுவதுடன், காபனை அடிப்படையாகக் கொண்ட



செவ்வாய்க்கிரக உயிர் வாழ்க்கை வெறுமனே விஞ்ஞானப் புனைகதையாகவே அமையுமென விஞ்ஞானிகளில் ஒரு சாரார் கூறுகின்றனர்.

காபனை அல்லது நீரை அடிப்படையாகக் கொண்ட உயிர் வாழ்வு இல்லாத நிலையில் சிலிக்கன் அல்லது அமோனியாவை அடிப்படையாகக் கொண்ட வாழ்வு பற்றிய ஆராய்ச்சியை மட்டுமா இந்த கியூரியோசிற்றியால் மேற்கொள்ள முடியும்? என்ற கேள்வி இங்கு எழுகிறது.

எது எவ்வாறாக இருப்பினும் இந்த வருடம் குறுகியகால இடைவெளியில் அறிவியல்துறையில் இரு அசாதாரணமான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. சேர்ன் விஞ்ஞானிகள் குழுவின் ஹிக்ஸ்போஷன் அல்லது கடவுளின் துணிக்கை ஆராய்ச்சியில் எட்டப்பட்டுள்ள வெற்றி முதலாவதாக அமைகிறது. இப்போது கியூரியோசிற்றியின் வெற்றிகரமான செவ்வாய்ப் பயணம் இடம் பெற்றிருக்கிறது.


செவ்வாயில் காபன், நைதரசன், ஒட்சிசன் இரும்பு குறித்து கியூரியோசிற்றி கண்டுபிடித்தால் 2.5 பில்லியன் டொலர் செலவிடப்பட்டமை உண்மையில் பயனுள்ளதாக அமையும்.

கடந்த இருவாரங்களாக கியூரியோ சிற்றி அனுப்பிக்கொண்டிருக்கும் தகவல்கள் திட்டவட்டமான தீர்மானத்தை எட்டக்கூடியதாக இல்லாதபோதிலும் அறிவியல் தேடலுக்கு உற்சாகத்தை அளிக்கின்றது என்பதில் சந்தேகமில்லை. ■


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் அதிவேக மனிதன்

நடராஜ விநாயகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனிதகுலம் முன்னென்றுமே கண்டிராத வியத்தகு ஓட்டவீரர் ஒருவரை இந்த உலகம் பெற்றிருக்கிறது. மனிதனால் எந்தளவு தூரம் வேகமாக ஓடமுடியுமென்பதை உசைன் போல்ட் நிரூபித்து வருகிறார். இவருக்குப் பின்னர் வரும் எவராவது இவரது சாதனையை முறியடிப்பாரா என்ற கேள்வியும் எழத் தொடங்கியுள்ளது.

உலகின் அதிவேக மனிதனின் வேகமும் ஏதோவொரு வகையில் மட்டுப்படுத்தப்பட்டது. 1984இல் லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில் அமெரிக்காவின் கார்லூயிஸ் 100 மீற்றரை 9.99 செக்கனில் ஓடி முடித்தபோது, அதுதான் உலகில் அதிவேக மனிதனின் அதிவேகமாயிருந்தது. ஆனால் 20 வருடங்களின் பின் அந்தத்தூரத்திற்கான அதிவேகம் 9.58 செக்கன் ஆகிவிட்டது. இந்த வேகத்தை 2009இல் ஜேர்மனியின் பேர்லினில் உசைன் போல்ட் படைத்தார். இந்த நேரத்தை இம்முறை ஒலிம்பிக்கில் எவராவது உடைத்துவிடலாமென்ற எதிர்பார்ப்பு நிலவிய போதும் அது சாத்தியப்படவில்லை.

ஒலிம்பிக் என்பது உலகின் தலைசிற ந்த வீரர்கள் களமிறங்கும் அரங்கம். இதனால் இங்கு ஒவ்வொரு போட்டியும் சாதனைக்குரியது. அதுவும் ஒலிம்பிக்கில் தடகளமென்றால் விறுவிறுப்புக்கு என்றுமே பஞ்சமிருந்ததில்லை. அதிலும் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத்திற்கு எப்போதுமே தனிமவுசு உண்டு. இதுதான், உலகின் அதிவேக மனிதன் யார்? என்பதை நிர்ணயிக்கும் போட்டியாகும். கண்ணிமைக்கும் நேரத்தில் முடிந்துவிடும் இப்போட்டியில், வில்லிலிருந்து புறப்பட்ட அம்பென வீரர்கள் பாய்ந்து செல்வதைப் பார்ப்பது, ரசிகர்களுக்கு உண்மை யிலேயே பெரும் திரில்லாக இருக்கும்.

லண்டன் ஒலிம்பிக்கில் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டம் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. இதில், கடந்த ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற உசைன் போல்ட், உலகச் சாம்பியனும் உசைன் போல்டின் சக நாட்டவருமான யோகன் பிளேக், அதே நாட்டவரான அசபா பாவெல், அமெரிக்க நட்சத்திர வீரரும் 2004 ஒலிம்பிக் சாம்பியனான ஜஸ்ரின் காட்லின், டைசன் கே ஆகிய ஜாம்பவான்கள் இறுதிச்சுற்றுக்கு தகுதி பெற்றிருந்ததால் ரசிகர்களின் எதிர்பார்ப்பு மேலும் அதிகரித்திருந்தது. இதில் காட்லின், ஊக்க மருந்து பயன்படுத்தியதற்காக நான்கு ஆண்டு தடை விதிக்கப்பட்டு மீண்டும் களமிறங்கியிருந்தார்.

உசைன்போல்ட் கடந்த ஒலிம்பிக்கில் தங்கம் வென்றிருந்தாலும் இம்முறை தங்கம் வெல்லுவாரா என்ற கேள்வி எழும்பியிருந்தது. இதைவிட ஜமேக்காவில் கடந்த ஜூலையில் ஒலிம்பிக்குக்கான தெரிவுப் போட்டியில் 100 மீற்றர், 200 மீற்றர் இரண்டிலும் சக வீரரான யோகன் பிளேக்கிடம் அடுத்தடுத்து தோற்று பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100 மீற்றரில் தோற்று 200 மீற்றரிலாவது வென்றிருந்தால் போல்டின் திறமை குறித்து சந்தேகம் எழுந்திருக்காது. ஆனால் இரு தெரிவுப்போட்டியிலும் இவர் தோற்றதால் ஒலிம்பிக்கில் என்ன நடக்கும் என்ற ஆவல் முழு உலகையும் ஆக்கிரமித்திருந்தது.

இதேபோல் தசைநார் காயத்தாலும் போல்ட் அவதிப்பட்டு வந்தார். இதற்காக தீவிர சிகிச்சையும் பெற்றிருந்தார். இந்தக் காரணங்களால் உசைன்போல்டால் சாதிக்க முடியுமா என்ற கேள்வியை விமர்சகர்கள் எழுப்பி வந்ததுடன், யோகன் பிளேக் குறித்து பலரும் கவனம் செலுத்தத் தொடங்கினர். இவையெல்லாவற்றையும் போல்டும் கவனித்து வந்ததுடன், சிறப்புப் பயிற்சிகளைப் பெற்று தன்னை நன்கு தயார்படுத்தியும் இருந்தார். அதே நேரம் கடந்த வருடம் ஆகஸ்ட மாதம் டேகுவில் நடந்த உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில், உசைன் போல்ட் 100 மீற்றர் ஓட்டத்தை தவறுதலாகத் தொடங்கியதால் அப்போட்டியில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டுமிருந்ததை ரசிகர்கள் மறந்திருக்கவில்லை.

இந்த நிலையில் ஒலிம்பிக் 100 மீற்றர் ஓட்டத்தில் இறுதிப்போட்டி லண்டன் ஒலிம்பிக் மைதானத்தில் 80 ஆயிரம் ரசிகர்களுக்கு மத்தியில் நடைபெற்றது. உசைன்போல்ட் உட்பட 8 வீரர்கள் களமிறங்கினர். ஓட்டம் தொடங்கியது. தனது ஓட்டத்தை சற்று தாமதமாகவே போல்ட் தொடங்கினார். முதல் 50 மீற்றர் தூரம் சற்றுப்பின்தங்கிய உசைன்போல்ட், அதன் பிறகு மெல்ல மெல்ல சிறுத்தையாக சீறிப்பாய்ந்தார். இறுதியில் வேகத்தை தீவிரப்படுத்தி சகவீரரான யோகன் பிளேக் உள்ளிட்டோரை முந்திச் சென்று 9.63 விநாடிகளில் 100 மீற்றரைக் கடந்து தங்கப் பதக்கத்தை தட்டிச் சென் றார்.

9.63 செக்கனில் இலக்கைக் கடந்ததன் மூலம் அவர் புதிய ஒலிம்பிக் சாதனையையும் படைத்தார். 2008 சீனாவின் பீஜிங்கில் நடந்த ஒலிம்பிக்கில் 9.69 செக்கனில் ஓடி தங்கம் வென்றிருந்தார். தனது முந்திய ஒலிம்பிக் சாதனையை லண்டன் ஒலிம்பிக்கில் அவர் முறியடித்துள்ளார். (இதைவிட இந்தத் தூரத்தை 9.58 விநாடிகளில் ஓடி உலகசாதனையையும் ஏற்கனவே இவர் படைத்தும் உள்ளார்). போல்ட்டின் சகாவும் உலகச் சாம்பியனும் இந்த ஒலிம்பிக்கில் போல்ட்டை பின்னுக்குத் தள்ளுவாரென எதிர்பார்க்கப்பட்டவருமான பிளேக் 9.75 செக்கனில் ஓடி 2ஆம் இடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தையே கைப்பற்றினார். 2004 இல் ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற ஜஸ்டின் காட்லின் (அமெரிக்கா) வெண்கலப்பதக்கத்தையே வென்றார்.

ஒலிம்பிக்கில் 100 மீற்றர் ஓட்டத்தில் தொடக்கம், முடிவு இரண்டுமே முக்கியம். குறுகிய தூரம் என்பதால் இதன் வெற்றியைப் பெரும்பாலும் தொடக்கமே தீர்மானிக்கும். ஆனால் 100 மீற்றர் ஓட்டத்தில் வெற்றிபெற்ற பின்னர், தொடக்கம் பற்றி சிந்தித்ததை விட முடிவு எப்படியிருக்கவேண்டும் என்றே தான் சிந்தித்ததாகவும், தெரிவுப்போட்டிகளில் சகாவான பிளேக்கிடம் தோல்வியடைந்ததால் அந்தத் தோல்விகளே தனது கண்களைத் திறந்ததாகவும் கூறினார். மேலும், வெள்ளிப்பதக்கம் வென்ற பிளேக் தனது வெற்றிபற்றி கூறுகையில், உசைன் போல்ட்டுக்கு அடுத்ததாக உலகின் அதிவேக மனிதன் என்ற பட்டம் கிடைத்திருப்பது பெரும் கௌரவமாக இருப்பதாகக் கூறினார்.

தெரிவுப்போட்டியில் பிளேக்கிடம் தோற்றபோது எழுந்த விமர்சனங்கள் உசைன் போல்டை கடுமையாகப் பாதித்திருந்தது. ஒலிம்பிக்கில் 100 மீற்றர், 200 மீற்றரில் வென்று இந்த விமர்சனங்களுக்கு பதிலடி கொடுக்கவேண்டுமென்ற முனைப்பில் போல்ட் இருந்தார். 100 மீற்றர் வெற்றியின் பின் போல்ட் மேலும் கூறுகையில், "இந்தப் போட்டியில் நான் வெற்றிபெறப்போவதில்லை என நிபுணர்கள் பலர் கூறியிருந்தனர். இது பற்றி மக்களும் அதிகளவில் பேசினர். எனினும் 100 மீற்றரில் பெற்ற வெற்றியின் மூலம் இன்னமும் உலகின் முதல்தர வீரர் நான் தான் என்பதை நிரூபித்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது."

"தடகளத்தில் வாழும் ஜாம்பவானாக வேண்டுமென்பது தான் எனது குறிக்கோள். 100 மீற்றர் ஓட்டத்தில் தங்கம் வென்றதன் மூலம் அந்த லட்சியத்தை அடையும் முயற்சியில் ஒரு அடி நெருங்கியிருக்கிறேன். இன்னும் ஒரு அடிதான் மிகுதியுள்ளது. 200 மீற்றர் ஓட்டத்தில் வெற்றிபெறும் போது ஜாம்பவானாகி விடுவேன். இதனால் 200 மீற்றர் ஓட்டத்தை ஆவலுடன் எதிர்பார்த்திருப்ப"-தாகக் கூறினார். 200 மீற்றர் ஓட்டத்தில் போல்ட் ஏற்கனவே உலகசாதனை படைத்திருந்தார். 19.19 செக்கனில் இந்தத் தூரத்தை ஓடி முடித்து இந்தச் சாதனையைப் படைத்தார். மேலும் 100 மீற்றர் ஓட்டத்தை விட 200 மீற்றர் ஓட்டத்தைத்தான் போல்ட் பெரிதும் விரும்புவார்.

போல்ட் எதிர்பார்த்தது போல் 200 மீற்றர் ஒலிம்பிக் போட்டியில் தகுதிச் சுற்றிலும் அரை இறுதியிலும் முதலிடங்களைப் பெற்று இறுதிச் சுற்றுக்கு தகுதிபெற்றார். 80 ஆயிரம் ரசிகர்கள் முன்னிலையில் இது நடந்தது. கோடிக் கணக்கான ரசிகர்கள் தொலைக்காட்சிகளின் முன்னால் காத்திருந்தனர். 100 மீற்றரில் போல்ட் தங்கம் வென்றதால் 200 மீற்றரிலும் அவர் தங்கம் வென்று விடுவார் என்ற நம்பிக்கை ரசிகர்கள் மத்தியில் ஏற்பட்டிருந்தது. இறுதிச்சுற்றில் களத்தில் 8 பேர் தயாராகியிருந்தாலும் எல்லோர் பார்வையும் போல்ட் மீது பதிந்திருந்தது. அதற்கேற்ப போல்ட் றொக்கட் வேகத்தில் சீறிப்பாய்ந்து சென்றார். தனக்குப்பிடித்த ஏழாவது ஓடுபாதையில் இருந்தே போல்ட் பறந்தார்.

இதிலும் சகவீரர் பிளேக், போல்ட்டுக்கு கடும் சவாலாய் இருந்தார். ஆனாலும் போல்ட் மிக அபாரமாக ஓடினார். 19.32 செக்கனில் 200 மீற்றர் தூரத்தைக் கடந்து முதலிடத்தைப் பிடித்து தங்கத்தை தனதாக்கினார். அவரது சகநாட்டவரான யோகன் பிளேக் 19.44 செக்கனில் ஓடி வெள்ளிப்பதக்கத்தையும் வார்ரென் வெய்ன் 19.84 செக்கனில் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். உசைன் போல்ட் இதைவிட விரைவாக ஓடி இலக்கை கடந்திருக்கலாம். ஆனால் தனக்கு அடுத்ததாக வரும் பிளேக் எங்கு வருகிறார் எனப் பார்த்தபடி கடைசி 10 மீற்றர் தூரம் மெதுவாக ஓடியதால் 0.02 செக்கனில் புதிய ஒலிம்பிக் சாதனையைத் தவறவிட்டார். எனினும் இந்த வெற்றி அவரைத் தடகள ஜாம்பவானாக்கியுள்ளது.

இந்த வெற்றிக்குப் பின் போல்ட் கூறுகையில், "இந்த ஒரு பதக்கமும் எனக்கு அவசியமாய் இருந்தது. இந்த வெற்றியின் மூலம் தடகளத்தில் இப்போது நானொரு ஜாம்பவானாகிவிட்டேன். இதைப்போல் இப்போதுள்ள வீரர்களில் சிறந்த வீரரும் நான் தான். இனி நிரூபிப்பதற்கு என்னிடம் எதுவுமில்லை. சிறந்த ஓட்டவீரர் என்பதை இந்த உலகிற்கு காட்டிவிட்டேன். அந்த மகிழ்ச்சியை இப்போது அனுபவித்துவருகிறேன். நான் எனது அனைத்து இலக்குகளையும் வெற்றிகரமாக அடைந்துவிட்டேன். அடுத்த இலக்கை நிர்ணயிப்பது குறித்து ஆற அமர இருந்து நிதானமாக யோசிக்க வேண்டும்."

"தற்போதைக்கு ஓய்வுபெறமாட்டேன். தடகளத்தை மிகவும் நேசிக்கிறேன். 30 வயதை எட்டும் போது ஓய்வு குறித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திக்கலாம். இப்போது எனக்கு 25 வயது (ஆகஸ்ட் 21 ஆம் திகதி 26 ஆவது பிறந்தநாள்) தடகளம் எப்போதும் மிகவும் கடினமானது. யோகன் பிளேக் இப்போது 19.4 செக்கனில் இலக்கை எட்டுகிறார். அடுத்த 4 வருடத்தில் அவர் இன்னும் வேகமாக ஓடுவார். அவர் அதிவேகமாக ஓடத்தொடங்கும் போது, நான் இதிலிருந்து விலக விரும்புகிறேன்.''

2016 இல் பிரேசிலின் ரியோடி ஜெனீரோவில் நடைபெறும் ஒலிம்பிக்கில் பங்கேற்பது கடினமாக இருக்கும். பிளேக், வார்ரென் வெய்ர் இருவருக்கும் தற்போது 22 வயதாகிறது. அடுத்த ஒலிம்பிக்கில் அவர்களது வயது 26 ஆக இருக்கும். அப்போது எனது வயது 30 ஆக உயர்ந்துவிடும். வாழ்க்கையில் எல்லாமே நடக்கக்கூடியதொன்றுதான். என்றாலும், என்னைப்பொறுத்தவரை அடுத்த ஒலிம்பிக் என்பது கடினமாக இருக்கப் போகிறது'' என்றார்.


இந்த நிலையில் ஒலிம்பிக்கில் 4x100 மீற்றர் அஞ்சலோட்டம் நடைபெற்றது. இதில் ஜமேக்கா, அமெரிக்கா, பிரான்ஸ், கனடா, ஜப்பான், ரினிடாட், நெதர்லாந்து, அவுஸ்திரேலியா அணிகள் பங்கேற்றன. இதில் உசைன்போல்ட், யோகன் பிளேக், மைக்கல் பிராட்டர், நெஸ்டா கார்ட்டர் ஆகியோரடங்கிய ஜமேக்கா அணி 36.84 செக்கனில் இந்தத் தூரத்தைக் கடந்து தங்கம் வென்றது. இதன் மூலம் இந்த ஒலிம்பிக்கில் போல்ட் 3ஆவது தங்கம் வென்று புதிய வரலாறும் படைத்தார். ஜமேக்கா அணி இந்தத் தூரத்தை 36.84 செக்கனில் கடந்ததன் மூலம் புதிய உலக சாதனை படைத்தது. இதற்கு முன் கடந்த ஆண்டு உலக சாம்பியன்ஷிப் போட்டியில் 37.04 செக்கனில் 4x100 மீற்றரை இந்த அணி கடந்ததே உலக சாதனையாக இருந்தது.

ஒலிம்பிக்கில் 4x100 மீற்றரில் ஜமேக்கா அணி உலக சாதனை படைக்க முக்கிய பங்குவகித்தவர் போல்ட். கடைசி 100 மீற்றர் தூரத்தை அவர் தான் ஓடினார். அவரது அதிவேக ஓட்டம் மூலம் புதிய உலகசாதனை படைக்க முடிந்தது. 4ஆவது 100 மீற்றரில் போல்ட் ஓடத்தொடங்கும்போது அமெரிக்கவீரரும் போல்டும் ஒரேநிரையில் இருந்தனர். போல்டின் வேகமான ஓட்டத்தின் மூலமே உலக சாதனை படைக்க முடிந்தது. வெள்ளிப்பதக்கம் வென்ற அமெரிக்கா 37.04 செக்கனில் ஓடியது. ரினிடாரட் 38.12 செக்கனில் ஓடி வெண்கலப் பதக்கம் வென்றது.

2008 ஆம் ஆண்டு பீஜிங் ஒலிம்பிக்கில் உசைன்போல்ட் 100 மீற்றர், 200 மீற்றர், 4x100 மீற்றர் அஞ்சலோட்டத்தில் தங்கப்பதக்கம் வென்றார். இம்முறை ஒலிம்பிக்கிலும் அதேபோல் மேற்படி 3 போட்டியிலும் தங்கம் வென்று புதிய சாதனை படைத்துள்ளார். ஒரே ஒலிம்பிக்கில் 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டத்தில் உசைன் போல்ட், அமெரிக்காவின் ஜெஸிஒவன்ஸ் (1936), கார்ல் லூயிஸ் (1984) உட்பட 9 பேர் தங்கம் வென்று சாதித்துள்ளனர். ஆனால் ஒலிம்பிக்கின் 100 மீற்றர், 200 மீற்றர் மற்றும் 4x100 மீற்றரில் தொடர்ந்து இருமுறை தங்கம் வென்ற (மொத்தம் 6 தங்கம்) முதல் வீரர் என்ற மகத்தான சாதனையை படைத்தவர் உசைன் போல்ட்தான்.


அமெரிக்காவின் கார்ல்லூயிஸ் 1984இல் லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில் 100 மீற்றர், 200 மீற்றர் போட்டியில் தங்கம் வென்றார். அடுத்து 1988 இல் சியோலில் நடந்த ஒலிம்பிக்கில் 100 மீற்றரில் மட்டுமே தங்கம் வென்றார். 200 மீற்றரில் வெள்ளிதான் கிடைத்தது. ஆனால் உசைன் போல்ட்டோ 100, 200, 4x100 என 3இலும் அடுத்தடுத்து இரு ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற ஒரேவீரர் என்ற அசைக்க முடியாத சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

1972 மற்றும் 1976 இல் ஒலிம்பிக்கில் பின்லாந்து வீரர் லஸ்சிவிரென் 5000 மீற்றர், 10,000 மீற்றர் ஓட்டத்தில் அடுத்தடுத்து தங்கம் வென்றார். அவருக்குப் பின் தற்போது முதன்முறையாக உசைன்போல்ட் 100 மீற்றர், 200 மீற்றர், 4x100 மீற்றரில் தொடர்ந்து 2 ஒலிம்பிக்கில் 6 தங்கம் வென்று முத்திரை பதித்துள்ளார். இது மிகப்பெரும் சாதனையாகும். இந்தச் சாதனை அடுத்து வரும் ஒலிம்பிக்குகளில் முறியடிக்கப்படும் வாய்ப்பு குறைவாகவே உள்ளது. ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'காலச்சுவடான ஒற்றையடிப்பாதை' 1968-2012



வ.ஐ.ச.ஜெயபாலன்

## பாலி ஆறு நகர்கிறது



அங்கும் இங்குமாய்
இடையிடையே வயல் வெளியில்
உழவு நடக்கிறது
இயந்திரங்கள் ஆங்காங்கு
இயங்குகின்ற ஓசை
இருந்தாலும்
எங்கும் ஒரே அமைதி

ஏதுமொரு ஆர்ப்பாட்டம்
இல்லாமல் முன் நோக்கி
பாலி ஆறு நகர்கிறது.
ஆங்காங்கே நாணல்
அடங்காமல் காற்றோடு
இரகசியம் பேசி
ஏதேதோ சலசலக்கும்.
எண்ணற்ற வகைப் பறவை
எழுப்பும் சங்கீதங்கள் .
துள்ளி விழுந்து
'துழும்' என்னும் வரால்மீன்கள்.

என்றாலும் அமைதியை
ஏதோ பராமரிக்கும்
அந்த வளைவை அடுத்து
கருங்கல் மறைப்பில்
அடர்ந்துள்ள நாணல் அருகே
மணற் கரையில் ஒரு மருங்கம்
ஓங்கி முகடு கட்டி
ஒளி வடிக்கும்
மருத மர நிழலில்
எங்கள் கிராமத்து
எழில் மிகுந்த சிறு பெண்கள்
அக்குவேறு ஆணிவேறாய்
ஊரின் புதினங்கள்

ஒவ்வொன்றாய் ஆராய்ந்து
சிரித்து கேலி செய்து
சினந்து
வாய்ச் சண்டையிட்டு
துவைத்து
நீராடிக் களிக்கின்றார்.

ஆனாலும்
அமைதியாய்ப்
பாலி ஆறு நகர்கிறது
அந் நாளில்
பண்டார வன்னியனின்
படை நடந்த அடிச்சுவடு இந்நாளும்
இம்மணலில்
இருக்கவே செய்யும்
அவன்
தங்கி இளைப்பாறி
தானைத் தலைவருடன்
தாக்குதலைத் திட்டமிட்டு
புழுதி படிந்திருந்த
கால்கள் கழுவி
கைகளினால் நீரருந்தி
வெள்ளையர்கள் பின் வாங்கும்
வெற்றிகளின் நிம்மதியில்

சற்றே கண்ணயர்ந்த
தரை மீது அதே மருது
இன்றும் நிழல் பரப்பும்
அந்த வளைவுக்கு அப்பால்
அதே மறைப்பில்
இன்னும் குளிக்கின்றார்
எங்களது ஊர்ப் பெண்கள்
ஏதுமொரு
ஆர்ப்பாட்டம் இல்லாமல்
பாலி ஆறு நகர்கிறது.

1968
பண்டார வன்னியன் ஈழத்து தமிழ்
வன்னிப் பகுதியைப்
பரிபாலித்த குறுநில மன்னன். 1803
இல் கச்சிலை மடு
போரில் வெள்ளையரால்
கொல்லப்பட்டவன்.

## இளவேனிலும் உழவனும்



காட்டை வகிடுபிரிக்கும்
காலச்சுவடான
ஒற்றையடிப்பாதை.
வீடுதிரும்ப
விழைகின்ற
காளைகளை
ஏழை ஒருவன்
தோளில்
கலப்பை சுமந்து
தொடர்கிறான்.

தொட்டதெல்லாம் பொன்னாக
தேவதையின் வரம்பெற்ற
மாலைவெய்யில்
மஞ்சட்பொன் சரிகையிட்ட
நிலபாவாடை நீளவிரிக்கிறது:
இதயத்தைக் கொள்ளையிட
வண்ணத்துப் பூச்சிகள்
வழிமறிக்கும்
காட்டுமல்லிகைகள்
காற்றையே தூதனுப்பி
கண்சிமிட்டும்.

அழகில்
கால்கள் தரிக்கும்.
முன்நடக்கும் எருதுகளோ
தரிக்கா.
ஏழையவன்
ஏகும் வழி நெடுந்தூரம்.
1970

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெடுந்தீவு ஆச்சிக்கு



அலைகளின்மீது
பனைக்கரம் உயர
எப்போதும்
இருக்கிற
என்னுடைய ஆச்சி

காலம் காலமாய் உன்னைப் பிடித்த
பிசாசுகள் எல்லாம் தோற்றுப் போயின
போத்துக்கீசரின் எலும்புகள் மீதும்
தென்னம் தோப்பு
நானும் என் தோழரும்
செவ்விளநீர் திருடிய தென்னந் தோப்பு.

தருணங்களை யார் வென்றாலும்
அவர்களுடைய புதை குழிகளின் மேல்
காலத்தை வெல்லுவாள் எனது ஆச்சி.

என்ன இது ஆச்சி
மீண்டும் உன் கரைகளில்
நாங்கள் என்றோ விரட்டி அடித்த
போத்துக்கீசரா?
தோல் நிறம் பற்றியும்
கண் நிறம் பற்றியும்
ஒன்றும் பேசாதே
அவர்கள் போத்துக்கீசரே

எந்த அந்நியருக்கும் நிலை இல்லை
எனது ஊர் நிலைக்கும் என்பதைத்தவிர
எதனை எண்ணி நான் ஆறுதல்
அடைவேன். நாளை இந்தப்
போத்துக்கீசரும் புதைய அங்கு
கரும்பனைத் தோப்பெழும் என்பதைத்
தவிர எதனை எண்ணி நான் ஆறுதல்
அடைவேன்.

ஆச்சி
என் இளமை நாள் பூராக
ஆடியும் பாடியும் கூடியும் வாடியும்
தேடிய வாழ்வெலாம்


ஆமை, நான் உனது கரைகள் நீழ
புதைத்து வந்தேன்.
என்னுடன் இளநீர் திருட
தென்னையில் ஏறிய நிலவையும்
என்னுடன் நீர் விளையாட
மழை வெள்ளத்துள் குதித்த
சூரியனையும்
உனது கரைகளில் விட்டு வந்தேனே
என் சந்ததிக்காக.

திசகாட்டியையும் சுக்கானையும்
பறிகொடுத்த மாலுமி நான்
நீர்ப் பாலைகளில்
கனவு காண்பதுன் கரைகளே ஆச்சி

நீ நிலைத்திருப்பாய் என்பதைத் தவிர
எதைக் கொண்டு நான்
மனம் ஆற என் ஆச்சி

நெடுந்தீவு எனது மூதாதையரின் தீவு.
இன்று இராணுவத்தின்
பிடியில் சிக்கியுள்ளது. விட்டு
விடுதலையாகி நின்ற இந்த தனித்ததீவு
பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில்
போத்துக்கீசரால்
கைப்பற்றப்பட்டது.

## பூவால் குருவி



நெஞ்சுக்குள் தொலையாதிருந்து
ஒரு சிற்றாறாய் ஊருகின்ற
என் முதல் காதல் பெட்டை
ஒரு வழியாய் உன்சேதி அறிந்தேனடி.
பேய்கள் கிழித்தெரிக்கும் எம்முடைய
தேசத்தில்
வன்னிக் கிராமத் தெருவொன்றில்
வெள்ளிச் சருகை மினுங்கும் தலையும்
பொன் சருகை கலையா முகமும்
இன்னும் ஓயாமல் முந்தானை திருத்த
எழும் கையுமாய்
போனாயாம் உந்தன் பூப்படைந்த
பெண்ணோடு
போட்டிச் சிறு நடையில்.
அது என்ன போட்டி.

காவலிலே உன் அன்னை
தோற்றதறிவாய்.
அவளிடத்தில் உன்பாட்டி
தோற்றதையும் நீ அறிவாய்.
என்றாலும் வாழ்வின் சுழற் தடத்தில்
இன்று நீ அன்னை.
நீ தோற்க வாழ்வு மேலும் ஒரு வெற்றி
பெறும்.
ஆனாலும் நீ எனக்கு இன்னும்
சிறுக்கிதான்.
இன்னும் விடாயும் அச்சமுமாய்
மிரண்டடிக்கும்
குளக்கரையின் மான் குட்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானுமுன் நெஞ்சத்தில் சிற்றாறா.
இன்னும் காலில் விழுந்து கையேந்தி
இரக்கின்ற
திருட்டுச் சிறு பயலா.
அஞ்சி அஞ்சி நாங்கள் அன்று
உடற் கடலில் கை நனைத்து
கால் நனைத்து
நீந்த முயன்றதெல்லாம் எண்ணில்
மேனி இன்பத் துணுக்குறுதே.

எரிகுண்டாய் வானத்தியமன்
கூரை பிரித்துன் பின்வீட்டில்
இறங்கிய நாள்
உன் முன்வீட்டுப் பிள்ளை
தொலைந்தாளாம்.
பின் ஒருநாள் ஊர் காண
காக்கி உடையோடு வந்து காட்டோரம்
பூப்பறித்து
கூந்தலிலே சூடி நடந்தாளாம்.
தெருவெல்லாம்
நீ உனது பூப்படைந்த பெண்ணின்
காவலிலே
நிழலாய் திரிகிறியாம்.
இது பெருங்காவல்.
எல்லாம் அறிந்தேன்.

எங்கிருந்தோ வந்து
நம் தெருவோர மரக்கிளையில் குந்தி
தேவதையின் கூந்தலெனத் தன் பூவால்
அசைத்த
அந்தக் குருவியைப் போல்
காணாமல் போனதடி காலங்கள்.
1996

## அம்மா



போர் நாட்களிலும் கதவடையா நம்
காட்டுவழி வீட்டின் வனதேவதையே
வாழிய அம்மா.
உன் விரல் பற்றிக் குறு குறு நடந்து
அன்றுநான் நாட்டிய விதைகள்
வானளாவத் தோகை விரித்த
முன்றிலில் நின்று எனை நினைத்தாயா
தும்மினேன் அம்மா.
அன்றி என்னை வடதுருவத்தில்
மனைவியும் மைந்தரும்
நினைந்திருப்பாரோ?

அம்மா
அழிந்ததென்றிருந்த பச்சைப் புறாக்கள்
நம் முற்றத்து மரங்களில்
மீண்டு வந்து பாடுதாம் உண்மையா?
தம்பி எழுதினான்.
வலியது அம்மா நம்மண்.
கொலை பாதகரின் வேட்டைக்
கழுகுகள் வானில் ஒலித்த போதெலாம்
உயிர் நடுங்கினையாம்.
நெடுநாளில்லை இக் கொடியவர்
ஆட்டம்.

இருளர் சிறுமிகள்
மேற்குத் தொடர்ச்சி மலையே அதிர
நீர் விளையாடும் ஆர்ப்பாட்டத்தில்
கன்னிமாங்கனி வாடையில் வந்த
கரடிக் கடுவன் பிறண்டடிக்கின்ற
கொடுங்கரை ஆற்றம் கரை
வருகையிலே
எங்கள் ஆற்றை எங்கள் காட்டை
உன்னை நினைந்து உடைந்தேன்
அம்மா.

என்னரும் தோழமைக் கவிஞன் புதுவை
உன்னை வந்து பார்க்கலையாமே.
போகட்டும் விடம்மா.
அவனும் அவனது
பாட்டுடைத் தலைவனும் மட்டுமல்ல
உன்னைக் காக்க
யானையின் மதநீர் உண்டு செழித்த நம்
காடும் உளதே கொடுங்கரை ஆறு
தமிழகம் கோயம்புத்தூர் மாவட்டத்தில்
உள்ள சிற்றாறு

## நீலம்




தோழி
காலமாய் நுரைகள்
உடைகிற மணலில்
சுவடுகள் காய
சிப்பிகள் தேடிய உலா
நினைவிருக்கிறதா?
கடலிலும் வானிலும் தொடர்கிற
நீலமாய்
நம்மிலும் ஏதோ படர்கிற தென்றேன்.
மீன் கொத்திய நாரையாய் நிமிர்ந்தாய்
உன் கண்களில் எனது பிம்பம்
அசையும்.

ஆண்டு பலவாகினும்
நரையிலா மனசடா உனக்கென்றாய்.
தோழி இளமை என்பது வாழும் ஆசை.
இளமை என்பது கற்றிடும் வேட்கை.
இளமை என்பது முடிவிலா தேடல்;
இளமை பிறரைக் கேட்டலும்
நயத்தலும்.
இளமை என்பது வற்றாத ரசனை
இளமை என்பது நித்திய காதல்.
இளமை என்பது அயராத ஆடலும்
பாடலும் கூடலும் என்றேன்.

தோழா உனக்கு எத்தனை வயசு?
தோழி எனக்கு
சாகிற வரைக்கும் வாழ்கிற வயசு
2011

## சதுரங்கம்



சிருஸ்ட்டி
வேட்கையில்
ஆனைமலைக்
காடுகள் பாடுகிற
அந்தி மாலை.
அங்கு உயிர்க்கிற மந்திரக் கம்பளத்தில்
உன்னையே சுற்றுதடி மனசு.

இது தீராத காதலடி
நீதான் கண்டு கொள்ளவில்லை.
அதோ புல்லின்கீழ் கட்டெறும்பாய்
தொலை கீழ் மூங்கிற் காடுகளுள்
ஊரும் யானைபோல
உண்மையில் என் காதலும் பெரியதடி.


காமத்தில் சூரியன்
பொன்சிந்த இறங்கி வர.
நாணிப் புவிமகள் முந்தானையாக
முகிலை இழுக்கின்றாள்.
ஆகா அப்பன் குதிருக்குள் இல்லை
என்கிற உனது நாடகம் அல்லவா இது.

ஆண் பெண்ணுக்கிடையில்
ஒரு கண்ணுக்குத் தெரியாத சதுரங்கப்
பலகை எப்போதும் விரிகிறது.

என்னோடு இன்னும் சிலரை
பந்துகளாய் எறிந்து ஏந்தி ஆடும்
வித்தைக்காரியில்தான் காதலானேன்.
அதனால் என்ன கீழே காட்டில்
ஒரு மூங்கில் புதரை மட்டுமே மேய்ந்த
யானையும் இல்லை.
ஒரு யானை மட்டும் மேய்ந்த
மூங்கில் புதரும் இல்லை.

எதுவும் செய்
ஆனால் இறுதியில் நாம் மட்டுமே
மிஞ்சவேண்டும்.
நம் மரபணுக்களில் கவிதை கோர்க்க.
2012

## நெய்தல் பாடல்



வாழிய தோழி
கடலின்மேல் அடிவானில்
கரும்புள்ளியாய் எழுதப்படும்
புயற் சின்னம்போல
உன் முகத்தில் பொற்கோலமாய்
தாய்மை எழுதப்பட்டு விட்டது.

உனக்கு நான் இருக்கிறேனடி.
இனியும் உன் ஆம்பல் கேணிக்
கண்களை
உப்புக் கடலாக்காதே.
புராதன பட்டினங்களையே மூடிய
மணல் மேடுதான் ஆனாலும்
தேர்ந்த கள்ளியான ஆமையால்க்கூட
இங்கு தன் முட்டைகளை
நெடுநாள் மறைக்க முடியாதடி.

விரைவில் எல்லாம்
அறியபடா திருந்த திமிங்கிலம்
கரை ஒதுங்கியநாள் போலாகிவிடும்
அதனால் என்னடி
இதுநம் முதுகரைக்குப் புதிசல்லவே.

அஞ்சாதே தோழி
முன்பு நாம் நொந்தழ
மணல் வீடுகளைச் சிதைத்த
பயல்தான்.
ஆனாலும் காதல் அவனை
உன் காலில் விழ வைத்ததல்லவா.
ஆளரவமுள்ள சவுக்குத் தோப்புக்குள்
முதல் முயக்கத்தின்போதுகூட
அவனிடம்
குஞ்சுக்கு மீன் ஊட்டும் தாய்ப்
பறவையின் கரிசனை இருந்ததல்லவா.

ஆறலைக் கள்வர்போல
சிங்களர் திரியும் கடற்பாலைதான்
எனினும்
நீர்ப் பறவைகள் எங்கே போவது.


இனிச் சோழர்காலம் திரும்பாது
என்பதுபோல
அவன் நகரக்கூலி ஆகான் என்பது
உண்மைதான் தோழி.
ஆனாலும் அஞ்சாதே
அவன் நீருக்குள் நெருப்பையே
எடுத்துச் செல்லவல்ல பரதவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதோ மணல் வெளியில்
முள்ளம் பன்றிகளாய் உருளும்
இராவணன் மீசையை
சிங்களக் கடற்படையென்று
மீனவச் சிறுவர்கள் துரத்துகிறார்கள்.

இனிக் கரைமாறும் கடல்மாறும்
காலங்களும் மாறுமடி.
2012

## பாலைப் பாட்டு



வேட்டையாடும்
பின்பனி இரவு அகல
புலரும் காலையில்
உன்னையே நினைந்து
உருகிக் கிடந்தேன்.

அன்பே
மஞ்சத்தில் தனித்த என்மீதுன்
பஞ்சு விரல்களாய்
சன்னல் வேம்பின்
பொற் சருகுகள் புரள்கிறது.
இனி வசந்தம் உன்போல
பூவும் மகரந்தப் பொட்டுமாய் வரும்.

கண்ணே நீ பறை ஒலித்து
ஆட்டம் பயிலும் முன்றிலிலும்
வேம்பு உதிருதா?
உன் மனசிலும் நானா?
இதோ காகம் விழிக்க முழங்குமுன்
கைப்பறை
இனி இளவேனில் முதற் குயிலையும்
துயில் எழுப்புமடி.

இடியாய் பறை அதிர
கொடி மின்னலாய் படருவாய் என்
முகில் வண்ணத் தேவதை.
உன் பறையின் சொற்படிக்கு
பிரபஞ்சத் தட்டாமாலையாய்
சிவ நடனம் தொடரும்.

காத்தவராயன் ஆரியமாலா
மதுரை வீரன் பொம்மியென்று
பிறபொக்கும் மானுடம் பாடி
காதலிலும் இருளிலும்
ஆண் பெண்ணன்றி
சாதி ஏதென மேடையை உதைத்து
அதிரும் பறையுடன்
ஆயிரம் கதைகள் பறைவாள் என் சதுரி.

என் காதல் பாடினி
திராவிட அழகின் விஸ்வரூபியாய்
நீ ஆட்டம் பயிலுதல் காண
உன் உறவினர் வீடுகள்
சிறுத்தைக் குகைகளாய் நெரியும்
தெருவில்
எப்படி வருவேன்?

வேம்பு உதிரட்டும் நீ உதிராதே
ஏனெனில் உதிராத மனிதர்களுக்கும்
உதிர்ந்த வேம்புகளுக்குமே
தளிர்த்தலும் பூத்தலும்.

நாளை நான் கிளை பற்றி வளைக்க
உன்னோடு சேர்ந்து ஊரும் கொய்து
கூந்தல்களில் சூடும் அளவுக்கு
பூப்பூவாய் குலுக்குமடி அந்த மொட்டை
வேம்பு.
தேன் சிந்துமே வாழ்வு.
2012

## குறிஞ்சிப் பாடல்

கரும் திரை அசையும்
தோற்பாவைகளாய்
நெளியும் நீல மலைத் தொடர்களின்
மேல்
முலை சிந்தச் சிந்த நிலா
நட்சத்திரக் கன்றுகளைத் தேடுது.


சொட்டும் நிலாப் பாலில்
கரையும் இருளில்
பேய்களே கால்வைக்க அஞ்சும்
வழுக்கு மலைப் பாதை
பாம்பொடு பாம்பாய் நெளிகிறது.

மின்மினிகள் துணைபோடும்
இருள் போர்த்த காட்டின் வழி நீழ
கமழும் நாவல்மரங்கள் உதிர்க்கும்
கனிக்கு
கரடிகள் அலையும் இரவில்
பூத்துக் குலுங்குது முல்லை.

ஆதிவாசிகளே அஞ்சும் வன இருளில்
வண்ணத்துப் பூச்சிகளும் உறங்கும்
இந்தக் கொடிய நள்ளிரவில்
ஏன் பூத்தாய் காட்டு முல்லை.

நான் மண்ணுக்கு பழசு கவிஞா
பொறுத்திரு என்று நகைத்த
முது முல்லை சுட்டும் திசையில்
ஆளரவம் தெரிகிறது.
என்ன பிரமையா இல்லை ஆவியா
இருக்காது பின்னே குறிஞ்சி முருகனா
துணுக்குற்றேன்.

வேல் இல்லை




கானமயில் இல்லை
கார்சட்டை சேட்டு
கையில் சிணுங்கி ஒளிருகிற செல்பேசி.
வருகிறது மனிதன்தான்.

அவன் மேகம் உறங்கும் மேலூரான்
பகலில் காட்டு யானைகள் நடுங்க
குமுக்கியில் பவனிவரும் பாகன்.
இரவெல்லாம் காதலன்.

கீழே சிறு குடியில்
தூங்காது விரகத்திலே புரண்டு
குறுஞ்சேதி தட்டுகிற ஒருத்திக்காய்
புலி விலகி கரடி ஒதுங்கி
பாம்புகள் கடந்து வருகின்ற இருளன்
போகும் வழியில்

பூ பறிப்பான் குழலிக்கு
கொட்டும் பனியிலும்
பெருமூச்சில் கனன்றபடி
வாடா வந்திடென ஓயாமல்
குறும்சேதி தட்டுகிற பாதகத்தி
பகலில்கூட இப்பாதை வரத்
துணிவாளோ

கபிலன் இல்லையே இன்று
உயிரினும் காதல் இனிதென்னும்
இந்தக் காமுகனைப் பாடுதற்கு.
2012 ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல் களரி

# காதல், காமம், சாதல்...!



வைத்தியக் கலாநிதி
எம்.கே. முருகானந்தன்



"..காதல் காதல் காதல்
காதல் இன்றேல் சாதல்" என்று பாடினான் மாகவிஞன். அதைக் கேட்டு வயது வேறுபாடின்றி மானிடர்களாகிய நாம் புளகாங்கிதம் அடைகிறோம்.

ஆம் வாழ்வின் இன்றியமையாத அம்சம்தான் காதல். எனவேதான் மனித வாழ்வில் காதலை முதன்மைப்படுத்திய அவனது கவியுள்ளத்தைப் போற்றுகிறோம். அந்தக் காதலின் உச்சமான கட்டம் கூடல் (புணர்ச்சி) எனச் சொல்லலாம். ஆனால் கூடல் காதலின் புனிதத்தை மாசுபடுத்துகிறது என மறுப்பாரும் இல்லாமல் இல்லை. இருந்தபோதும் போதையில் மயங்கியது போன்ற இன்பத்தை உளமும் உடலும் ஒன்றிய இருவரின் கூடல் கொடுக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை.

ஆனால் காதல் என்பது மனித இனத்திற்கு மட்டும் சொந்தமானது அல்லவே. விலங்குகள், பறவைகள், பூச்சி, புழுக்கள் யாவுமே காதலில் மகிழவே செய்கின்றன.

காதல் கூடல் அதற்கும் அப்பால் அடுத்து என்ன?

"கூடல் கூடல் கூடல் கூடல் உச்சத்தில் சாதல்" என்கிறார் (antechinus mouse) சுண்டெலியார். அன்ரகைனஸ் சுண்டெலி எனப்படும் இனத்தினர் அவுஸ்திரேலியாவைச் சார்ந்தவர்கள். நியுகினியா, டஸ்மேனியா ஆகிய இடங்களிலும் காணப்படுகிறார்கள்.

இவர் பிறந்து 11 மாதங்களாகும்போது பாலியல் ரீதியாகப் பருவமடைகிறார். அப்பொழுது அவரில் பாலியல் ஹோர்மோன்கள் சுரக்கின்றன. இதனால் புணர்ச்சிவேட்கைபிறந்து உச்சநிலையை அடையும். சீண்டிப் பார்த்து வேட்கை தணிக்க எமது பையன்கள் தெருக்களிலும், சந்திகளிலும் தேடியலைவது போல இவரும் இரவானதும் தனது ஏரியாவில் அலைந்து திரிவார். அடக்க முடியாதபடி கிளர்ந்தெழும் தனது பாலியல் பசியைத்தீர்க்க சோடிதேடிதவிப்புடன் திரிவார்.

இதற்குக் காரணம் அவரது உடலில் உச்ச நிலையில் சுரக்கும் பாலியல் ஹோர்மோன்கள்தான்.

மனிதர்களிலும் அவ்வாறே. ஆண்களில் testosterone பெண்களில் oestrogen ஆகிய ஹோர்மோன்கள் முக்கிய பங்களிக்கின்றன. இருந்தபோதும் மனிதர்களின் பாலியல் வேட்கைகளுக்கு ஹோர்மோன்கள் மட்டுமே காரணம் எனச் சொல்ல முடியாது. உடற் தொழில் ரீதியான, சமூக பண்பாட்டு ரீதியான, உளவியல் ரீதியான பலவும் பங்களிக்கின்றன.

பருவமடைந்த சுண்டெலியாரின் பாலியல் செயற்பாடு தினமும் இரவில் 12 மணிநேரங்களுக்கு நீடிக்கும். ஒரு நாளில் முடியாது. பாலியல் ரீதியான உடல் நெருக்கமும் உடலுறவும் நான்கு நாட்கள் வரை தொடரும். ஊண் இன்றி, உறக்கம் இன்றி நீராகாரம் கூட இல்லாது துணையோடு இணைந்து பிணைந்து திரிவார்.

இப்படியும் ஒரு காமப் பிசாசா என எள்ளிச் சிரிக்காதீர்கள்.

மனிதர்களில் இது ஏற்படுவதில்லையா? கனவில் கண்டதுபோல ஒரு பெண்ணைக் கணநேரம் காணக் கிடைத்தால்போதும். ஏதோ ஒரு ஈர்ப்பு அவளில் ஏற்படும். தற்செயலாக அவளைச் சந்திக்கவும் பேசவும் கிடைத்தால் ஏற்படும் மகிழ்ச்சிக்கு அளவு கணக்கே கிடையாது.

அந்தத் தொடர்பு மிகச் சுருக்கமானதாக இருக்கலாம். வெறுமனே கண்களால் பேசியதாகவோ, கரங்களைப் பற்றியதாகவோ அல்லது அதிகபட்சம் ஒரு முத்தம் கொடுத்ததாகவோ இருக்கலாம். மேலைநாட்டுக் கலாசாரத்தில் இது புணர்ச்சி வரையும் போகலாம். களவுப் புணர்ச்சி பற்றி சங்க இலக்கியங்கள் பேசவில்லையா?

"வெறும் கண நேரத் தொடர்பு. இது தொடரப்போவதில்லை" என உங்களுக்குள் நீங்கள் நினைத்தாலும் அவ்வாறாவதில்லை. இவள்தான் எனக்கான பெண் எனத் தோன்றும். அந்த நிகழ்வுகளின் நினைவுகளில் ஆழ்வீர்கள்.

உங்களில் மாற்றங்கள் ஏற்படும். நீங்கள் அவற்றை அவதானிக்காவிட்டாலும் ரகசியப் பொலிஸாரின் நுட்பத்துடன் நண்பர்கள் கண்டறிந்திருப்பார்கள். மற்றவர்களுடன் பேசிக்கொண்டிருக்கும்போது திடீரென கனவுலகில் ஆழ்ந்துவிடுவீர்கள். நண்பர்களுடன் கூடி உணவு விடுதிக்குச் செல்லும்போது வழமைக்கு மாறாக விரைவில் முடித்துக் கொண்டு புறப்பட ஆயத்தமாவீர்கள். பொதுவான வேலைகளில் முன்னைய ஈடுபாட்டை இழந்திருப்பீர்கள்.

"நான் காதலில் ஆழ்ந்திருக்கிறேனா?" எனவும் எண்ணத் தோன்றும். இந்த உறவை மேலும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என நினைவு ஏற்படும்.

உணர்வுகளின் முன் பகுத்தறிவு மண்டியிட்டு மறைய "அன்றிலும் பேடும் போல" என்றுமே இவளே என்துணை என அறுதி முடிவுகட்டவும் முயல்வீர்கள்.

ஆனால் உங்கள் ஆழ் மனத்துடன் நீங்கள் மனம் திறந்த உரையாடலை செய்ய முனையும்போது ஏதோவொரு தருணத்தில் நெருடல் ஏற்படும். அவளது நினைவுகளில் மூழ்கும்போது தூண்டப்படுவது உங்கள் மென்னுணர்வுகள் அல்ல, உங்கள் உடல், அதுவும் உங்கள் ஆணுறுப்பு மட்டுமே என்பது கசப்பான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையாகப் புரியும். உங்களை அலைக்கழித்தது பால் உறவு நாட்டமே அன்றி காதல் அல்ல என்பது உறைக்கும்.

உண்மையில் பாலியல் ஆர்வம் (Sexual Desire) அல்லது வேட்கை என்பது இரு நிலைப்பட்டதாக இருக்கலாம். உடலுறவு அல்லது புணர்ச்சியை நாடுதல் என்பது ஒரு வகை. ஒருவர் மீதான பாலியல் ரீதியான ஆர்வமும் கவர்ச்சியும் ஈடுபாடும் மற்றது. ஒன்று மற்றதில் முடியலாம் என்பதையும் மறுப்பதற்கில்லை.

அண்ணலும் நோக்க அவளும் நோக்க ஆழ்ந்த காதல் பிறப்பது பெரும்பாலும் காவியங்களிலும், கதைகளிலும்தான் நடக்கிறது. திரைப்படங்களிலும் இந்தப் புனித உணர்வு காட்சிப்படுத்தப்பட்ட காலம் ஒன்று இருந்தது. அத்தகைய அமர காவியங்கள் கல்லாப் பெட்டிகளை நிறைத்தன. இன்று ஒருவன் பல பெண்களைக் காதலிப்பதும், திருமணத்தின் பின் வேறொருத்தியில் மோகம் கொள்வதும் பார்வையாளரிடத்தில் சர்ச்சைகளை ஏற்படுத்தாமல் ரசிக்கப்படுகின்றன.

மீண்டும் அன்ரகைனஸ் சுண்டெலிகளின் கதைக்கு வருவோம். அவரது ஹோர்மோன்கள் அவரை விட்டு வைக்காது. புணர்ச்சி புணர்ச்சி புணர்ச்சி. வேறெந்த நினைவுமில்லாமல் அந்த நான்குநாட்களும்ஓய்வின்றித்தொடரும். இத் தொடர் செயற்பாட்டிற்கு நிறையச் சக்தி தேவை. ஆனால் அது போதியளவு அவரிடம் இல்லாததால் ஒவ்வொரு தடவையும் வலிமை படிப்படியாக நீர்த்துக் கொண்டேபோகும். நோயெதிர்ப்புச் சக்தி நலிவடையும். பலவீனமடைவார்.

இறுதியில் வரண்ட உடல் சருகோடு சருகாக கலக்க காட்டுத் தரையில் சாய்ந்து விழுவார்.

"என்ன மடைத்தனம்" "தனது உடலின் நிலையை உணராத மடைமையா? தற்கொலைக்கு ஒப்பான அப்படியொரு காமவேட்கையா" என எண்ணத் தோன்றுகிறது அல்லவா?

என்ன செய்வது!!

அதுதான் அவர்களுக்கு இயற்கை விதைத்த விதி.

எண்ணிக்கை அடங்காத ஏராளமான ஆண் அன்ரகைனஸ் சுண்டெலிகள் அவ்வாறு மரணத்தைத் தழுவுகின்றன.

அவ்வாறான விதியை அச்சிறிய மிருகங்களுக்கு இயற்கையானது ஏற்படுத்தியது ஏன்? கூர்ப்பு வளர்ச்சியின் நோக்கம் என்ன? தமது உயிரை அந்த ஆண் அன்ரகைனஸ் சுண்டெலிகள் அர்ப்பணிப்பதற்கான தேவை என்ன?

தமது எதிர்காலச் சந்ததியினர் வாழ்விடத்திற்காகவும், உணவிற்காகவும் தம்மோடு போட்டியிடுவதைத் தடுப்பதற்காக எனக் கொள்ளலாம். புணர்ச்சியின் பின் ஆண்கள் மரணிப்பது வேறு உயிரினங்களிலும் அறியப்பட்டுள்ளது. ஒரு வகைச் சிலந்தியினத்தில் Australian Redback Spider பெண் சிலந்தியானது தன்னுடன் கூடும் ஆண் சிலந்தியைத் தின்று தீர்த்துவிடுகிறது. அதேபோல வெட்டுக்கிளியை ஒத்த praying mantises தன்னுடன் கூடும் ஆணைக் கொன்று தின்றுவிடுகிறது.

தேனீயில் ஆண் உறவு கொண்டு விந்து வெளியேறும்போது அதன் ஆண் குறியானது பெண்ணின் யோனிக்குள் வெடித்துச் சிதறி மரணம் நிகழ்கிறது.

ஆழ்கடலில் வாழும் angler fish மீனின் கதை மிகவும் வித்தியாசமானது. ஆண் மீனானது மிகவும் சிறியது. புணர்ச்சியின்போது அது பெண்ணின் உடலைக் கடித்து அதன் உடலுக்குள் நுழைந்து விடுகிறது. அதற்கான போஷனை, நீர் ஆகியன பெண்ணின் உடலில் இருந்தே கிடைக்கும். ஆனால் அது வாழ்வு அத்தோடு முடிந்துவிடும். பெண்ணின் உடலுக்குள்ளேயே சிதைந்து அழிந்து போய்விடும்.

"காதலிக்காமலே இருப்பதை விடக் காதலித்துத் தோல்வியுறுவது மேலானது" *It is better to have loved and lost than never to have loved at all* என ஆங்கிலத்தில் சொல்வார்கள். இந்த ஆண் ஜீவராசிகளின் கதைகளைக் கேட்கும்போது *It is better to have loved and died than never to have loved at all* என மாற்றிச் சொல்லலாம் போலிருக்கிறது.

நல்ல காலம் மனித இனத்தில் ஆண்களுக்கு, அன்ரகைனஸ் (antechinus mouse) சுண்டெலி போல தமது வாரிசுகளுடன் அவ்வாறானதோர் போட்டியிட வேண்டிய தேவை இல்லாமல் போய் விட்டது. இல்லையேல் புணர்ந்தவுடன் கதிமோட்சமடையும் அவலம் ஆண்களுக்கும் நேர்ந்திருக்கும்.

உலகளாவிய ரீதியில் சனத்தொகைப் பெருக்கம் துரிதமாக நிகழ்கிறது. பராமரிப்பு அதிகம் தேவைப்படும் முதியோர்களின் தொகையும் ஆரோக்கியமான விகிதாசாரத்தை மீறி வேகமாக அதிகரிக்கிறது. இவை கவனத்தில் கொள்ள வேண்டியவையாகும். அதே நேரத்தில் இயற்கை வளங்கள் அருகிக்கொண்டே போகின்றன. இந்நிலையில் கிடைக்கும் வளங்களைப் பகிர்வதில் தங்களிடையே நாடுகள் சர்ச்சைப்படுவது போலவே குடும்பங்களிலும் பரவுவதற்கான சாத்தியங்கள் அதிகம். தந்தையும் மகனும் உணவிற்காக மூர்க்கமாகச் சண்டையிட்டு மடிவதைக் கற்பனை பண்ணிப் பாருங்கள்.

**பரிதாபம்தான்!**

ஆனால் பிறக்கப்போகும் தன் மகனின் நலத்திற்காக, தான் புணர்ந்தவுடனேயே தன்னைப் பலிகொடுக்கும் தாராள சிந்தனை எந்த மனிதனுக்காவது வருமா?

தன்னுயிரைப் பலிகொடுக்க வேண்டும் என்றில்லை. தன் உறவுகளை, தனது சமூகத்தை, சூழலை, இயற்கையை அழிக்கும் செயற்பாடுகளில் இறங்காமல் இருத்தலே போதுமானது.

அதன் முதற்படியாக ஆண், பெண் உறவுகளை வெறும் காமக் கண்ணோட்டத்துடன் அணுகாமல் புரிந்துணர்வுடன் கூடிய உறவுகளாக வளர்ப்பது நல்லதாக இருக்கும். அத்தகைய உறவு காதலாக மட்டுமே இருக்க வேண்டும் என்றில்லை. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசிப் பக்கம்

பேராசிரியர் சோ.சந்திரசேகரம்



## தீராத கல்விப்பிரச்சினைகள்

இன்று இலவசக்கல்வி, தாய்மொழிக்கல்வி, கலைத்திட்ட மாற்றங்கள், கல்வி நிருவாக மாற்றங்கள், தேசியக் கல்விமுறைக்கான ஏற்பாடுகள் என எல்லாமே சுதந்திரம் பெற்ற நாட்டுக்குரிய முற்போக்கான கல்விமுறையை ஏற்படுத்தும் நோக்கம் கொண்டவை. இப்போக்கிலான கல்விச்சீர்திருத்தங்கள் பெருமளவுக்கு காலனித்துவ கல்வி அம்சங்களை அகற்ற உதவின என்பது உண்மையே. சில விளைவுகளை இவ்விடத்துச் சுட்டிக்காட்டலாம். ஆங்கிலக் கல்விக்கு அக்காலத்திலிருந்த முதன்மை நிலை அகற்றப்பட்டு, சமூகவகுப்புவேறுபாடின்றி அனைத்துப்பிள்ளைகளும் தாய்மொழியில் கற்கும் நிலை ஏற்பட்டது. கொள்கையளவில் வசதி படைத்தவர்களுக்கே சிறந்த ஆங்கில இடைநிலைக் கல்வி மற்றும் உயர் கல்வி என்ற நிலை நீங்கி, இவ்வசதிகள் தாய்மொழியில் கற்றோருக்கும் வழங்கப்படலாயின. பல்கலைக்கழகங்களில் சமூக அறிவியல் (கலை) பாடங்கள் மேற்பட்ட நிலையிலும் தாய்மொழி வழியில் கற்பிக்கப்படலாயின. பல்கலைக்கழக புலமைப்பரிசில்கள் (மகாபொல) இதற்கு உதவின.

சுதந்திரக் காலத்தில் பல்கலைக்கழகங்களின் தொகை 15 ஆகவும் மாணவர்தொகை 1000 இலிருந்து (1942) 70,000 வரை உயர்ந்தது (2011).

குறைபாடுகளைக் கொண்ட காலனித்துவ கல்விமுறையின் பல அம்சங்கள் அகற்றப்பட்டாலும்,புதிய கல்வி ஏற்பாடுகள் புதிய கருத்துவேறுபாடுகளை ஏற்படுத்தின. சுதந்திரமடைந்த உற்சாகத்தில், "இந்நாட்டின் சமூக,பொருளாதார, கலாசார நிலைமைகளுக்குப் பொருத்தமான ஒரு தேசியக்கல்விமுறை" ஏற்படுத்தப்படல் வேண்டும் என்ற குறிக்கோளும் முன்வைக்கப்பட்டது. 1940களில் கன்னங்கரா நடைமுறைப்படுத்திய கிராமிய கல்விமுறை அத்தகையதொன்று. சமய பாடம் யாவருக்கும் கட்டாயமாக்கப்பட்டது. இலங்கைவரலாறு, உள்ளூர் நடனம், இசை என்பவற்றோடு உள்ளூர் தொழில் சார்ந்த பயிற்சி முதலியன கற்பிக்கப்படலாயின. இவற்றுடன் பிரதான சீர்திருத்தமான தாய்மொழிக்கல்வியும் ஒன்றிணைய, சுதந்திரத்துக்குப் பிற்பட்ட காலத்தில் இலங்கையின் கல்விமுறை "உள்ளூர் மயப்படுத்தலுக்கு" உள்ளாகிற்று.

இப்பின்புலத்தில் சுதந்திரத்துக்குப் பிற்பட்ட இலங்கையின் கல்வித்துறை சாதனைகளாகப் போற்றப்பட்ட இருவிடயங்கள் சகலருக்கும் தாய்மொழிக் கல்வி, தனியார் பாடசாலைமுறை நீக்கப்பட்டு அரசாங்க பாடசாலை முறையொன்று ஏற்படுத்தப்பட்டமை என்பனவாகும். இவை பெரியளவில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கல்விச் சீர்திருத்தங்களாகப் புகழப்பட்டவை. இதற்கான நியாயங்கள், நன்மைகள் எல்லாமே மிக விளக்கமாக முன்வைக்கப்பட்டன. இவை நடைமுறைப்படுத்தப்பட்ட காலங்களில் பெரிய எதிர்ப்புகளும் இருக்கவில்லை. தாய்மொழிக்கல்வியை அப்போது எதிர்ப்பாரில்லை. தனியார் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்ற போது (1960-1961) கிறிஸ்தவ சமயத்தவரின் எதிர்ப்பு இருந்தது. ஆனால் சில சமரசங்களின் பின்னர் எதிர்ப்பு வலுவிழந்தது. சில பாடசாலைகள் தனித்தியங்க அனுமதிக்கப்பட்டன. இவ்விரண்டு சீர்திருத்தங்களும் முடிந்தமுடிவாயின.

ஆயினும் கால ஓட்டத்தின் விளைவாக, இவ்விரண்டு பிரதான கல்விச்சீர்திருத்தங்களும் கருத்துவேறுபாடுகளுக்குள்ளாயின. தேசிய கல்விமுறை சர்வதேச போக்குகளின் செல்வாக்குக்கு உட்பட வேண்டியதாயிற்று. உலகமயமாக்கம் தேசியக்கல்விமுறையில் மேற்கண்ட சாதனைகளை முறியடிக்கத் தொடங்கியது. உலகளாவிய ரீதியில் கல்வி, ஆராய்ச்சி, வர்த்தகம் முதலாம் துறைகளில் ஆங்கிலம் முதன்மைத்தானத்தைப் பெறத் தொடங்கியது.

ஆங்கிலம் பேசாத ஐரோப்பிய நாடுகளிலும் ஜப்பான், தாய்லாந்து, சீனா, மலேசியா போன்ற நாடுகளிலும் ஆங்கிலத்தின் முக்கியத்துவம் உணரப்பட்டது. ஆங்கிலமொரு கட்டாயப்பாடமாக மட்டுமன்றி ஆங்கிலத்தை பயிற்று மொழியாகக் கொள்ளும் போக்குகளும் அதிகரித்தன. தாய்மொழியையே பயிற்றுமொழியாக்கப் பயன்படுத்திய மேற்கண்ட நாடுகளில் ஆங்கில வழியில் கற்பிக்கும் கல்வி நிலையங்கள் தோன்றலாயின.

தாய்மொழியைப் பயிற்றுமொழியாக்கிச் சாதனைபுரிந்த இலங்கையின் கல்விப்போக்குகளிலும் மாற்றங்கள் ஏற்படத்தொடங்கின. வெளிநாட்டவர் மட்டும் பயின்ற சர்வதேச பாடசாலைகளில் உள்ளூர் பிள்ளைகளும் ஆங்கில மொழிவழியில் பிரித்தானிய பரீட்சைகளுக்கு ஆயத்தம் செய்யப்பட்டன.

தனியார்துறையினர் கொழும்புக்கு அப்பால் உள்ள நகர்ப்புறங்களிலும் சர்வதேசப் பாடசாலைகளைத் தொடங்கின. ஆங்கில மொழிவழிக் கல்வியை விரும்பிய நடுத்தர, மேல் நடுத்தர வர்க்கத்தினரும் சர்வதேசப் பாடசாலைகளை நாடினர். தனியார் கல்வி, ஆங்கிலக் கல்வி என்பன தேசியக் கல்விக்கொள்கையுடன் முரண்பட்டு நின்ற போதிலும், தேசியவாதப் பாணியில் தீவிரப்போக்கைக் காட்டிய அரசாங்கமும் இப்போக்குகளை தடைசெய்ய முடியவில்லை.

இன்று ஒருவகையில் பழைய (காலனித்துவகால) கல்வி வரலாறு திரும்ப எழுகின்றது (history repeats itself) என்றும் கூறலாம். ஆங்கில வழிக்கல்வியும் தனியார்துறைப் பாடசாலைகளும் இன்று அதிகாரபூர்வமாகவே புத்துயிர்பெறுவதைக் காணமுடிகிறது. இன்னும் சற்று விரித்துக்கூறினால், ஆங்கில வழிக்கல்வியை சர்வதேச பாடசாலைகள் உயர்வகுப்பினரின் பிள்ளைகளுக்கு வழங்கும்போது அரசாங்கப்பாடசாலைப்பிள்ளைகள் என்னாவது? ஆங்கிலக்கல்வியினால் கிடைக்கும் வரப்பிரசாதங்கள் அரசாங்கப்பாடசாலை மாணவர்களுக்கு கிட்ட வேண்டுமென்று கருதிய அரசாங்கக் கொள்கை வகுப்பாளர்கள் "போதிய வளங்களைக் கொண்ட அரசாங்கப் பாடசாலைகள் ஆங்கில மொழியின் வழியில் கற்பிக்க" அனுமதி வழங்கியுள்ளனர். இதனால் இன்று இருமொழிகளிலும் மும்மொழிகளிலும் கல்வி வழங்கும் அரசாங்கப் பாடசா லைகள் சிலவற்றைக் காண முடிகின்றது. பாடநூல்கள் ஆங்கில மொழியில் அச்சிடப்படுகின்றன, பொதுப்பரீட்சைகள் மும்மொழிகளிலும் நடத்தப்படுகின்றன. ஆங்கிலமொழியில் கற்பிக்கவென ஆசிரியர்களும் திரட்டப்படுகின்றனர்.

மறுபுறம், 1960களில் பெரும்பாலும் ஒழிக்கப்பட்ட தனியார் பாடசாலைகள் இன்று சர்வதேச பாடசாலைகளாக உருவெடுத்து வருகின்றது. இவற்றை "ஒழுங்குபடுத்துவதற்கான ஏற்பாடுகள்" தேவை என்பதே அரசாங்கத்தின் கொள்கையாக உள்ளது. இவை வர்த்தக நிறுவனங்களாக தம்மை பதிவு செய்துகொண்டு கம்பனிகளாக இயங்குகின்றன. கல்வி அமைச்சுடன் எதுவித தொடர்பும் இல்லை; கல்வி அமைச்சின் மேற்பார்வையும் கட்டுப்பாடும் எதுவும் இல்லை. இப்பாடசாலைகள் வெளிநாட்டுப் பாடத்திட்டத்தையே கற்பிக்கின்றன. இலங்கைப் பல்கலைக்கழகங்களில் அனுமதிபெற இம்மாணவர்களுக்கு உரிமையில்லை.

இதே தனியார்மயக் கொள்கையை உயர் கல்வித்துறையில் வெளிப்படையாகவே காணமுடிகிறது. உயர்கல்விக்குப் பொறுப்பானவர்கள் "வெளிநாட்டு தனியார் பல்கலைக்கழகங்களைக் கொண்டு வந்தே தீருவோம்; அதற்கான சட்ட மூலம் விரைவில்" என்று பிரகடனம் செய்த வண்ணமே உள்ளனர். எவ்வாறேனும் ஏற்கனவே வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் முகவர்களாக பணியாற்றும் ஏராளமான உயர்கல்வி நிலையங்கள் நாட்டில் சரியான அரசாங்க மேற்பார்வையும் கண்காணிப்புமின்றி இயங்கி வருகின்றன. உயர்கல்வியின் மீது அர சாங்க பல்கலைக்கழகங்களுக்கு இருந்த ஏகபோக உரிமை இல்லாதொழிந்து கொண்டிருக்கிறது. மறுபுறம் கண்காணிப்பற்ற தனியார் உயர்கல்வி விரிவடைவது கல்வி ரீதியாகவும் சமூக ரீதியாகவும் ஆரோக்கியமானதல்ல என்ற வாதத்தில் உண்மையுண்டு.

மொத்தத்தில் சுதந்திர இலங்கையில் இருபெரும் கல்விச் சாதனைகள் (தாய்மொழிக் கல்வி, அரசாங்கப் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக முறைமை) இன்று பெரும் சவால்களை எதிர்நோக்கியுள்ளதை மறுக்க முடியாது. அக்கல்விச் சாதனைகளுக்கு எதிரான போக்குகள் தோன்றி இன்று வலுப்பெற்றும் வருகின்றன. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




All Models of Computer printer Ribbons
Electronic Typewriter Ribbons
Inkjet Cartridges, Inkjet Refills
Laser Printer Toners,
Digital Duplicating Inks, Black & Colour
Digital Stencil Master Rolls
Photocopy Papers, Roneo Papers
Toner for any copies
Computer Accessories & Papers
Fax Papers, Fax Ink Film Rolls & Cartridges
Paper, Board Packing Materials
All types of Office Stationery








RAINBOW STATIONERS (PVT) LTD.




# Rainbow Stationers (Pvt) Ltd.

IMPORTERS, DEALERS IN PAPER & STATIONERY
No. 18, Maliban Street, Colombo 11, Sri Lanka.
Voice : 2433906 (Hunting) 2433907, 2433908 Fax : +94 11 2433904
e-mail: rainbowst@sltnet.lk Website : www.rainbowsts.com

**Join the Largest Stationery House**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and published by Express Newspapers (Ceylon)(Pvt)Ltd,at No.185,Grandpass road,Colombo -14, Sri Lanka.